வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 28 | சுடர்: 28 | கதிர்: 208 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 8, சனி 22.06.2013


# குடாநாட்டு வர்த்தகர்களிடம் பொலிஸ் உதவியுடன் கப்பம்

## பாதிக்கப்பட்ட சிலர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ். குடாநாட்டு வர்த்தகர்கள் சிலரிடம் பொலிஸார் மூலம் சிலர் கப்பம்கோரினரா என்ற விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். வர்த்தகர்கள் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
இவ்வாறு கப்பம் கோருவோர் பற்றியும், அதற்கு உடந்தையாக பொலிஸார் இருந்தனரா என்பது பற்றியும் இரு வேறு கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று

தொடர்ச்சி: பக்கம் 21

# '13' குறித்து எதுவுமே பேசவில்லை இந்தியா

## பத்திரிகை ஆசிரியர்களிடம் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 22
இலங்கை – இந்திய உடன்படிக்கையை இலங்கை அரசு மீறுவதாக எழுப்பப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திட்டவட்டமாக நிராகரித்தார்.
அதேசமயம், 13 ஆவது திருத்த விவகாரம் குறித்து இந்தியா உத்தியோகபூர்வமாக எந்தத் தொடர்புகளையும் இலங்கையுடன் ஏற்



படுத்தவில்லை என்றும் தெரிவித்தார்.
பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் மின்னியல் ஊடகங்களின் பொறுப்பாளர்களுடன் நேற்றுக் காலை சந்திப்பொன்றை ஜனாதிபதி நடத்தினார். அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, சுசில் பிரேம ஜயந்த, கெஹலிய ரம்புக்

தொடர்ச்சி: பக்கம் 21

## ஒழுக்கக் கோவை மஹிந்தவுக்கே தேவை

கொழும்பு, ஜூன் 22
ஒழுக்கக் கோவை ஜனாதிபதிக்கும் அவரது சகாக்களுக்கும் தேவையே அன்றி நாட்டு மக்களுக்குத் தற்போது அது அவசியமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமவீர தெரிவித்தார்.
ராஜகிரியவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
நாட்டில் ஜனாதிபதி முதல் அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் வரை மக்களுக்கு அநீதி இழைக்கின்றனர். இதனைப் பல சம்பவங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.
இதனால் அரசு மக்களை வேறு திசைக்கு மாற்றப் பார்க்கிறது. இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டுக்கே ஆபத்து ஏற்படும். நாட்டில் குடும்ப ஆட்சியே நிலவுகின்றது. சிவில்நிர்வாகம் இல்லை. நாட்டை ஆளும் அரசு மக்களை திருத்த முன் தன் குடும்பத்தையும் திருத்த வேண்டும்" – என்றார். (த-ரி)


**இந்தியா**



பக். 06
இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி; எதிர்த்து அணிதிரளுமாறு வைகோ அறைகூவல்

**உலகம்**



பக். 07
பிரேஸிலில் போராட்டங்களைக் கட்டுப்படுத்த பொலி ஸார் முயன்று வருகின்றனர்

**விளையாட்டு**



பக். 23
வெட்கப்பட மாட்டோம் இலங்கையணித்தலைவர் மத்தியூஸ்


## அன்னை நாகபூஷணி தேருலா இன்று



யாழ்ப்பாணம், ஜூன் 22
நயினாதீவு அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும். காலை 4 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து அம்பாள் காலை 8 மணிக்குத் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.
இன்றைய திருவிழாவில் கலந்துகொள்ளும் அடியார்களின் போக்குவரத்துச் சேவைக்காக 45 படகுகள் சேவையில் ஈடுபடவுள்ளன.
நாளை பொஷன் பெருநாள் தினமாகவும் உள்ளதால் தென் பகுதியில் இருந்தும் யாத்திரிகர்கள் நயினாதீவுக்கு வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ-7)
(சிறப்பிதழ் உள்ளே 4 பக்கங்களில்)

## தெரிவுக் குழுவுக்கு அரச தரப்பில் 19 பேர்

### நேற்று அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜூன் 22
அரசமைப்புக்கு மாற்றங்களை முன்மொழிவதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான 19 அரச தரப்பு உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று வெளியிட்டார்.
தெரிவுக்குழுவுக்கான அரச தரப்பு உறுப்பினர்களுக்கு அமைச்சர் சிறிபால டி சில்வா தலைமை வகிப்பார். ஏனைய உறுப்பினர்களாக, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மைத்திரிபால சிறிசேன, டபிள்யு. டி.ஜே.செனவிரட்ண, அநுர பிரியதர்சன யாப்பா, டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரமே ஜயந்த, ஏ.எல்.எம். அதாவுல்லா, டி.ஈ.டபிள்யு குணசேகர, ரிஷாத் பதியுதீன், சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ, பஸில் ராஜபக்ஷ, லக்ஷ்மன் செனவிரட்ண, வாசுதேவ நாணயக்கார, முத்து சிவலிங்கம், சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் ஜானக பண்டார தென்னக்கோன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-ப)

## இலங்கைக்கு அழுத்தம் வழங்க பொதுநலவாயம் நல்ல வாய்ப்பு

### பிரிட்டன் தூதுவர் கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 22
பிரச்சினைகள் காணப்படும் விடயங்களில் தீர்க்கமான முன்னேற்றத்தைக் காண்பதற்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க தனக்கு வாய்ப்புக் கிடைக்குமென இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின் தெரிவித்துள்ளார்.
மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு என்ற விடயங்களில் தீர்க்கமான முன்னேற்றத்தை காணுமாறு இலங்கையிடம் வலியுறுத்துவதற்குப் பொதுநலவாய மாநாடு நல்ல வாய்ப்பாக அமையும் என்றும் அவர் கூறினார்.
பொதுநலவாயத்தின் விழுமியங்களான ஜனநாயகம், அபிவிருத்தி,மனித உரிமைகள்,நீதி,சட்டத்தின் ஆட்சி என்பவற்றின் மீதான அதன் உறுதிப்பாட்டை இலங்கை வெளிப்படுத்துமென பிரிட்டன் எதிர்பார்ப்பதாகவும் ஜோன் ரன்கின் மேலும் கூறினார். (த)

## முன்னாள் போராளி விடுதலை

கொழும்பு,ஜூன் 22
முப்படை மற்றும் பொலிஸார் மீது தாக்குதல்களை மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்த முன்னாள் விடுதலை புலிகளின் உறுப்பினர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
குறித்த சந்தேகநபரை வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி சுனந்த குமாரரத்நாயக்கா முன்னிலையில் நேற்று முற்படுத்திய போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.
யாழ்ப்பாணம், பருத்தித்துறையைச் சேர்ந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
சந்தேக நபர் தற்பொழுது கடும் நோய் வாய்பட்டுள்ளதோடு அவரது உடலின் ஒரு பகுதி இயங்காதுள்ளதாகவும் அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதனையடுத்து நீதிவான் சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். (த)

## வடக்கில் நிதி நெருக்கடியால் வர்த்தகர்கள் பெரும் பாதிப்பு

### 16 பேர் தற்கொலை

கொழும்பு, ஜூன் 21
வடமாகாணத்தில் தற்போது மேலெழுந்துள்ள நிதிப் பிரச்சினை சமூகம் சார்ந்த பிரச்சினையாக மாற்றம் பெற்று வருகின்றது. குறிப்பாக வணிகர்களிடையே பெரிய தாக்கத்தை இது ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண். குறிஞ்சிதரன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் வடபகுதி திறந்த பொருளாதாரச் சந்தையாக மாற்றமடைந்தது. கடந்த சில மாதங்களாக வடக்கு-கிழக்கில் கடன் சுமைகள் மற்றும் வர்த்தகப் பாதிப்பினால் 16 பேர் வரைதற்கொலைசெய்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
அத்துடன் பல வர்த்தகர்கள், பணம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர் எனப் பலதரப்பட்டோர் நிதி நெருக்கடிகள் காரணமாகத் தலைமறைவாகியுள்ளனர். இந்த நிலைமைகளால் குடும்பப் பிரச்சினைகள் ஏற்

தொடர்ச்சி: பக்கம் 21

## பொறுப்பற்ற விதத்தில் பொய்யுரைக்கும் அமைச்சர்

### மன்னார் ஆயர் சாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 22
ஊடக அமைச்சர் கெஹலிய றம்புக்வெல பொறுப்பற்ற விதத்தில் பொய்யுரைக்கக் கூடாது எனச் சாடியுள்ள மன்னார் ஆயர், தலைவர் பிரபாகரனுடன் தன்னை ஒப்பிட்டுப் பேசிய கருத்தை அவர் திரும்பப் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.
தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைப் போலவே மன்னார் ஆயர் வண இராயப்பு யோசப் ஆண்டகை செயற்படுகின்றார் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.
இந்த விடயம் தொடர்பாக மன்னார் ஆயரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

தொடர்ச்சி: பக்கம் 21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்தளை மனிதப் புதைகுழி : ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு



கொழும்பு,ஜூன் 22

மாத்தளை மனிதப் புதைக்குழி தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம், மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து மற்றும் நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்கொட ஆகியோரே குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் அடங்குகின்றனர். (த)

## புழல் சிறையில் இலங்கையரிடம் போதைப் பொருள்

சென்னை,ஜூன் 22

இந்தியாவின் தமிழ்நாடு மத்திய புழல் சிறையில் நடத்தப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையில் இரு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து போதைப் பொருள்கள் மீட்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கைது செய்யப்பட்டுப் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிவரூபன் எனப்படும் சுவாமிநாதன் மற்றும் ஜோசப் பெனாண்டோ ஆகிய இருவரிடம் இருந்தே போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சிவரூபனிடம் இருந்து ஹெரோயினும் ஜோசப்பிடம் இருந்து 23 பைக்கெட் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளதாக இந்தியப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (த)

## மாவட்ட செயலகத்தில் இயங்கும் திணைக்களங்களுக்கு தனி மின்மானி

யாழ்ப்பாணம்,ஜூன் 22

புதிய மின் கட்டண அதிகரிப்பின் பின்னர், யாழ்.மாவட்ட செயலகத்தில்இயங்கும்திணைக்களங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மின்மானிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் குறிப்பிட்ட ஒரு சில திணைக்களங்கள் தவிர ஏனைய திணைக்களங்களுக்கே இந்த மின்மானி பொருத்தப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இலங்கை அரசினால் புதிய மின் கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் பல்வேறு அமைச்சுக்களினது திணைக்களங்கள் இயங்கி வருகின்றன. சகல திணைக்களங்களுக்குமான மின்சாரச் செலவுகள் யாழ்.மாவட்ட செயலகத்தினாலேயே செலுத்தப்பட்டு வந்தது.

புதிய மின் கட்டண உயர்வைத் தொடர்ந்து ஒவ்வொரு அமைச்சினதும் திணைக்களங்களுக்கும் யாழ்.மாவட்டச் செயலகத்தில் தனித்தனி மின்மானிகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான மின்கட்டணங்களை அந்தந்தத் திணைக்களங்களே செலுத்த வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் திணைக்களங்கள் தவிர்ந்த ஏனைய திணைக்களங்களுக்கே இந்த மின்மானிகள் பொருத்தப்பட்டுள்ளன. இருப்பினும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் திணைக் களங்கள் தவிர்ந்த ஏனைய ஒரு சில அமைச்சுக்களின் திணைக்களங்களுக்கும் மின் மானிகள் பொருத்தப்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

> “ பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் திணைக்களங்கள் தவிர்ந்த ஏனைய திணைக்களங்களுக்கே இந்த மின் மானிகள் பொருத்தப்பட்டுள்ளன.

## ரஷ்ய உளவாளி கைது

கொழும்பு,ஜூன் 22

இலங்கையில் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தங்கியிருந்து வெளிநாடுகளுக்கு உளவுத் தகவல்களை வழங்கிய வெளிநாட்டு உளவாளி ஒருவர் மாவனல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை ஒரு ரஷ்யர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு இலங்கை பற்றிய உளவுத் தகவல்களை வழங்கித் தாம் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொண்டதாக விசாரணைகளின் போது கைது செய்யப்பட்ட சிக்கோச்சி சர்ஜே தெரிவித்துள்ளார். சந்தேக நபரின் மடிக்கணினியை அரச புலானய்வுப் பிரிவிடம் ஒப்படைத்ததாகக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## சிறந்த அரசன் கோத்தா

### மேர்வின் சில்வா புகழாரம்

கொழும்பு,ஜூன் 22

நாட்டைக் காப்பாற்றிய அரசனாகவும், ஜனாதிபதியின் கரங்களை வலுப்படுத்தும் ஒருவராகவும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாயவை தான் காண்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளரின் பிறந்த தினமான நேற்று முன்தினம் பில்லேவ பொஸமிது கோவிலில் நடத்திய விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (த)

## வடக்கு மக்கள் வாக்களிக்காவிடில் கெஹலியவே அதற்குப் பொறுப்பு

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 22

வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் வாக்களிக்காமல் விடச் சிந்திப்பார்களாயின் அதற்குரிய முழுப் பொறுப்பையும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்ட பின்னர் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் மக்களை வாக்களிக்கக் கூடாது என நான் தெரிவித்ததாக சிங்கள ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியதற்கு அமைச்சர் கெஹலிய, வடக்கு மக்களின் அரசியல், ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் வகையில் அன்று பிரபாகரன் செயற்பட்டார். அன்று பிரபாகரன் செயற்பட்டதைப் போன்றுதான் மன்னார் ஆயர் செயற்படுகின்றார்.



அவர் இப்படிச் செய்தார் பிரபாகரனுக்கும் அவருக்கும் வித்தியாசமில்லை என்று தெரிவித்திருக்கின்றார். உண்மையில் இவர்கள்தான் எங்கள் மக்கள் மனதில் இவ்வாறான சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றனர்.

அவ்வாறு வடமாகாண சபைத் தேர்தலில் எம்மக்கள் வாக்களிக்காமல் விட்டால் அதற்கு கெஹகலியதான் முழுப் பொறுப்பு.

1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பகிஷ்கரிக்கச் சொன்ன போது நான் சகல மக்களையும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துமாறு கோரிய கடிதம் ஆலயங்களில் திருப்பலியின்போது வாசிக்கப்பட்டது.

இதேபோன்றுதான் 2001 ஆம் ஆண்டும் செய்தேன். இவ்வாறிருக்கையில் நான் எவ்வாறு மக்களைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கச் சொல்வேன்-என்றார். (த-5)

## அம்பாந்தோட்டைக்கு அருகே விரைவில் செயற்கைத் தீவு

கொழும்பு,ஜூன் 22

இலங்கையில் முதல் முறையாகப் பொழுதுபோக்குக் கெனச் செயற்கையான குட்டித்தீவு ஒன்று உருவாக்கப்படவுள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு அருகிலேயே இந்தக் குட்டித்தீவு உருவாக்கப் படவுள்ளது.

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பொறியாளர்களின் வழிகாட்டிலில் இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான சாத்திய ஆய்வுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் அரசின் அனுமதிக்காக காத்திருப்பதாக, இலங்கைத் துறைமுக அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறைந்தது 5 ஏக்கரில் இந்தக் குட்டித் தீவை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் அடுத்த கட்ட விரிவாக்கப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.சீனாவின் எக்சிம் வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்தைச் சீனாவின் துறை முக பொறியியல் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது.

இதன்போது, சுமார் 40 ஆயிரம் கியூபிக் மீற்றர் மண் அகழப்படும். இந்த மண் குட்டித் தீவை உருவாக்கப் பயன்படுத்தப்படவுள்ளது.

குட்டித்தீவை உருவாக்கும் பணிகள் முடிவடைந்த பின்னர் அது, பொழுதுபோக்கு வசதிகளைச் செய்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்படவுள்ளது. (த)

## வாடகைக்கு அமர்த்தப்பட்ட 5 வாகனங்கள் யாழில் மீட்பு

கொழும்பு,ஜூன் 22

நுகேகொடைப் பகுதியில் வைத்து சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் வாடகைக்கு அமர்த்தப்பட்ட நான்கு கார்கள் மற்றும் 'கப்' ரக வாகனமொன்று யாழ்ப்பாணத்தில் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வாடகைக்கு அமர்த்தப்பட்டு அடகு வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் நுகேகொடைக் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த வாகனங்களின் பெறுமதி இர[illegible] என்றும் அப்பி[illegible] (த)

## 4.1 செக்கன்களுக்கு ஒருவர் அகதியாகிறார்

### அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் அறிக்கை

நியூயோர்க்,ஜூன் 22

2012 ஆம் ஆண்டு 4.1 செக்கன்களுக்கு ஒருவர் தனது வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டுள்ளனர் என்று அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

உலகின் அகதிகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அந்த அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2012 ஆம் ஆண்டு 1.1 மில்லியன் மக்கள் சர்வதேச எல்லையைத் தாண்டி ஓடியுள்ளனர். 6.5 மில்லியன் மக்கள் தமது நாட்டினுள்ளே இடம்பெயர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

2012 ஆம் ஆண்டு மொத்தமாக 45.2 மில்லியன் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அந்த ஆண்டு உள்நாட்டில் மட்டும் 28.8 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 15.4 மில்லியன் பேர் நாட்டு எல்லையைத் தாண்டிய இடம்பெயர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

அதுமட்டுமன்றி 2012 ஆம் ஆண்டு 93,700 பேர் புகலிடக் கோரிக்கையாளர்களாகக் காணப்பட்டனர். இடம்பெயர்வுக்குப் பிரதான காரணமாகப் போரே உள்ளது. இடப்பெயர்ந்தோரில் 55 சதவீதமானோர் ஆப்கானிஸ்தான், சோமாலியா, ஈராக், சூடான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

கூடுதலான புகலிடக் கோரிக்கையாளர்களைத் தோற்றுவித்த நாடாக ஆப்கானிஸ்தான் காணப்பட்டது. அகதிகள் நால்வரில் ஒருவர் ஆப்கானிஸ் பிரஜையாக உள்ளனர் என்றுள்ளது. (த)

## நற்கருணை சிற்றாலய திறப்பு விழா

குருநகர்,ஜூன் 22

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நற்கருணைச் சிற்றாலயம் இன்று சனிக்கிழமை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்படவுள்ளது.

நற்கருணைச் சிற்றாலயம் ஆலயப் பங்குத்தந்தையின் வழிகாட்டலில் அருட்பணிச் சபையினதும் பங்கு மக்களினதும் அயராத உழைப்பாலும், உதவியினாலும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

சிற்றாலயத் திறப்பு விழாவின் முன் ஆயத்த நிகழ்வாக மூன்று தினங்கள் மாலை 5 மணியளவில் நற்கருணை ஆராதனை இடம்பெற்றன. இறுதி நாளான இன்று மாலை 4.30 மணியளவில் செபமாலையுடன் திறப்பு விழா ஆராதனை ஆரம்பமாகும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.செயலகத்தில் விருந்துபசாரம் வழங்கிய குளிர்பானத்தில் பூஞ்சணம்




யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வின்போது விநியோகிக்கப்பட்ட குளிர்பான போத்தலில் பூஞ்சணம் படர்ந்திருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை விருந்துபசார நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது யாழ்.மாவட்ட செயலக சிற்றுண்டிச் சாலையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 'பெப்ஸி' குளிர்பான போத்தல் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது.

அப்போது ஒரு சில போத்தல்களினுள் 'பூஞ்சணம்' படர்ந்திருப்பது அதிகாரிகளால் அவதானிக்கப்பட்டது. இதன் பின்னர் ஒரு வரும் குளிர்பானம் குடிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு பல்வேறு தேவைகளுக்காகவும் வருகைதரும் பொதுமக்களும் மாவட்டச் செயலகச் சிற்றூண்டிச்சாலையே பயன்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு பலர் பயன்படுத்தும் சிற்றுண்டிச்சாலை மட்டும் சுகாதாரப் பகுதியினரிடமிருந்து தப்பித்து இருப்பது எவ்வாறு என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஒ-5)

# வழங்கப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு பொலிஸார் இடையூறு

## மன்னார் பிரதேச செயலரிடம் கடிதம் கையளிப்பு

மன்னார், ஜூன் 22

பிரதேச செயலரால் வழங்கப்பட்ட அரச காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு பொலிஸார் அனுமதி வழங்காமை தொடர்பாக மன்னார் பிரதேச செயலருக்குக் கடிதம் ஒன்று கையளிக்கப்படவுள்ளதாக மன்னார் அல்-அஸ்ஹர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார். உப்புக்குளம் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கோந்தைப்பிட்டி கோட்டைக்கு பின்புறம் அமைந்துள்ள அரச காணிகள் பிரதேச செயலரினால் வழங்கப்பட்ட நிலையில் குறித்த காணிகளில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள தற்போது பொலிஸார் அனுமதி மறுத்து வருவதாகவும் இது குறித்து கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் பிரதேச செயலாளர் எஸ்.தயானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மட்டுப்படுத்தப்பட்ட மன்னார் அல்-அஸ்ஹர் மீனவர் கூட்டுறவுச்சங்கத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

உப்புக்குளம் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கோந்தைப்பிட்டி கோட்டைக்குப் பின்புறம் அமைந்துள்ள அரச காணிகள் பிரதேச செயலரால் வழங்கப்பட்ட நிலையில் குறித்த காணிகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்குத் தற்போது பொலிஸார் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இவர்களின் இச்செயற்பாடு ஏனென எமக்குப் புரியவில்லை. ஏற்கனவே இப்பகுதியில் 13 குடும்பங்களும், பள்ளிவாசல் மற்றும் மீன்வாடிகளும் உள்ளன. குறித்த பகுதியில் அரச உதவித்திட்டத்துடன் மூன்று வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் வசிக்கும் ஏனைய மக்கள் தங்களால் அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகளில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் இந்த மக்கள் இடம் பெயர்ந்து தற்போது மீள் குடியமர்ந்த நிலையில் இவர்களின் இருப்பிடம் தற்போது கேள்விக்குறியான நிலையில் உள்ளது. இதனால் மீள்குடியமர விரும்பும் ஏனைய மக்களும் மீள் குடியமர மறுக்கின்றனர்.

எனவே இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வினை வழங்குவதோடு தொடர்ந்தும் இந்த மக்கள் தமக்குரிய காணிகளில் அடிப்படை வசதிகளைப் பெற்று தமது குடியமர்வை மேற்கொள்வதற்கான உரிமை வழங்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்வதாக மன்னார் பிரதேச செயலர் எஸ்.தயானந்தாவிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

> “ ஏற்கனவே இப்பகுதியில் 13 குடும்பங்களும், பள்ளிவாசல் மற்றும் மீன்வாடிகளும் உள்ளன. குறித்த பகுதியில் அரச உதவித் திட்டத்துடன் மூன்று வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த கடிதத்தின் பிரதி, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஸாத் பதியுதீனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## சனி-வியாழன் வரையான மின் தடை

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 .30 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, பண்ணைப் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாஷையூர், நாவற்குழி சந்தியிலிருந்து கேரதீவு வீதி வரையான பிரதேசம், நாவற்குழி, தனங்கிழப்பு, மறவன்புலோ, தச்சன்தோப்பு, அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம், ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், பரமேஸ்வரா வீதி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, குருநகர், யாழ்ப் பட்டணப் பகுதி ஆகிய இடங்களிலும்-

25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சு வேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

26 ஆம் திகதி புதன்கிழமை குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில் ஆகிய இடங்களிலும்-

27 ஆம் திகதி வியாழக்கிழமை, நவிண்டில் தமோதரம் வித்தியாலயத்திலிருந்து இரும்பு மதவடி வரையான பிரதேசம் ஆகிய இடங்க ளிலும்-

மற்றும் 22 ஆம் திகதி சனிக்கிழமையிலிருந்து 26.06.2013 புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந)

# காங்கேசன் சிமெந்து ஆலையை மீளச் செயற்படுத்த முடியாத நிலை

## சுண்ணக்கல் அகழ்வே காரணமாம்

கிளிநொச்சி, ஜூன் 22

வலி.வடக்கில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சுண்ணக்கல் அகழ்வுகள் இடம்பெறுவதனால் காங்கேசன்துறை தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் நெருக்கடியான நிலைமை காணப்படுவதாக கனிய வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுற்றாடல்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் சகல மாவட்ட செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

மண் மற்றும் மணல் அகழ்வு, கல் அகழ்வு ஆகியவற்றுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள அனுமதிகளை ரத்துச் செய்து புதிய நடைமுறைகளின் கீழ் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தக் கலந்துரையாடலில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அங்கு தெரிவித்தார்.

> “ குழாய்க் கிணறு அமைப்பதை தடை செய்ய வேண்டும் என் றும் இதனால் நிலத்தடி நீர் மாசடைவதுடன் நிலத்தடி நீரின் நீரோட்டம் குறைவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

குழாய்க் கிணறு அமைப்பதை தடை செய்ய வேண்டும் என்றும் இதனால் நிலத்தடி நீர் மாசடைவதுடன் நிலத்தடி நீரின் நீரோட்டம் குறைவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

குழாய்க் கிணறு அமைப்பதை தடை செய்ய முடியாது. அதற்கான அனுமதிகளை வழங்கும் போது பிரதேச சபைகள் கவனமெடுக்க வேண்டும். எதிர்காலத்தில் குழாய்க்கிணறு அமைப்பதை தடை செய்யும் வகையில் அமைச்சரவையில் சட்ட வரைவு சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இங்கு கருத்துரைத்த கனிய வளத் திணைக்களத்தினர், வலி. வடக்கில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சுண்ணக்கல் அகழ்வு இடம் பெறுகின்றது. இதனைத் தடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார். (த-5)

## இளைஞருக்கு கத்திக் குத்து இருவருக்கு விளக்கமறியல்

மன்னார், ஜூன் 22

மூளாயில் இளைஞர் ஒருவரைக் கத்தியால் குத்தி படுகாய மேற்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த புஸ்பராசா வினோதன் என்பவரே கத்திக்குத்துக்கு இலக்கானார்.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அராலி மேற்கைச் சேர்ந்த 23 வயதுடைய இரண்டுபேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் சட்டநாதர் சிவன் கோயிலடியை அண்மித்து இடம்பெற்ற இசைக்கச்சேரியில் கோஷ்டி மோதல் காரணமாக 19 வயது இளைஞர் ஒருவரது வலது கை மணிக்கட்டுடன் வாளால் வெட்டப்பட்டு துண்டாடப்பட்டது. இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-4)

# 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளை திருமணம் செய்வோருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

16 வயதுக்குட்பட்ட சிறுமிகளை யாராவது திருமணம் செய்ய முற்பட்டாலோ அல்லது அந்த நோக்கில் 16 வயதுக்குட்பட்டவர்களை அழைத் துச் சென்றாலோ அவர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்படுவர் என்று யாழ். பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி டபிள்யு.வசுந்தரா தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

16 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அனைவரும் சட்டத்தின்படி சிறுமிகள் என்றே கணிக்கப் படுகின்றனர். அத்தகைய சிறு மிகள் விரும்பினாலும் , விரும் பாவிடினும் பெற்றோர்களது விருப்பத்தின் பேரிலோ எந்தக் காரணம் கொண்டும் அவர் களைத் திருமணம் செய்ய முடியாது.

அதனை மீறி யாராவது அத்தகைய சிறுமிகளைத் திருமணம் செய்தாலோ அல்லது அழைத்துச் சென்றாலோ எந்தக் கோரிக்கையும் கவனத்தில் கொள்ளப்படாது கைது செய்யப்படுவர். கைது செய்து நீதிமன்றினூடாக விளக்க மறியலில் வைக்கப்படுவர். சம்பவத்தைப் பொறுத்து, திருமணம் செய்யச் செல்லும் சிறுமிகள் நன்னடத்தை இல்லத்தில் தடுத்து வைத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்படும். எனவே சிறாராயினும் பெற்றோராயினும் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். கடந்த ஜனவரி தொடக்கம் இந்த மாதம் வரை 11 [illegible] இடம்பெற்றுள்ளன.



கடந்த வாரம் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுப் பெண் இவ்வாறு திருமணம் செய்யும் நோக்கில் சென்றுள்ளார். அவரைத் திருமணம் செய்ய முற்பட்டவர் மல்லாகம் நீதிமன்றினூடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்- என்றார். (வ-4)

## பூரண சந்திர கலை விழா

மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மடு கல்வி வலயத்தின் பூரணச் சந்திரக் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு மடுக்கோவில் பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குறூஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோடி விவசாயிகள் 40 பேருக்கு மானிய நிதி உதவி

## வேலணை பிரதேச செயலர் பிரிவில்



யாழ்ப்பாணம், ஜூன் 22

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் திவிநெகும வாழ் வெழுச்சித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 40 பேருக்கு மானிய அடிப்படையில் நிதி உதவி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை வேலணை கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்றது. வேலணை கமநல சேவைகள் நிலைய குழுத் தலைவர் பா.தனபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேலணை பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா திசைநாயகம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான மானியக் கொடுப்பனவுகளை வழங்கினார்.

சிறுதானியப் பயிர்கள் உற்பத்தி, தேனீ வளர்ப்பு, பசுமாடுகள் கொள்வனவு, கச்சான் உற்பத்தி போன்றவற்றுக்கென நிதி உதவி வழங்கப்பட்டது. முன்னோடி விவசாயிகளாகத் தெரிவான 40 பயனாளிகளுக்கு ரூபா 76 ஆயிரம் வரை மானிய உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விவசாய போதனாசிரியர் எஸ்.குலதுங்கம், கே.இமைநாதன் உட்பட ஊர்காவற்றுறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், புங்குடுதீவு கமநல சேவைகள் நிலைய போதனாசிரியர், தெரிவு செய்யப்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டனர்.

(வ-7)

## பனம் உற்பத்திப் பொருள்களை

# கிராமிய மட்டத்தினூடாக விஸ்தரிக்க நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். குடாநாட்டில் பனம் உற் பத்திப் பொருள்களை கிராமிய மட்டம் ஊடாக மேலும் விஸ் தரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனம் உற்பத்திப் பொருள்களில் இருந்து பெறப்படும் உற்பத்திப் பொருள்களை விரைவாக பெறுவதற்கு தொழில் நுட்ப வசதிகள் கையாளப்பட்டுள்ளன.

இதற்கென ஒவ்வொரு அமைப்புக்களுக்கும் நவீன இயந்திர சாதனங்களை பெற்றுக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக ஐம்பது நவீன இயந்திர சாதனங்கள் பெறப்பட்டு குறித்த அமைப்புக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த இயந்திரங்கள் மூலம் பனம் பொருளில் இருந்து இலகுவாக பனங்கழி பெறப்பட்டு அதைக் கொண்டு பல் வேறு வகையான பனம் உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர் காலத்தில் நவீன தொழில் நுட்பத்துக்கு அமைவாக இயந்திர சாதனங்கள் ஊடாக சகல பனம் பொருகளைத் தயாரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கிராமிய மட்டங்களில் பனை சார்ந்த ஒவ்வொரு அமைப்புக்கள் ஊடாக பனம் பொருளில் இருந்து பனம்பொருள் உற்பத்தியை மேலும் விஸ்தரிக்கவும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

(வ-17)

# இன்று தேரேறி வருகிறாள் அன்னை

பல்வளங்களும் ஒருங்கே அமையப் பெற்றது நயினாதீவு என்னும் இனிய திருப்பதியாகும். நற்றவ வானிலும் நனி சிறந்த இந்தத் திருப்பதியில் வரலாற்றுச் சிறப்பும் மிகப் பழைமையும் வாய்ந்ததுமான அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள். அன்னை நாகபூஷணி தன்னை நாடிவரும் அடியார்களின் துன்ப துயரங்களைத் தனது அருட்கடாட்சத்தால் நீக்கி நல்லருள் வழங்கி வருகின்றாள். அடியார்கள் அம்பிகையின் மீது அளவற்ற பக்தி கொண்டு பெருந்திரளாக உற்சவ காலங்களில் நயினையம் பதியில் கூடுவது வழமை. வருடந்தோறும் நடைபெறுகின்ற உற்சவத்தில் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் பங்கு கொண்டு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றார்கள்.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட நாகவழிபாட்டை எடுத்துக் காட்டும் சின்னமாக இந்த ஆலயம் திகழ்கின்றது. சாந்தியும், அருளும், அனுக்கிரகமும், நிறைந்த அற்புத நாயகியாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் விளங்குகிறாள். அனுபூதியாளர்கள் அம்பாளை இதயத்தில் இருத்தி தினமும் பூசித்து வருவதனால் ஆன்ம பலம் பெறுகின்றார்கள். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மூல விக்கிரகம் பூர்வீகமான பழைமை மிகு மகிமைச் சிறப்பைக் கொண்டது என்பது அடியார்களின் நம்பிக்கை. மன ஒடுக்கமும், சோதியான ஒளிப் பிரகாசமும் நல்கி, அருளோடு அனுபூதியையும் ஆன்ம கோடிகளுக்கு அருளவல்ல தனித்துவத் தன்மை பொருந்தியது. தேவ, வேதாந்த, ஆகம விற்பன்னர்களை உருவாக்கியதும் கற்றவர்க்கு இனிமை தரும் கருத்துருவாகவும் விளங்குவது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மூலமூர்த்தி. இந்த மூல மூர்த்தியின் அமைப்பும், அதிசயமும், அற்புதமும் உலகிலே வேறெந்தத் திருத்தலத்துக்கும் இல்லை என்பது பேருண்மையாகும்.

அம்பாள் திருத்தேரேறி வருகின்ற காட்சி தேவலோகக் காட்சியை ஒத்தது. அந்தக் காட்சியைக் காணக் கண்கள் கோடி வேண்டும். பதினோராம் திருவிழாவன்று நடை பெறும் கருடபூசையின் போது அனலை தீவு நாகதம்பிரான் கோயில் பக்கமாக ஆகாயத்தில் வட்டமிடும் கருடனைக் காணும் பக்தர்களது மெய்ப்பாடு மிகவும் உணர்ச்சி பூர்வமானது. இம்முறை கடந்த புதன்கிழமை நடைபெற்ற கருட பூசையின் போதும் கருடப்பறவை ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த காட்சியை அடியார்கள் நேரில் பார்வையிட்டு அம்பாளின் அருளமுதைப் பெற்றுக் கொண்டனர். அம்பாளின் எத்தனையோ அற்புதக் காட்சிகளில் வாயுபட்சண நாகபூசையும், கருடபூசையும் மெய்சிலிர்க்க வைப்பவை. விவரிக்க முடியாதவை. ஆனந்தக் கண்ணீர் சொரிய வைப்பவை. இன்று சனிக்கிழமை அம்பாள் திருத்தேரேறி வீதியுலா வரும் காட்சியை நேரில் கண்டு அன்னை ஸ்ரீநாக பூஷணியின் அருட்கடாட்சம் பெற அலையலையாகப் பக்தர் கூட்டம் நயினையில் திரண்டுள்ளது.



எழுந்தருளி அம்மனின் அருட்காட்சி

தலைசிறந்த சிற்பாசிரியர்களைக் கொண்டு சிற்ப வேலைப்பாடுகளுடன் நிர்மாணிக்கப்பட்டதுதான் அம்பிகையின் சித்திரத்தேர், அம்பிகையை நாகம் ஒன்று பூசித்தமை, போர்த்துக்கேயர் இவ் ஆலயத்தை அழித்தமை, தேர்கள் தானாகவே உருண்டு கடலுள் அமிழ்ந்தமை, போர்த்துக்கேயர் ஆலயத்தை அழித்தபோது சைவ நன்மக்கள் அம்பாளை ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தமை போன்ற இன்னோரன்ன காட்சிகள் திருத்தேரில் செதுக் கப்பட்டுள்ளன. இந்த அருட்காட்சிகள் அடியார்களின் மனதைவிட்டு நீங்காத அற்புதக் காட்சிகளாகும். நயினையில் இந்திரலோகம் எனக் கூறக்கூடிய வகையில் அன்னை யின் ஆலயம் அழகுற, சிறப்புற அமைந்துள்ளது.

தேரில் வடம் பிடித்தால் அம்பாளின் பாதக் கமலங்களில் இடம்பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் உண்டு. இந்த நம்பிக்கையினால் அடியார்கள் அம்பாளின் திருத்தேர் இழுத்து வீதிவலம் வருகின்ற காட்சியைக் காண மெய்சிலிர்க்கும், மனம் கசிந்துருகும். இன்று அன் னையின் அந்த அருட்காட்சியைக் கண்டு கசிந்துருகி கைகூப்பி வணங்கிடுவோம்.

■ குமாரன்

# திண்மக் கழிவு குறித்த முகாமைத்துவ போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 22

உள்ளூராட்சி மாகாண சபை கள் அமைச்சின் தேசிய திண் மக் கழிவு முகாமைத்துவப் பிரிவினர் உள்ளூராட்சி நிறு வனங்களால் மேற்கொள்ளப் பட்டு வரும் திண்மக் கழிவு தொடர்பான முகாமைத்துவ போட்டியை நடத்தவுள்ளனர்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் முறையான திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டத்தை நிரந்தரமாகச் செயற்படுத்தி வரும் உள்ளூராட்சி நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் ஆரம்ப நடவடிக்கையாக தேசிய மட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவப் போட்டியை இந்தவருடம் நடத்தவுள்ளதாக தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எல்.மங்கலிக்கா அறிவித்துள்ளார்.

(வ-9)


## ஷஷ்டி யப்த பூர்த்தி விழா



பிரம்மஸ்ரீ யோ.நாகராஜசர்மா மல்லிகாதேவி

தம்பதிகள் இன்று சனிக்கிழமை (22.06.2013) ஷஷ்டி யப்த பூர்த்தி காணும் இத்தருணத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

துன்னாலை மத்தி, கரவெட்டி.

சுபமஸ்து

குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நாவலர் வீதி, அன்ன சத்திர லேனில் 7 அறையுடன் கூடிய புதிய மாடி வீடு வாகன தரிப்பிடத்துடன் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

0770474116, 0770476299

(38595) (10,7,16)

## Security வேலையாள்கள் தேவை

பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன

J.S.O, A.S.O, S.O. இப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இருப்பதனால் இருபாலார்களிடமும் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே நீங்கள் எங்கள் அலுவலக நேரம் காலை 10 மணியில் இருந்து பி.ப. 5 மணிவரையுள்ள நேரத்தில் சமூகம் தரவும். அலுவலகத்திற்கு வரும் போது உங்கள் தேசிய அடையாள அட்டை பிரதி மற்றும் குடும்ப பதிவு பிரதி என்பவற்றுடன் சமூகம் தரவும்.

குறிப்பு: யாழ்ப்பாணம், நிலாவரை, சுன்னாகம், மருதனார்மடம், கோப்பாய், நல்லூர் ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Head Office
125B, K.K.S. Road, Kokuvil junction,
Kokuvil, Jaffna, Srilanka. (38594)

Mobil:- 0778919367, 0217200170, 0777928681

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் வயதுடைய Parvo Vaccine ஏற்றப்பட்ட Doberman நாய்க்குட்டிகளும் 6 மாத வயதுடைய Labrador ஆண் நாய்க்குட்டியும் 1 ½ வயதுடைய Rottweiller ஆண் நாயும் விற்பனைக்குண்டு. German Shepherd ஆண் நாய் தேவை.

தொடர்புகளுக்கு: 0778185543

(37616) (10,7,16)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு அம்மன் வீதி யில் 2 பரப்பு 12 ¼ குளி காணியும் சிறு கட்டடமும் கொண்ட ஆதனம் விற்பனைக்கு உண்டு.

நேரடித் தொடர்புக்கு:

0776288718, 0773662263

(38593) (10,7,16)

## கார் விற்பனைக்கு

HG xxxx தொடரிலக்கமுடைய Hyundai Accent கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 3747825, 021 2228984

2 மணிக்கு பின்னர் பார்வையிடலாம்

(38585) (10,7,16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறைச்சேரி வெளி கிராம மக்களின் காணிகளை மீட்டுத் தரவும்

## அரசுக்கு சுபியான் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

23 வருடங்கள் கடந்தும் தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர முடியாத நிலையில் உள்ள யாழ்ப்பாணம் பறைச்சேரி வெளிக் கிராம மக்களது காணிகளை மீட்டுத்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி வி.எ.எஸ்.சுபியான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பறைச்சேரி வெளியில் குடியமர்ந்திருந்த குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளை விட்டு கடந்த 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வைச் சந்தித்தனர்.

எனினும் போர்ச் சூழலின் பின்னர் கண்ணிவெடி அகற்றும் பணிகளின் போது காணிகளின் வெட்டப்பட்டு மிதிவெடிகள் அகற்றப்பட்டன. இதன் காரணமாக வெட்டப்பட்ட மண் அடையாளங்கள் பரந்து காணப்படுவதால் காணிகளின் எல்லைகள் மறைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்போது இந்தப் பகுதி மக்களது காணிகளின் எல்லைகள் இனங்காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காணி உரிமையாளர்களது காணி உறுதிகள் தவற விடப்பட்டுள்ளதால் தனிப்பட்ட நபர்களால் தமது காணி எல்லைகளை தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த பிரதேச மக்கள் சொந்தக் காணிகள் இருந்தும் வாடகை வீடுகளிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியிருக்க வேண்டியுள்ளது. காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் பாதிப்படைந்துள்ள குடும்பங்கள் மேலும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும்.

இது தொடர்பில் அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது பறைச்சேரிப் பகுதியில் குடியிருந்த 42 குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையில் இருந்தன.**

எனவே குறித்த காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதேவேளை யாழ்ப்பாணம் பறைச்சேரி வெளியில் மிதிவெடி அகற்றும் பணிகளின் போது காணிகள் வெட்டப்பட்டதால் அந்தப் பகுதிக் காணிகளின் எல்லைகள் இனங்காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற காணிப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலின் போது தெரிவித்திருந்தார்.

1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது பறைச்சேரிப் வெளியில் குடியிருந்த 42 குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையில் இருந்தன. 1969 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாவாந்துறை வட்க்கு சோனக தெருவைச் சேர்ந்த 42 முஸ்லிம் குடும்பங்களுக்கு தலா 3 பரப்பு வீதம் குடியேற்றத்திட்டத்தில் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் இடப்பெயர்வின் பின்னர் தமக்கான சொந்தக் காணிகள் இருந்தும் தற்போதும் வேற்றுக் காணிகளில் குடியமர்ந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-14)

## திருஞான சம்பந்தர் ஆதீன புதிய மடாலய திறப்பு நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 22

லண்டன் வாழ் மக்களது நிதியுதவியால் கட்டப்பட்ட நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன புதிய மடாலயத் திறப்பு விழா நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் புதிய கட்டடத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகின. அகில இலங்கை இந்து மாமன்றம் கட்டட நிர்மாணப் பணிகளின் மேற்பார்வையை மேற்கொண்டது. சைவப் பெரியார் புத்தூர் மழவராயர் அறக்கட்டளையால் ஆதீனத்துக்கு வழங்கப்பட்ட காணியில் இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. (வ-7-14)

### காலாவதியான பொருள்கள் இருந்ததால்


## மறு அறிவித்தல் வரை மூடப்பட்ட இரு கடைகள்

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த இரு வர்த்தக நிலையங்கள் மறு அறிவித்தல் வரை மூடுமாறு யாழ். நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது. திருநெல்வேலி பொது சுகாதாரப் பிரிவினரால் அந்தப் பகுதியில் உள்ள இரு கடைகளில் காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்ததாக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த இரு வர்த்தக நிலையங்கள் மீதும் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் முழுமையாக பரிசோதனைகள் நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யும் வரை அவற்றை மூடி வைக்குமாறு உத்தரவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வடக்கின் வசந்தத்தின் கீழ் மின்சாரம் வழங்க நடவடிக்கை

### இதுவரை கிடைக்காத கிராமங்களுக்கு



தென்மராட்சி, ஜூன் 22

இதுவரை மின்சாரம் பெறாத கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ச.ஞானலிங்கத்தின் வேண்டுகோளுக்கேற்ப சரசாலையில் இரு வீதிகளுக்கும் அல்லாரையில் இரு வீதிகளுக்கும் முதன் முறையாக மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை மின்சார விநியோகம் இல்லாத பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (வ-9)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக 9 ஆவது நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வில் கழகத்தின் நலநோன்புத் திட்டங்களை சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1, மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ ஆரம்பித்து முன்பள்ளிக்கான உபகரணங்கள் மற்றும் தென்னம்பிள்ளைகள் வழங்குகிறார். (வ-9)

## இரு பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு நெடுந்தீவில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஐயாயிரம் பாடசாலைத் திட்டத்தில் தீவகத்தில் நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம், மங்கையர்க்கரசி வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோன் குயின்ரஸ் திறந்து வைத்தார்.

19 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு விரைவில் மீளத் திறக்கப்படும் எனவும் வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ-7)

# சுண்டிக்குளத்தில் சட்டவிரோத மீன்பிடியில் தெற்கு மீனவர்கள்

## மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.கிளை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 22

வெற்றிலைக்கேணி- ஆனையிறவை அண்டிய சுண்டிக்குளம் பிரதேசத்தில் தென்னிலங்கை மீனவர்கள் மேற்கொண்டு வரும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளை நடவடிக்கை எடுத்துள்ளதாக இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

சுண்டிக்குளம் பகுதி மீனவர்கள் மீன்பிடி நடிவடிக்கை யில் ஈடுபடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட குறித்த கடல் பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் சிலருக்கு கடல் அட்டை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மேலதிகமாக பல நிறுவனங்கள் கடல் அட்டை பிடிப்பதும், சட்ட விரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. இந்த விடயங்கள் தொடர்ச்சியாக ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டு வந்தன.

இதனை அடிப்படையாகக் கொண்டே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளை நடவடிக்கை எடுத்திருப்பதாக இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இதற்கமைய நேற்று முன்தினம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், வடமராட்சி கிழக்கு கடல் தொழில் பரிசோதகர் மற்றும் ஒரு சில மீனவ சங்கங்கள், பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சுண்டிக்குளம் பகுதியில் தென்னிலங்கை மீனவர்களின் மீன்பிடி தொடர்பில் வடமராட்சி கிழக்கிலுள்ள சங்கங்களை ... மற்றும் சகல ... உள்ளடக்கி அவசர கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்குபடுத்துமாறு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு, மனித உரிமை ஆணைக்குழு உத்தர விட்டுள்ளது. (வ-5)



## தங்கச் சங்கிலி அபகரித்த நபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூன் 22

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பட்டப் பகலில் வீதியில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்த நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட சாவகச்சேரி நீதிவான் அன்றைய தினம் அடையாள அணி வகுப்பை நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாரைப் பணித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் சென்ற ஆரம்பப் பிரிவு மகளை ஏற்றிக்கொண்டு வீடு திரும்ப முற்பட்ட வேளையில் பெண் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பியோடிய போது பொது மக்களும் படையினரும் துரத்திப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். தென்னிலங்கையைச் சேர்ந்த நபரை சாவகச்சேரி பொலிஸார் புதன்கிழமை பிற்பகலில் நீதிமன்றில் முற்படுத்தினர்.



வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன் அன்றைய தினம் அடையாள அணிவகுப்பை நடத்தும் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாரைப் பணித்தார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திராவிடக் கட்சிகளோடு இனி கூட்டணி இல்லை

பா.ம.க. அறிவிப்பு



சென்னை, ஜூன் 22
எதிர்வரும் மக்களவைத் தேர்தலைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ள பாட்டாளி மக்கள் கட்சி, எதிர்காலத்தில் திராவிடக் கட்சிகளோடு கூட்டணி அமைப்பதில்லை என்றும் அறிவித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை சென்னையில் கூடிய அந்தக் கட்சியின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

''எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்காக பா.ம.கவின் ஆதரவை பல கட்சிகள் கோரியிருந்த போதும், தேர்தலைப் புறக் கணிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டள்ளது. இனிவரும் காலங்களில் திராவிடக் கட்சிகளுடனோ அல்லது தேசியக் கட்சிகளுடனோ கூட்டணி அமைப்பதில்லை என்றும், ஒத்த கருத்துள்ள கட்சிகளுடனும் சமுதாய அமைப்புகளுடன் இணைந்து தனி அணியை ஏற்படுத்தி போட்டியிடுவது என்றும் ஏற்கெனவே கட்சி எடுத்திருக்கும் முடிவில் மாற்றமில்லை'' என்று அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலில் 4 அ.தி.மு.க. வேட்பாளர்களினதும், அந்தக் கட்சியின் ஆதரவுடன் நிற்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜாவினதும் வெற்றி ஏறத்தாழ உறுதி செய்யப்பட்டுவிட்ட நிலையில், ஆறாவது இடத்திற்கு, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியின் மகள் கனிமொழிக்கும் தே.மு.தி.கவின் இளங்கோவனுக்குமிடையே போட்டி நிலவுகிறது.

அதேவேளை, கடந்த சட்டமன்றத் தேர்தல்களில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று தலா 2 இடங்களில் வெற்றிபெற்ற மனிதநேய மக்கள் கட்சி மற்றும் புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் கனிமொழிக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. (ற)

# மீண்டும் முற்றுகை

## இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி; எதிர்த்து அணிதிரளுமாறு வைகோ அறைகூவல்



சென்னை, ஜூன் 22
இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதைக் கண்டித்து எதிர்வரும் 25ஆம் திகதி மீண்டும் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ அறிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சிகள் வழங்கக் கூடாது என்று தமிழக மக்கள் நடத்தும் போராட்டங்களை அசட்டை செய்து, இந்திய மத்திய அரசு தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்கி வருவதை அடுத்தே தொடர்ந்து போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''தமிழர்களின் உணர்வுகளை மதிக்காமல் இந்திய மத்திய அரசு தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. கடந்த 27ஆம் திகதி முதல் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவருக்கு வெலிங்டன் இராணுவமுகாமில் பயிற்சிகளை வழங்கி வருகின்றது இந்திய இராணுவம். தமிழக அரசும், தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும், தமிழ் உணர்வாளர்களும் மத்திய அரசின் இத்தகைய செயலுக்குப் பலத்த எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்ததையும் காங்கிரஸ் அரசு பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எமது எதிர்ப்பையும் பலத்தையும் மத்திய அரசுக்குக் காட்ட எதிர்வரும் 25ஆம் திகதி பெரும் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

கட்சி பேதமின்றி தமிழின உணர்வாளர்கள், மாணவர்கள், தமிழ் உரிமைப் போராட்ட அமைப்புகள் என்று அனைவரையும் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.(ற)

## 1,000 வீதிகள், 94 பாலங்கள் இருந்த இடத்தைக் காணவில்லை

புதுடில்லி, ஜூன் 22
உத்தரகண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட கடும் மழை, மற்றும் வெள்ளப் பெருக்கால் சுமார் 1,000 வீதிகள் முற்றாக அழிந்து போயுள்ளதுடன், 94 பாலங்கள் இருந்த இடத்தையே காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடும்வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட நிலச்சரிவில் பல வீதிகள் இருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதே சிரமமாகக் காணப்படுகின்றது என்று மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர். 94 பாலங்கள் இருந்த அடையாளமே இல்லாது போய்விட்டன என்றும் தெரிவித்துள்ள மீட்புப் பணியாளர்கள், அவற்றையெல்லாம் சீர் செய்ய மூன்றாண்டுகள் வரை பிடிக்கும் என்றும் கூறியுள்ளனர்.(ற)

## கட்டடம் இடிந்து 10 பேர் சாவு


மும்பை, ஜூன் 22
தானேவில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்தில் இரு குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேபகுதியில் இரு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கட்டட விபத்தில் 70 பேர் உயிரிழந்திருந்தனர். (ற)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## மகேந்திரன் சசீந்திரன்



புன்னகையும் பூ முகமும் கொண்ட உனை
ஈரைந்து மாதங்கள் கருவிலே சுமந்து நான்காவதாய்
பெற்றெடுத்தாள் உன் அன்னை
நான்கிலே பிறந்து நான்கிலே வளர்ந்து
நான்கிலே மரணித்தாய் - இதுதான்
விதியின் விளையாட்டா?
இனிய நண்பனாய் எல்லோருக்கும் அன்பனாய்
சிட்டுக்குருவியாய் சிறகடித்து பூமிதனில் வாழ்ந்த
உன்னைப் பாதி வழியில் உன் உயிரை குடித்தனர்
கொடிய அரக்கர்கள்
பாசத்தைக் காட்டிய அப்பா, அம்மா, அண்ணாமார்,
தம்பி என்றும் ஆருயிர் அக்கா என்றும்
எழில் கொஞ்சும் தமிழில் பண்ணிசை
போல் பாசம் வளர்த்தாய்
உருக்கொடுத்தவர்கள் உருகுகின்றார்கள்
உன் உருவை ஒருமுறை காண்பதற்கு
பறிகொடுத்துப் பதறுகிறார்கள் உறவுகள்
பழகிய உன் முகத்தைப் பார்ப்பதற்கு
மகனே! சசீந்திரா நீ பிரிந்த இடைவெளியை
யார்தான் நிரப்புவாரோ!

பிறப்பு 13.10.1984
இறப்பு 22.06.2009

*என்றும் உன் நினைவுகளுடன்:* குடும்பத்தினர்.
31, கே.கே.எஸ். வீதி,
(சாருஜன் பென்சி), கொக்குவில்.

(38572)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலஸ்தீன பிரதமர் பதவி விலகினார்

காஸா, ஜுன் 22
பலஸ்தீனத்தின் புதிய பிரதமராக பதவியேற்ற ரமி ஹம்தல்ல நேற்றுமுன் தினம் திடீரெனப் பதவி விலகியுள்ளார்.
பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸுடனான கருத்து வேறுபாடு காரணமாக முன்னர் பதவி வகித்த பிரதமர் சலாம் பயாத் பதவி விலகியிருந்தார்.
இதனையடுத்து, அரசியலுக்கு சற்றும் தொடர்பே இல்லாத ரமி ஹம்தல்லாவை புதிய பிரதமராக ஜனாதிபதி கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நியமித்தார். அவருக்குதுணையாக மேலும் 2 துணை பிரதமர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.
பலஸ்தீன அரசியலமைப்பு சட்டத்தின்படி, பிரதமரை விட ஜனாதிபதியிடம் தான் அதிகமான அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. (ற)



பிரேஸிலில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பமாகிய பொதுமக்களின் போராட்டம் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போராட்டங்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படும் நிலையில், போராட்டங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் கடுமையாக முயன்று வருகின்றனர்.

## பிரேஸில் ஜனாதிபதியின் பயணங்கள் இரத்து

பிரேஸிலியா, ஜுன் 22
பிரேஸிலில் அரசுக்கெதிரான பொதுமக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளதை அடுத்து தனது வெளிநாட்டுப் பயணங்கள் அனைத்தையும் இடைநிறுத்தியுள்ளார் அந்நாட்டு ஜனாதிபதி.
பொதுமக்களின் போராட்டங்களால் நாட்டின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளதை அடுத்தே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
ஊழல், உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான அதிக செலவீனம், போன்ற விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.(ற)

## ஜேர்மனியை எச்சரிக்கின்றது துருக்கி

அங்காரா, ஜுன் 22
ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்புரிமையை தமது நாடு பெற்றுக்கொள்வதற்கு ஜேர்மனி தடை ஏற்படுத்துவது குறித்து துருக்கி எச்சரிக்கை செய்துள்ளது.
உறுப்புரிமையை பெறுவது குறித்து அடுத்த வாரம் நடைபெறவுள்ள பேச்சுக்கள் தோல்வியடையும் பட்சத்தில், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவு பாதிக்கப்படும் என்றும் துருக்கி எச்சரித்துள்ளதுடன், அதுகுறித்து கடுமையான பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் துருக்கியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.
துருக்கியில் சிலவாரங்களாக தொடரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அந்த நாட்டுப் பிரதமர் இரும்புகரம் கொண்டு அடக்குகின்றார் என்று ஜேர்மன் ஜனாதிபதி ஏங்கலா மேர்கல் விமர்சித்துள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்புரிமையை துருக்கி பெற்றுகொள்வது குறித்த புதிய சுற்றுப்பேச்சுக்களுக்கு இணங்குவதற்கும் அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார். (ற)

# இந்தியாவுக்கு ஆதரவு

## ஐ.நா. பாதுகாப்பு நிரந்தர உறுப்புரிமை குறித்து அமெரிக்கா தெரிவிப்பு

நியூயோர்க், ஜுன் 22
ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு அமெரிக்கா ஆதரவு தரும் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஜோன் கெரி,
''இந்தியா வளர்ந்து வரும் வல்லரசாகும். அதை அமெரிக்கா வரவேற்கிறது. சீரமைக்கப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட ஐ.நா.பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு அமெரிக்கா ஆதரவு தரும். இருபத்தியோராம் நூற்றாண்டில் இந்தியாவும்-அமெரிக்காவும் இயற்கையான கூட்டாளிகள் ஆகும். அதே நேரத்தில் அடுத்த தலைமுறை இந்திய தலைவர்களை சந்திப்பதில் ஆர்வமாக உள்ளேன். முன்னெப்போதையும் விட இந்திய-அமெரிக்க உறவு தற்போது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. பல்வேறு சவால்களை இரு நாடுகளும் இணைந்து சமாளிக்கின்றன. உயர்கல்வி, மரபுசாரா எரிசக்தி, பயங்கரவாத எதிர்ப்பு, விண்வெளித்துறை போன்றவற்றில் இரு தரப்பினரும் ஒத்துழைத்து வருகின்றனர். ஆப்கானிஸ்தான் வளர்ச்சியில் இந்தியாவும், அமெரிக்காவும் அக்கறை கொண்டுள்ளன.'' என்று தெரிவித்தார்.
அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு இடையிலான சிறப்புப் பேச்சுக்கள் அடுத்த வாரம் நடைபெறவுள்ளன. அதில் பங்கேற்பதற்காக ஜோன் கெரி இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (ற)

# இன்னும் முடிவில்லை

## தலிபான்களுடனான பேச்சுக்கள் குறித்து அமெரிக்கா கருத்து

நியூயோர்க், ஜுன் 22
ஆப்கனில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக தலிபான்களுடன் பேச்சு நடத்துவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.
அமெரிக்கா, தலிபான்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அதனால் அதிருப்தியடைந்த ஆப்கன் ஜனாதிபதி ஹமீது கர்சாய் அமெரிக்காவுடனான பேச்சுக்களை ரத்து செய்வதாக புதன்கிழமை அறிவித்தார்.
இந்நிலையிலேயே தலிபான்களுடனான பேச்சுகள் குறித்து எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.
இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஜென் சகி கருத்துத் தெரிவிக்கும் போது,
''ஆப்கனில் அமைதி ஏற்படுத்துவதற்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசித்து வருகிறோம். தலிபான்களை சந்தித்து பேச்சு நடத்துவது குறித்து இன்னும் முடிவாகவில்லை. அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று தலிபான்களை சந்தித்துப் பேசப் போவதாக வெளியான தகவல் தவறானது.
ஆப்கன் விவகாரத்தில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கை சரியானதுதான் என்று பரவலான கருத்து நிலவுகிறது. அதே நேரம் இதுபற்றி சில குழப்பமான தகவல்களும் வெளியாகின்றன'' என்று தெரிவித்தார்.
எனினும் அமெரிக்கா இவ்வாறு கூறியுள்ள போதும்,
''அமெரிக்காவுடனான பேச்சுக்களில் போர் நிறுத்த ஒப்பந்தம் முக்கியப் பங்கு வகிக்கும்'' என தலிபான் அமைப்பு கூறி உள்ளது.
ஆப்கனில் முகாமிட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் 2014ஆம் ஆண்டு முழுமையாக வெளியேற முடிவு செய்துள்ளன. அதற்கு முன்னதாக அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காக தலிபான்களுக்கும், ஆப்கன் அரசுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சித்து வருகின்றது. (ற)

# புராதனச் சின்னங்கள் சிரியாவில் அழிவு

## கவலை வெளியிடுகிறது யுனெஸ்கோ

நியூயோர்க், ஜுன் 22
கடந்த இரண்டு வருடங்களாக சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டு மோதல் காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், அங்குள்ள புராதான மற்றும் பாரம்பரியசின்னங்கள்சிதைவடைந்துள்ளதாக யுனெஸ்கோ தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் சபையின், கல்வி மற்றும் கலை அமைப்பு குழுவின் வருடாந்த கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளது யுனஸ்கோ.
போர் நடவடிக்கைகளும், பலவீனமான பாதுகாவல்களும் இந்த புராதன கலைச்சின்னங்களை பாதுகாக்க தவறியுள்ளதாக யுனெஸ்கோ கவலை வெளியிட்டுள்ளது.
இதனிடையே, புராதன நகரங்களான டமாஸ்கஸ், போஸ்ரா, அலெப்போ, பால்மிராவின் ஒயாசிஸ் சோலை வனங்கள், கிரேக் டி செவாலியே, காலட் சலா எல்-டின் அரண்மனைகள் என்பன பாரம்பரிய சின்னங்களாக யுனெஸ்கோ அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.
எனினும், அவை தற்போது, அழிவடையும் நிலையை எதிர்நோக்கியுள்ளதாக யுனெஸ்கோ அமைப்பின் தகவல் அதிகாரி ரோனி அமெலன் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, இந்த புராதன மற்றும் பாரம்பரிய சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்எனவும்யுனெஸ்கோ வலியுறுத்தியுள்ளது. (ற)


# வளிமாசடைதல் பதிவு சிங்கப்பூரில் உயர்வு

கோலாலம்பூர், ஜுன் 22
சிங்கப்பூரில் தொடர்ச்சியாக மூன்றாவது நாளாக வளிமாசடைதல் உயர்ந்த மட்டத்தை பதிவுசெய்துள்ளது.
இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள தீ காரணமாக இந்த வளி மாசடைதல் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
மாசு நியம சுட்டெண் 400 ஆக பதிவாகியுள்ளதுடன், சிங்கப்பூர் வரலாற்றில் முதல் முறையாக வளி அதிகளவில் மாசடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
மலேஷியாவும் இந்த புகைமூட்டம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் தென் பகுதியிலுள்ள 100 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.
இந்த புகை மூட்டம் சில வாரங்களுக்கு தொடர்ந்தும் இருக்கும் என சிங்கப்பூர் பிரதமர் எச்சரித்துள்ளார்.(ற)



# ஐந்தாவது மாடியில் இருந்து வீழுந்த குழந்தையை தாங்கிப் பிடித்துக் காப்பாற்றிய பொதுமக்கள்

பீஜிங், ஜுன் 22
ஐந்தாவது மாடி ஜன்னலில் இருந்து விழுந்த 2 வயது பெண் குழந்தையை வழிப்போக்கர்கள் தாங்கிப் பிடித்து காப்பாற்றிய சம்பவம் சீனாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சீனாவின் நிங்காய் பகுதியை சேர்ந்த பெண் தனது வீட்டை பூட்டிக் கொண்டு வெளியே சென்றார். உள்ளே தூங்கிக் கொண்டிருந்த 2 வயது பெண் குழந்தை கண் விழித்து தாயை காணாமல்



அழத் தொடங்கியது.
ஐந்தாவது மாடியில் உள்ள வீட்டின் ஜன்னல் வழியே வெளியில் எட்டிப்பார்த்த குழந்தை பிடி நழுவியதால் ஜன்னலில் இருந்து வெளிப்பக்கம் சரிந்தது.
ஜன்னல் கதவை பிடித்தபடி ஊசலாடிய குழந்தை பயத்தில் கதறி அழுதது. குழந்தையின் அழுகுரல் கேட்டு அக்கம் பக்கத்தில் பேசிக் கொண்டிருந்த நபர்கள் வீதியில் திரண்டனர்.
[illegible] விட்டு தரையை நோக்கி விழத் தொடங்கியது.
அரண் போல் சூழ்ந்துக் கொண்ட அப்பகுதி மக்கள் கீழே விழுந்த குழந்தையை லாவகமாக பிடித்து காப்பாற்றினர். அதிர்ஷ்டவசமாக கண்ணின் கீழ்பகுதியில் சிறிய சிராய்ப்பு காயத்துடன் குழந்தை உயிர் பிழைத்தது.
எனினும் காப்பாற்றியவர்கள் [illegible] இன்னொருவருக்கு கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன.(ற)
[illegible] டிய அந்த குழந்தை சில நொடிகளில் பிடியை நழுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் மகா கணபதி துணை



# புன்னாலைக்கட்டுவன், ஆயாக்கடவை
# திருவருள் மிகு சித்திவிநாயகர் தேவஸ்தான
# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 22.06.2013

### ஆலய வரலாறு

சிவபூமி எனத் திருமூலரால் அழைக்கப்பட்ட ஈழ நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் உள்ள புண்ணிய தலங்களில் புன்னைமாநகரிலே வீற்றிருக்கும் ஆயாக்கடவை ஐங்கரன் ஆலயமும் முக்கியமான இடத்தினைப் பெறுகிறது.

தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் பிரதானிகளாக முதலிமார் கள் விளங்கினார்கள். அக்காலத்தில் தெய்வேந்திரம் முதலியாரால் இவ்விடத்தில் ஆயம் வசூலிக்கப்பட்டு மன்னருக்கு வழங்கப்பட்ட மையால் ஆயக்கடவை என்றழைக்கப்பட்ட இவ்விடம் காலவோட் டத்தில் ஆயாக்கடவை என மருவிற்று.

இந்த ஆலயத்தின் தற்போது மூலஸ்தானம் இருக்குமிடத்தில் 1919ஆம் ஆண்டு மூலவிக்கிரகம் ஊர்மக்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டது. 1921இல் முதலாவது கும்பாபிஷேகமும்,1961இல் இரண்டாவது கும்பாபிஷேகமும்,1991இல் மூன்றாவது கும்பாபி ஷேகமும் நடைபெற்று சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.

இந்த ஆலயத்தில் மஹோற்சவமானது ஆனிப் பூரணை தினத்தை தீர்த்தமாக வைத்து 11 தினங்கள் மஹோற்சவ காலமாக திகழ்கின்றது. இந்தத் தேர்த்திருவிழாவானது 43ஆவது தேர்த்திருவிழாவாக அமைகின்றது.

1936இல் கோயிலாரைத் தலைமையாகக் கொண்ட நிர்வாக சபை அமைக்கப்பட்டது. 1956இல் இளைய தம்பி உடையாரை தலைமையாகக் கொண்ட பரிபாலன சபை அமைக்கப்பட்டு இன்றுவரை ஆலயத்தின் வளர்ச்சிப் பணிகளையும் நிர்வாகப் பணிகளையும் காலங்காலமாக இப்பரிபாலன சபை ஆற்றி வருகின்றது.

ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை.

### தேரேறும் பொலிவு காண்பீர்



நாத வடிவான சிவனும் விந்து வடிவான சக்தியும் சேர்ந்ததே விநாயக வடிவம். விநாயகர் நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரத் தலங்களின் மூலாதாரமான ஆனந்தமய கோசத்தில் அமர்ந் திருப்பதாக நூல்கள் கூறுகின்றன.

எனவே நாம் விநாயகரை வழிபட்டால் வினை வேரோடு அறும். விநாயகர் மிக நுண்ணறிவும், புத்திக்கூர் மையும் தரவல்ல தெய்வம் .கல்விக்கு முதல்வர். எடுத்த காரியங்கள் யாவையும் வெற்றி பெற வைப்பவர் சித்தி விநாயகர். எம் ஊர் மக்கள் சித்தி விநயாகரைக் குலதெய் வமாகப் போற்றி வழிபட்டு நினைத்தவை யாவும் சித்திபெற விளைந்த மேன்மை மறக்கற் பாலது.

ஊர்கூடி வடம் பிடிக்க உலா வருகின்ற சித்தி விநாய கப் பெருமான் சகல யோகம் மிக்க வாழ்வை தன் மீளா அடியவர்க்கு என்றும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக் கின்றோம்.

கலாநிதி தியாக கெங்காதர குருக்கள்(J.P.)
மகோற்சவ காலக் குரு
ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானம்
புன்னாலைக்கட்டுவன்.

### உடுவில் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



'விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்'

இலங்கையின் நிலமகள் முகமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள புண்ணிய தலங்களில் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயத் திற்கான தேர்த்திரு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின் றேன். இந்த ஆலயத்தின் அபிவிருத்தியில் சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் பங்கு மிகவும் சிறப்பா னது. வேண்டு வார்க்கு வேண்டுவதை எல்லாம் கொடுத்து அடியார்கள் விக்கினங்களைப் போக்கி ஆட்கொள்பவர் விநாயகர். புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை கிராமத் தில் வீற்றிருந்து தேரேறி வீதி உலாவரும் சித்தி விநாய கரின் திருக்கோலத்தைக் கண்டு பக்திப் பரவசத்தால் மெய்யுருக வழிபடும் அடியவர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல விநாயகனை வணங்கி உளமார வாழ்த்துகின்றேன்.

முத்துலிங்கம் நந்தகோபாலன்
பிரதேச செயலர், வலி.தெற்கு, உடுவில்.

### பிரதேச சபைச் செயலாளரின் பிரார்த்தனை



ஈழத்திலே உள்ள விநாயகர் ஆலயங்களுள் ஆயாக் கடவை சித்திவிநாயகர் ஆலயத்துக்குப் பெருஞ் சிறப்புக்கள் உள்ளன. நீண்ட கால வரலாறு டைய இந்த ஆலயம் புன்னாலைக் கட்டுவன் மக்களுக்கு மட்டுமன்றி அயற் கிராம மக்களுக் கும் விநாயகரின் அருட்பிரவாகத்தை அள்ளி வழங்கும் திருத்தலமாக விளங்குகின்றது. சமய வாழ்வின் செம்மை களைக் கடைப்பிடிக்கும் வண்ணம் சிறப்பான விழாக்களை யும் வைபவங்களையும் முன்னெ டுத்து வரும் நிலையில் இந்த வருடம் புதிதாக அமைக்கப் பெற்ற தீர்த்தக் கேணியில் தீர்தத் திருவிழாவும் நடைபெற உள்ளது. வினை கள் தீர்க்கும் வேழ முகத்து விநாயகரின் தேர்த்திருவிழா நாளிலே வெளி வருகின்ற சிறப்பு மலர் செம்மையாக அமைந் திடவும் ஆனைமுகனின் அருள் எல்லோருக்கும் கிடைத்து சுபீட்சமாக வாழ வேண்டு மெனவும் சித்தி விநாயகரின் திருப்பா தங்களை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

ச.லோசனா முருகநேசன்
செயலாளர், வலி.தெற்குப் பிரதேச சபை.

### சித்திரத் தேரிலே தேரேறும் சித்தி விநாயகர்



புன்னாலை கட்டுவன் ஓர் அழகான அமைதியான கிராமம். கற்றறிந்த சான்றோர் பலர் வாழ்ந்த வாழ்கின்ற இக்கிராமத்தின் மத்தியிலே ஆயாக்கடவை எனும் பதியினிலே வீற்றிருக்கும் விநாயகப் பெருமான் தேரேறி மக்களுக்கு அருள் பாலிக்கும் இந் நன்நாளில் அனைத்து மக்களும் அவர் அருளைப் பெற்றுய்ய வாழ்த்துகிறேன். இறைவனின் அருளைப் பெற்று மனச் சாந்தி, சந்தோஷம், இறைய ருள் என்பனவற்றை மக்கள் சமூகம் ஒருங்கே பெற இணையும் இடம் ஆலயம். கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என ஆன் றோர் கூறுவர். அந்த வகையில் பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயம் புன்னாலைக்கட்டுவன் வாழ்மக்களின் வாழ்வோட்டத்துடன் கலந்து வியாபித்துள்ளது. அடியவர்களின் நற்பணிகளும் இறை தொண்டர் களின் திருப்பணிகளும் கோயிலை மேன்மேலும் சிறப்புறச் செய்துள்ளன. வேண்டுவோர் வேண்டுவதை அள்ளி வழங்கும் சித்தி விநாயகப் பெருமான் இயற்கை அழகு மிக்க பிரதான வீதியிலே அமர்ந்து தம்மிடம் நாடி வரும் பக்தர்களின் குறைகளைத் தீர்ப்பவர். அவர் தம் பாதார விந்தங்களைப் பணிந்து அவர் தேரேறி வரும் இந்நாளில் அவரருளை அனைவரும் பெற்றுய்ய இறைவனை வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

செ.கணேசமூர்த்தி
பதில் தலைவர், ஆயாக்கடவை சித்தி விநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபை

### இந்து இளைஞர் சங்கம் வாழ்த்துகிறது



வட புலத்தின் தமிழ் சைவ வரலாற்றில் புன்னாலைக் கட்டுவன் கிராமம் ஓர் உன்னத இடத்தை வகிக்கின்றது. இங்கு நல்லாட்சி புரிபவர் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆவார். இவ்வாலயமானது சவுக்கு மரத்தடிப் பிள்ளையார் என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வாலய மானது பலாலி வீதியில் அமைந்துள்ளது. இவ்வால யத்தை சூழ சன சமூக நிலையம், முன்பள்ளி, பாடசாலை என கல்விச் சாலைகள் அமைந்துள்ளன.இவ் வரலாற்று சிறப்பு மிக்க ஆலயத்தில் நாற்பத்து மூன்றாவது (43 ஆவது) தேர்த்திருவிழா வானது சிறப்பாக நடைபெறுவதை முன்னிட்டு புன்னாலைக் கட்டுவன் தெற்கு இந்து இளைஞர் சங்கத்தினராகிய நாம் அளப்பரிய மகிழ்ச்சி அடைவதுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

ச.கஜமுகன், தலைவர் இந்து இளைஞர் சங்கம்.

### புன்னை நகர் மன்னவனே தேரேறி வாராய்



43 ஆவது ஆண்டாக எம் மன்னவன் தேரேறி வந்து அடியார்களுக்கு வேண்டுவன ஈந்து அருளாட்சி செய்கின்ற இன்றைய தினத்தில் அடியவர்க்கு வேண்டுவன வழங்கி இவ்வூர் மக்களைச் செல்வச் செழிப்புடன் வாழ வைக்கிறார் ஆயாக்கட வையான் இவ்வூர்மக்களின்திருப்பணி வேலை களால் சகல வளமும் கொண்ட ஆலயமாக இவ்வாலயம் மிளிர்கின்றது. இந்த வருடம் முதன் முறையாக புதிதாக அமைக்கப் பெற்ற தீர்த்தக் கேணியில் விநாயகப் பெருமான் தீர்த்த மாடவுள்ளார். இவ்வாலயத்தில் சீர்காழி கோ.விந்தராஜன், மதுரைச் சோமு போன்ற இசைத்துறையைச் சேர்ந்தவர்கள் கச்சேரி நடத்தியுள்ளனர். இவ்வாலயத்தில் தேர்த்திரு விழா விற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பரிபாலன சபை செயலா ளர் என்ற வகையில் மிக்க மகிழ்ச்சி அடை கிறேன்.

ஆயாக்கடவையான் சேவையில்
ந.ஜெயகுமாரன் செயலாளர்,
ஆயாக்கடவை சித்தி விநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபை

### ஊரோங்க உன்னருளைத் தா!



தேரேறும் சித்தி விநாயகனே [illegible]
ஆரங்கள் [illegible] பெருமானே அருளும் ஐயா
[illegible] ஆயாக்கடவையான் ஐங்கரனே
ஊரோங்க உன்னருளைத் தா!

[illegible]
[illegible]
[illegible]
அருளைத் தா!

புன்னாலைக்கட்டுவன் பெரியோர் [illegible]
[illegible] விநாயகனே
பொன்னார் திருத்தேரில் பொலிந்தே அருள் தாராய்
[illegible] வா!

த.நாகேஸ்வரன்,
(தென்மராட்சி இலக்கிய அணி)
சாவகச்சேரி.

★★★★★★ பிரசுர அனுசரணையாளர்கள் ★★★★★★

**சித்தி விநாயகர்**
ரெலிகொம்&ஸ்ரேசனறி
[illegible] வீதி,
புன்னாலைக்கட்டுவன்
தெற்கு சந்தி. கே.கே.எஸ் வீதி,
[illegible].

**தரன்**
போட்டோ &வீடியோ
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
ஆயாக்கடவை.
உரிமையாளர்:
சண்முகலிங்கம் முரளி

**லக்சுமி**
ரேட் சென்ரர்
(பலசரக்கு வியாபாரம்)
இல.31, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொ.பே.: 021 224 2080

**பாணு ஸ்ரோர்ஸ்**
(பல்பொருள் வாணிபம்)
ஸ்ரேசன் றோட், [illegible],
சுன்னாகம்.
உரிமையாளர்:
தம்பன் கெந்தேஸ்வரன்

**மகாமாரி**
லைற் எஞ்சின்
வரியப்புலம்,
சுன்னாகம்.
உரிமையாளர்: ஐயா

**சித்தி விநாயகர்**
பல்பொருள் வாணிபம்
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
உரிமையாளர்:ந.கண்ணன்

**பாபு வெதுப்பகம்**
சுன்னாகம் வீதி,
புன்னாலைக்கட்டுவன்தெற்கு
சந்தி
தரமான பேக்கரி உணவுப் பொருட்களை ஒரே இடத்தில் பெற்றிடலாம்.

**கஜமுகன்**
ஸ்ரோர்ஸ்
புத்தூர் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
[illegible]
சண்முகநாதன்

**நாராயணா**
பல்பொருள்
வாணிபம்
சுன்னாகம் வீதி,
புன்னாலைக்கட்டுவன்தெற்கு
சந்தி.

**விஸ்ணு**
ஹாட் வெயர்
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் சந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 300 கி.வெங்காய விதை விவசாயிகளுக்கு வழங்கல்



யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்.மாவட்டத்தில் விதை வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பை அடுத்து இந்த வருடம் 300 கிலோ வெங்காய உண்மை விதை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வேதாள வெங்காய உண்மை விதை 200 கிலோவை விவசாயத் திணைக்களம் விவசாயிகளுக்கு நியாய விலையில் வழங்கியதோடு 100 கிலோவை தனியார் துறையினரும் வழங்கியுள்ளனர்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உண்மை வெங்காய விதை விவசாயத் திணைக்களத்தால் ஒரு கிலோ பைக்கற் 8 ஆயிரம் ரூபா வீதமும் தனியார்துறையினர் எண்ணாயிரம் ரூபாவுக்கு மேல் அதிகரித்த விலையில் வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

உண்மை வெங்காய விதையை மேடையில் விதைத்து 40 தினங்களுக்கு பராமரித்த பின்னர் பண்படுத்தப்பட்ட தோட்ட நிலத்தில் நடுகை செய்து 70 தினங்களின் பின்னர் அறுவடை செய்யலாம். அறுவடையில் நோய்த்தாக்கம் இல்லாத உயர்தரமான வெங்காயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தி வெங்காயச் செய்கையை மேற்கொள்ளும் போது உற்பத்திச் செலவு 50 வீதத்தால் குறைக்கப்படுவதோடு தரமான வெங்காயத்தையும் அறுவடை செய்யலாம். அத்துடன் குறிப்பிட்ட வெங்காயப் பயிரை விதை பெறுவதற்கு ஏற்றமுறையில் பராமரித்து தமக்குத் தேவையான விதையையும் உற்பத்தி செய்து கொள்ளலாம் என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (வ-11)

# ஆயுள்வேத மருந்தகத்தை இடமாற்ற மக்கள் எதிர்ப்பு

சாவகச்சேரி, ஜூன் 22
சாவகச்சேரி பிரதேச் சபையின் சரசாலை உப அலுவலகத்தில் இயங்கி வந்த ஆயுள்வேத மருந்தகத்தை கொடிகாமத்துக்கு இடமாற்றம் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சரசாலைஆயுள்வேத மருந்தகத்துக்கு சரசாலை, மட்டுவில், கல்வயல், வேம்பிராய், மீசாலை வடக்கு, கெரு டாவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வைத்திய தேவைகளுக்காகச் சென்று வந்தனர்.

இந்த மருந்தகத்தை மூடி கொடிகாமத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது சரசாலை ஆயுள்வேத மருந்தகம் ஆயுள் வேத திணைக்களத்தால் நடத்தப்பட்டதால் அவர்களே கொடிகாமத்துக்கு மாற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.



இந்த மருந்தகத்தை மூடி கொடிகாமத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம், மிருசுவில், வரணி, கைதடி, நாவற்குழி போன்ற இடங்களில் பிரதேச சபையால் ஆயுள் வேத மருந்தகங்கள் நடத்தப்படுகின்ற போதிலும் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வதியும்சரசாலை,மட்டுவில் பகுதி மக்களின் வைத்திய தேவையை நிறைவு செய்த மருந்தகம் மூடப்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. (வ-9)


## மாற்று ஆற்றலுடையோர் மேலும் 16 பேருக்கு கொடுப்பனவு

வடமராட்சி, ஜூன் 22
கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வழங்கப்பட்டு வரும் மாற்று ஆற்றல் உடையோருக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு இந்த ஆண்டு மேலும் 16 பேருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் மாற்று ஆற்றல் உள்ளோருக்கு வாழ்வாதார உதவியாக மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

கடந்த வருடம் 34 பேருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது. இந்த வருடம் மேலும் 16 பேருக்கு இந்தக் கொடுப்பனவை வழங்க கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (வ-8)





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மல்லாகம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பாடசாலைகள், பொது நிறுவனங்கள், தேவாலயங்கள், இந்துக் கோயில்கள் அமைந்துள்ள இடங்களில் நிழல் தரும் மற்றும் பயன்பாடுடைய மரங்கள் நடப்பட்டன. கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-86)

## பல்கலையின் முன்னேற்றத்துக்காக பெரு விருப்புடன் பணிபுரிந்தவர்

### பேராசிரியர் பாலகிருஷ்ணனுக்கு இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 22
''பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்தில் பெருவிருப்புடன் பணியாற்றிய பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணனின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது'' என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

பொருளியல்துறை பேராசிரியர் நாகலிங்கம் பாலகிருஷ்ணனின் மறைவையொட்டி யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியல் துறை மண்டபத் தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அஞ்சலி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

பேராசிரியர் பாலகிருஷ்ணன் சிறந்த ஆங்கிலப் புலமை மிக்கவர். பேராசிரியராவதற்கு பட்டங்கள் முக்கியமல்ல. அறிவு போதும் என்பதற்கு பேராசிரியர் சிறந்த எடுத்துக்காட்டு. கல்வித்துறைக்குச் சிறந்த சேவையாற்றிய அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரு தடவைகள் பீடாதிபதியாகவும் வவுனியா வளாகத்தின் முதல்வராகவும் பதவி வகித்தவர்.

பொருளியல் துறையில் தனக்கென தனி இடத்தை தக்க வைத்த பேராசிரியரின் இழப்புக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்- என்றார்.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி வி.பி.சிவநாதன் உரையாற்றுகையில்-

மாணவர்களுக்கு 'றோல்' மொடலாக விளங்கிய பேராசிரியர் பாலகிருஷ்ணனின் இழப்பு கல்வித்துறைக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்று.

புலோலி மண்ணில் தன் ஆரம்பக் கல்வியைக் கற்று பேராதனை பல்கலைக்கழகம் சென்ற பேராசிரியர் பாலகிருஷ்ணன் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கும் தனது சேவையை வழங்கியிருந்தார். அவரைக் கௌரவிக்கும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தனது உறுப்பினராக அவரைச் சேர்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.- என்றார்.



பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள், துறைசார்ந்தோர் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தமது இரங்கலை வெளிப்படுத்தினர். (வ-ரி)

## நீதிமன்ற வளாக அபிவிருத்திக்கு மேலும் ரூ.20 மில்லியன்

தென்மராட்சி, ஜூன் 22
சாவகச்சேரியில் 150 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீதிமன்ற வளாகத் தொகுதியில் மேலும் சில அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன் கூடிய சிற்றுண்டிச் சாலை, பொது மலசலகூடம், உத்தியோகத்தர்களுக்கான வாகனத் தரிப்பிடம் உள்ளிட்ட வேறு சில வேலைகளுக்கென குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கொடிகாமத்தில் நீரிழிவு பரிசோதனை

தென்மராட்சி, ஜூன் 22
கொடிகாமம் பிரதேச மக்களுக்கான நீரிழிவு மருத்துவ பரிசோதனை முகாம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் கொடிகாமம் பொதுச் சந்தை வளாகத்தில் நடைபெறும் என சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

நாளை மந்துவிலில் நடைபெறவிருந்த நீரிழிவு மருத்துவ பரிசோதனை முகாம் தவிர்க்க முடியாத காரணத்தால் நிறுத்தப்பட்டு கொடிகாமம் பொதுச் சந்தையில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொது மருத்துவ நிபுணரின் தலைமையிலான குழுவினர் நீரிழிவு பரிசோதனைகளை மேற்கொள்வதுடன் நீரிழிவினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான கருத்தரங்கையும் நடத்தவுள்ளனர். (வ-9)



## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்.மின்சார நிலைய வீதியில் தனியார் கல்வி நிலையம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளொன்று திருட்டுப் போயுள்ளதாக யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்தியடியைச் சேர்ந்த யுவதியொருவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டது. இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண தேர்தல் என்றதும் இனவாதிகள் கொந்தளிப்பது ஏன்?

## அரச பொது ஊழியர் சங்கம் கேள்வி

அம்பாறை, ஜூன் 22
" நாட்டின் ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றபோதெல்லாம் வாய்மூடி மௌனிகளாக இருந்தவர்கள், வடமாகாண சபைக்கான தேர்தல் என்றதும், கொந்தளிப்பும், கொதிப்புமடைந்திருப்பது ஏன்?"
இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக்கூட்டம் கல்முனை சனச வெளி மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு அவை மக்கள் பிரதிநிகளைக் கொண்டு இயங்கி வருகின்றன.
இவற்றுக்கான தேர்தல்கள் நடைபெற்ற போதெல்லாம் வாய் மூடி மௌனிகளாக இருந்து வந்த இனவாத அமைப்புக்கள், இன்று வடமாகாண சபைக் குத் தேர்தல் நடைபெறப் போகின்றது என்றதும் கொதிப் பும், கொந்தளிப்பும் அடைந்துள்ளனர்.
வடமாகாண சபைக்கு ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட்டு அந்த சபை மக்கள் பிரதிநிதிகளின் கையில் வரப் போகிறது என்பதால் இத்தகையவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.
வடபகுதி மக்கள் தமது ஜனநாயக உரிமையை அனுபவிக்கக் கூடாது என்பதுதான், இன்று வடமாகாண சபைத் தேர்தலுக்கு எதிராகக் குரலெழுப்பி வருபவர்களின் பிரதான நோக்கம்.
இலங்கை-இந்திய ஒப்பந்தத்தினூடாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைக் குறைக்க வேண்டும். காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கக் கூடாது என் றும் குரலெழுப் பப்பட்டு வரு கின்றது.
இதற்கு ஏதுவாக செயற்படக் கூடாது. 13 பிளஸ் வழங்கவும் தயாரெனக் கூறிய அரசு 13 மைனஸ் ஆவதற்குத் துணை போகக்கூடாது.
இன்று வடமாகாண சபைக்கான தேர்தல் விவகாரம் முழு நாட்டினதும் மட்டுமன்றி முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றது.
எனவே 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் கை வையாது, ஜனநாயக ரீதியில் அரசு வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்த வேண்டும்-என்றார். (ச-30)

> 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் கை வைக்காமல், ஜனநாயக ரீதியில் அரசு வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்த வேண்டும். ”

## தமிழரை எப்போதுமே புறக்கணிக்க மாட்டேன்

### கல்முனை மாநகர முதல்வர் உறுதி



அம்பாறை, ஜூன் 22
கல்முனை மாநகர சபைப் பிரிவில் வாழும் தமிழ் மக்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் புறந்தள்ள மாட்டேன். எனது சேவையில் தமிழ்மக்களுக்கு உரிய பங்குகள் நிச்சயம் கிடைக்கும்.
இவ்வாறு கல்முனை மாநகர சபை முதல்வர் முஹமட் சிராஸ் மீரா சாகிப் உறுதியளித்துள்ளார்.
கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம், சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
கல்முனை மாநகர சபையை மக்கள் மயப்படுத்தப்பட்ட முன்னுதாரணமான சபையாக வழி நடத்தி வருகின்றேன்.
இந்த மாநகரம் கிழக்கில் முக்கியமானதொன்றாகும்.
இந்த மாநகரைப் பல்வேறு வழிகளிலும் முன்னேற்றம் அடையச் செய்யவும் அபிவிருத்தி காண வைக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன். இந்த நடவடிக்கைகளுக்கு மாநகர மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் முக்கியமானதாகும்.
கல்முனை மாநகர முதல்வர் என்ற வகையில், இந்த மாநகர சபைப் பிரிவின் அபிவிருத்தியிலோ மக்களுக்கான சேவையிலோ எத்தகைய பாகுபாடும் காட்டுவதற்கு நான் தயாரில்லை.
கல்முனை மாநகர சபைப் பிரிவில் வாழும் தமிழ் மக்களை எனது சேவையில் எச்சந்தர்ப்பத்திலும் புறம் தள்ளமாட்டேன்.
எனது சேவைக்காலத்தில் தமிழ்மக்களை புறக்கணிக்கும் வகையில் மாநகர சபையின் சேவைகள் இடம்பெறமாட்டாது.- என்றார். (ச-30)

## பௌர்ணமி தினவிழா இன்று திருமலையில்

திருகோணமலை, ஜூன் 22
'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி தின நிகழ்வு , இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை, பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் 'நாடகமும்-தெரு கூத்தும் ஓர் அனுபவப் பகிர்வு' என்ற தலைப்பில் ஆசிரியர் ஜே.கே.டி.இதயநேசன் சிறப்பு உரை நிகழ்த்தவுள்ளார்.
'தர்மத்தின் வாழ்வு' என்ற தலைப்பில் கவியரங்கம் சபையோர் கருத்தாடல் என்பனவும் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-40)



மட்டக்களப்பு, காத்தான்குடி அல்-ஹிறா மகாவித்தியாலயத்தின் முப்பெரும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்ட பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் உட்பட பல விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ச-ரி)

## தொழில்நுட்ப கற்பித்தல் விளக்கமளிப்பிலும் தமிழ்ப் பாடசாலைகள் கிழக்கில் புறக்கணிப்பு



மட்டக்களப்பு, ஜூன் 22
தொழில்நுட்ப கல்லூரிகளில் கற்பிக்கும் விரிவுரையாளர்களை அழைத்து விளக்கமளிக்கும் கூட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.
இதுதொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு மனு அனுப்பி வைத்துள்ளார்.
இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
உயர்தரக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மூன்று வருடங்களுக்கு தொழில்நுட்ப பாடம் கற்பிக்கும் திட்டம் அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது.
அதன் அடிப்படையில் தொழில்நுட்ப கல்லூரிகளில் கற்பிக்கும் விரிவுரையாளர்களை அழைத்து விளக்கமளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தொழில் நுட்பக் கல்வி ஊட்டும் நோக்கோடு மூன்று வருட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இதற்காக ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் ஒரு பாடசாலை அல்லது இரு பாடசாலை வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளை தெரிவு செய்து அனுப்பியதில் முறைகேடு நடைபெற்றுள்ளது.
கிழக்கு மாகாணத்தில் திருகோண மலை தொகுதியிலிருந்து விபுலானந்த வித்தியாலயம் மாத்திரமே தமிழ் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டுள்ளது- என்றார். (ச)

## ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு

அம்பாறை, ஜூன் 22
தேசிய சுதந்திர ஊடகவியலாளர் கலாசார அமைப்பு, அம்பாறை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.
இந்தச் செயலமர்வு அமைப்பின் தலைவர் எம்.எஸ்.எம். ஜஃபர் தலைமையில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளது.
பொத்துவில், அறுகம்பை ஹங்லூஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் ஊடகத்துறையில் நீண்ட அனுபவமிக்கவர்கள் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-30)

## கூட்டம்

அம்பாறை, ஜூன் 22
அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் முக்கிய கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டம் சம்மேளனத் தலைவர் மீரா.எஸ். இஸ்ஸடீன் தலைமையில் சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டுப் பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
பிரதேச ஊடகவியலாளர்கள் தொடர்பிலான பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் சகல உறுப்பினர்களும் தவறாது கூட்டத்துக்கு சமூகமளிக்குமாறு சம்மேளனச் செயலாளர் ஐ.எல்.எம்.றிஸான் கோரியுள்ளார். (ச-30)

## சமூகச் சீரழிவு அதிகரித்த மாவட்டம் மட்டக்களப்பு

### மாவட்ட அரச அதிபர் சாள்ஸ் கவலை



எருவில், ஜூன் 22
மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூகச் சீரழிவு அதிகரித்துக் காணப்படுகிறது என்று மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழக்கிழமை தேசிய உணவுக் கலாசார மேம்பாட்டுத் திட்ட நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூகச் சீரழிவுகள் அதிகரித்துச் செல்வதை மாதாந்தம் எமக்கு கிடைக்கும் அறிக்கைகளிலிருந்து அறியமுடிகின்றது. மதுபாவனை, போதை வஸ்துப் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், பாடசாலை மாணவர்கள் மீதான துஷ்பிரயோகம், பெண்கள் மீதான வன்முறைகள், வீட்டு வன்முறைகள், [illegible] பல சமூகச் சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றமையை தொடர்பில் அறிக்கைகளிலிருந்து அறியமுடிகின்றது.
அவற்றைத் தடுப்பதற்கு சமூக, ஒழுக்க கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.
ஆசியாவின் அறிவுமிக்க நாடாக இலங்கையை மாற்ற பாரம்பரிய உணவுக் கலசார மேம்பாட்டு வேலைத்திட்டமும் அவசியமாகும். இவ்வாறான பாரம்பரிய உணவுகள் உள்நாட்டில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. ஆனால் வெளிநாடுகளில் பாரம்பரிய உணவுகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.
வேகமான உணவு முறை (பாஸ்ட் பூட்) பல்வேறு நோய்த் தாக்கங்களை உடம்புக்கு ஏற்படுத்துகிறது என்று கூறப்படுகின்ற நிலையில், இவ்வாறான பாரம்பரிய உணவுக் கலாசாரம் எமக்கு சிறந்த ஆரோக்கியத்தை ஏற்படுத்தும்-என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு காய்ச்சலா? பாவியுங்கள் பரசிட்டமோல்

### வேறு மாத்திரைகளுக்கு வைத்தியரின் அனுமதி அவசியம்



கொழும்பு,ஜூன் 22
காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ள குழந்தைகளுக்கு பரசிட்டமோல் தவிர்ந்த வேறு எந்தவொரு வலி நிவாரண மாத்திரையையும் மருத்துவர்களின் பரிந்துரைகளின்றி வழங்க வேண்டாம் என்று லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் ரத்ன சிறிஹேவகே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காய்ச்சலுக்கு உள்ளாகியிருந்த சில குழந்தைகளுக்கும், வளர்ந்தவர்களுக்கும் பரசிட்டமோல் மாத்திரைக்கு மேலதிகமாக சில வலி தவிர்ப்பு மாத்திரைகளை வழங்கியதால் சில குழந்தைகள் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சலுடன் சேர்த்து தசை வலி, தலைவலி, வாந்தி போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின், தாமதியாது உடனடியாக அனுபவமிக்க மருத்துவ நிபுணரை அணுகி சிகிச்சை பெற வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச)

# ஏமாற்றுக்காரர்களே தற்போது அரசியலில்

### புத்தரக்கித்த மஹாநாயக்கதேரர் குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூன் 22
நாட்டில் அரசியல் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மதம், மற்றும் மக்களைப் பற்றிய எந்த உணர்வுமற்றவர்களாக ஏமாற்றுக்காரர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த மஹாநாயக்க தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

உடுதும்பறை பூர்வாராம விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இன்று நிலவும் அரசியல் செயற்பாடுகள் சம்பந்தமாக யாரும் திருப்தி அடைய முடியாது. இன்றைய அரசியலில் கற்றோர், அறிவாளிகள் என சில பிரமுகர்களே உள்ளனர்.

நேர்மையாக நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு நாட்டில் இடமில்லாது போயிருப்பதே இந்த நிலைமைக்குக் காரணமாகியுள்ளது.

இத்தகைய சான்றோர்கள் அரசியலுக்கு வருவதில்லை. முன்வந்தாலும் கூட அவர்களுக்கு வேட்பு மனுக்கள் வழங்கப்படுவதில்லை. மாறாக வழங்கப்பட்டாலும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. ஏமாற்றுக்காரர்களையும், தில்லுமுல்லுகள் புரிவோரையுமே அரசியலுக்கு எப்போதும் தெரிவு செய்து கொள்கின்றனர்.


முறைமை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கும் இடமளிப்பதா? என்ற கேள்விக்கான விடை பொதுமக்களிடமே உள்ளது.

இந்தநிலைப்பாட்டுக்கு முக்கியமான காரணியாகியிருப்பது விருப்பு வாக்கு முறைமையாகும். இந்த முறைமையை நாம் அனைவரும் கடுமையாக நிராகரிக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவாக்கு மாத்திரமே இருக்க வேண்டியுள்ளது. எதற்காக மூன்று விருப்பு வாக்குகள்? இவ்விதம் மூவருக்கு விருப்பு வாக்குகள் கிடைப்பதால்தான் ஏமாற்றுக்காரர்கள் அதிகரித்து வருகின்றனர். அதனால் தான் மக்களுக்குப் பயனற்ற நபர்கள் அரசியலுக்கு வருகின்றனர்- என்றார். (ச-22)



மஹிந்தோதய புலமைப்பரிசில் நிதியத்துக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது சம்பளத்தை அன்பளிப்பாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் வியாழக்கிழமை கையளித்தார்.

# இலத்திரனியல் அ.அட்டை 2015 இல் விநியோகம்



கொழும்பு,ஜூன் 22
இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை 2015 ஆம் ஆண்டளவில் விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான விலை மனு தற்போது கோரப்பட்டுள்ளது என்று ஆட்பதிவு ஆணையாளர் ஆர்.எம். எஸ்.சரத்குமார கூறியுள்ளார்.

இலத்திரனியல் அடையாள அட்டைகளை வடிவமைத்தல் மற்றும் தரவு களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றுக்காக விலை மனு கோரப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

அதன்பிரகாரம் அடுத்த 6 மாதங்களுக்குள் விலை மனுக்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றுடன் புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வடிவமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்டிலுள்ள அனைத்து நபர்களதும் தரவுகள் திரட்டப்பட்ட பின்னர் புதிய தேசிய அடையாள அட்டைகளை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் கூறினார்.

புதிய இலத்திரனியல் அடையாள அட்டையில் உறுதியான பாதுகாப்பு முறைகளை உள்ளடக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

# தேசிய பொசன் வலயம் ஹக்மனயில்

கொழும்பு,ஜூன் 22
தேசிய பொசன் வலயம் மாத்தறை மாவட்டம், ஹக்மன பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது.

பொசன் போயா தினத்தை முன்னிட்டு தேசிய நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த பொசன் வலயத்தில் 2500 வெசாக் வெளிச்சக்கூடுகளும், 3 வெசாக் பந்தல்களும் அமைக்கப்படவிருப்பதுடன், பாடசாலை மாணவர்களின் பக்தி கீத நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டம் ஹக்மன பகுதி மூன்று பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கியது. அங்கு அரசு பல்வேறு வகையிலான அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளது. வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திகள் பல மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

# 263 தனியார் மருந்தகங்கள் பதியப்படவில்லை

கொழும்பு,ஜூன் 22
நாட்டில் 2766 தனியார் மருந்தகங்கள் மாத்திரமே உள்ளன. அவற்றில் 2503 தனியார் மருந்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்னமும் 263 தனியார் மருந்தகங்கள் மாத்திரமே பதிவு செய்யப்படவுள்ளன என்று அழகு சாதனப் பொருள்கள் மற்றும் மருந்து பொருள்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகங்கள் பதிவு செய்ய வேண்டிய காலத்துக்குள் பதிவு செய்யப்படும் என்று அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் 4000 தனியார் மருந்தகங்கள் உள்ளன. அவற்றில் 2000 மருந்தகங்கள் பதிவு செய்யப்படா மல் உள்ளன என்று தொழிற்சங்க மொன்று ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியுள்ளது. (ச)

# வலது குறைந்தோருக்கான வசதிகளை தனியார்துறையும் செய்ய வேண்டும்

### உயர் நீதிமன்றம் உத்தரவு



கொழும்பு, ஜூன் 22
அரச கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும்போது வலது குறைந்த நபர்கள் உட்செல்லத்தக்கதான வசதிகளைக் கட்டமைக்கும் சட்ட விதிகளை தனியார் துறையும் பின்பற்ற வேண்டியுள்ளது என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அஜித். டி.எஸ்.பெரேரா மனுவொன்றின் மூலமாக நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்திருந்த காரணங்களை கவனத்தில் எடுத்துக்கொண்டபோதே உயர்நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நீதிமன்றத்தின் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொதுக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும்போது வலது குறைந்தோருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பது சம்பந்தமாக 2011 ஆம் ஆண்டில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை அவர் தாக்கல் செய்துள்ளார்.

நாட்டில் எந்தவொரு கட்டடத்துக்குள்ளும் வலது குறைந்தோரால் உட்செல்ல முடியாதுள்ளது என்று அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய சமூக சேவைகள் அமைச்சினால் 2012 ஒக்டோபர் மாதம் கட்டடங்கள் கட்டப்படும்போது வலது குறைந்தோர் உட்செல்லத்தக்கவாறு வசதிகளை ஏற்படுத்துமாறு அறிவுறுத்தும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை தனியார் துறைக்கும் ஏற்புடையதாக்கி வெளியிடுமாறு அவர் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ளார்.

உயர் நீதிமன்றம் அவரது கோரிக்கையை ஏற்று சமூக சேவைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை தனியார் துறைக்கும் ஏற்புடையதாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மோதல்களையும் அழிவுகளையும் தவிர்க்க மனம் கொள்வது எப்போது?

ஈரானிய மக்கள் மாற்றம் ஒன்றை விரும்புகிறார்கள். கடந்தவாரம் அந்த நாட்டில் நடைபெற்ற தேர்தல் அதனையே சுட்டி நிற்கிறது; தொட்டுச் சொல்கிறது. ஈரானிய அரசமைப்பின் பிரகாரம் ஒருவர் இரண்டு தவணைகளுக்கு மேல் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது.

இதுவரை ஈரானின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த முகம்மது அஹ்மதி நிஜாத்தின் ஆதரவாளரான ஹஸன் ரௌஹானி தோற்கடிக்கப்பட்டு விட்டார்.

அதன் விளைவாக ஈரானுக்கும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளுக்கும் இடையில் சமீப காலமாக நிலவிய நெருக்கடி தளர்வதற்கான அறிகுறிகள் சற்றுத் தென்படுகின்றன.

அணுஆயுத உற்பத்திக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஈரான் வெளிப்படையாக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகள் தளரவும் இந்த வெற்றிமூலம் வழியேற்படலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது.

முகமது அஹ்மதி நிஜாத்தின் ஆட்சியின்போது, ஈரானிய எண்ணெய் ஏற்றுமதிக்கு அமெரிக்கா விதித்த தடை காரணமாக, எண்ணெய் உற்பத்தி ஐம்பது சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. நாணயத்தின் பெறுமதியோ எழுபது சதவீதம் இறக்கம் கண்டது. பணவீக்கத்தில் முப்பது சதவீத உயர்வு ஏற்பட்டது. பொருளாதாரம் ஆட்டம் கண்டது.

ஈரானின் பொருளாதாரத்தைக் குறிவைத்து அமெரிக்காவும் அதற்கு ஆதரவான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஈரானின் எண்ணெய்க்குத் தடைவிதித்தன. ஹஸன் ரௌஹானிக்கு கிடைத்த வெற்றி அதன் விளைவு என்பதே பொதுவான கருத்து. முகமது அஹ்மதி நிஜாத்தின் மேற்குலக, இஸ்ரேல் எதிர்ப்புக் கொள்கையல்ல.

தற்போது ஈரான் என்று அழைக்கப்படும் பாரசீகம் 2500 வருடகால நீண்ட வரலாறு கொண்டது. கி.மு. 580- 529 பாரசீகத்தை ஆட்சிசெய்த மகா சைரஸ் எனப்படும் இரண்டாவது சைரஸ் மன்னன் உலக நாடுகளின் நன்மதிப்பைப் பெற்ற பெரும் தலைவன். உலகின் நான்கு திக்குகளிலும் தனது படைகள் வெற்றிகொண்ட நாடுகளில் பிற இன மக்களின் மத நம்பிக்கைகள், கலாசார பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்தான். எதிரிகளை மன்னித்தான். அவனது படைகள் பாபிலோனைக் கைப்பற்றிய போது அங்குள்ள சுமார் 40 ஆயிரம் யூதர்கள் கடவுளால் வாக்களிக்கப்பட்ட தேசத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். உலகிலேயே முதலாவது மனித உரிமைகள் சாசனத்தை வெளியிட்டவன் சைரஸ் மன்னன்தான்.

சைரஸைப் போன்ற ஒரு மன்னன் அதன்பின்னர் பாரசீகத்தில் தோன்றவில்லை. 2500 வருடகால மன்னராட்சியில், இறுதி மன்னரான ஷா மொஹமட் பஹ்லாவி மேற்கு நாடுகளின் செல்வாக்குக்கு உட்பட்டு மக்களின் உணர்வுகளை மதிக்கத் தவறினார். ஆடம்பர வாழ்க்கை நடத்தினார். அதன் விளைவே 1979 இல் இடம்பெற்ற புரட்சி. அதே ஆண்டில் நவம்பர் மாதம் தெஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முற்றுகை இடப்பட்டு 53 அமெரிக்கர்கள் 444 நாள்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டனர்,

அந்தச் சம்பவத்தின் விளைவாக 1980 - 88 ஈரான் – ஈராக் போரின்போது அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஈராக்கைப் பகிரங்கமாக ஆதரித்தன. அமெரிக்க - ஈரான் உறவுகளின் பாதிப்பின் ஆரம்பம் அதுவாகும்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் நெருக்கடி தளர்வதற்கான வாய்ப்புகள் சாடைமாடையாக இப்போது காணப்படுகின்றன. ஈரான் மீதான சில தடைகளைத் தளர்த்துவதன் மூலம் நெருக்கடிக்குத் தீர்வு காண அமெரிக்கா முயற்சிக்க வேண்டும் என்ற கருத்து மேலெழுந்துள்ளது.


தனது அணுசக்தி உற்பத்தி, மின்சார உற்பத்திக்காகவே பயன்படுத்தப்படுகிறது என்கிறது ஈரான். ஈரானின் பெரும்பாலான மக்களும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். அணுஆயுத உற்பத்திக்கு யுரேனியம் பயன்படுத்தப்படுவதில்லை என்று ஈரான் திரும்பத் திரும்பக் கூறிவருகிறது. இப்போது, யுரேனியம் செறிவூட்டலை இருபது சதவீதம் குறைப்பதற்குப் புதிய ஜனாதிபதி சமிக்ஞை வெளியிட்டுள்ளார்.

ஈராக் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வதாகக் கூறிக்கொண்டு, அமெரிக்கா ஈராக்கில் தலையிட்டது. ஈரான் மீதான அணுஆயுத உற்பத்திக் குற்றச்சாட்டு அமெரிக்க இராணுவத் தலையீட்டை நியாயப்படுத்தும் நடவடிக்கையாக இருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், ஈரானில் சந்தேகத்துக்குரிய இடங்களில் திடீர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தது இஸ்ரேல்.

ஹஸன் ரௌஹானியின் வெற்றி இஸ்ரேலுக்கு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தி உள்ளதாகவே கருதப்படுகிறது.

தனது நலன்களையும், சொந்த வியூகங்களையும் அதிகாரத்தனத்துடன் திணிப்பதில் அக்கறை, ஆர்வம் காட்டுவதைத் தவிர்த்து, அமைதிக்காக மனம் கொள்வதன் மூலமே தேவையற்ற பிரச்சினைகளையும் மோதல்களையும் அவை ஊடான அழிவுகளையும் தவிர்க்க இயலும். வல்லரசுகள் இது குறித்து ஆழமாகச் சிந்தித்து மனம் கொள்வது எப்போது....?

# போர்க்குற்ற ஆதா



2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கைப் பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இறுதிக் கட்ட போரின் போது இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்ட போர்க் கால மீறல்களை உள்ளடக்கி பிரித்தானியாவின் சனல் 04 தொலைக்காட்சி சேவையால் வெளியிடப்பட்ட காணொலிகளை கலும் மக்ரே தயாரித்திருந்தார்.

இதன்மூலம் இலங்கையில் அதிகம் பேசப்படும் ஒருவராக மாறியுள்ளார். 'இலங்கையில் கொலைக் களங்கள் - தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள்' எனும் தலைப்பில் கலும் மக்ரேயின் தயாரிப்பில் சனல் 04 தொலைக்காட்சி சேவையால் வெளியிடப்பட்ட காணொலியில் போர்க் குற்றச்சாட்டுக்கள் ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், இவற்றை இலங்கை அதிகாரிகள் மிகத் துணிச்சலுடன் மறுத்துவருகின்றனர். தற்போது கலும் மக்ரே தனது மூன்றாவது காணொலியான 'போர் தவிர்ப்பு வலயம்' 'No Fire Zone' என்ற தலைப்பில் 93 நிமிட நேர காணொலி ஒன்றைத் தயாரித்துள்ளார்.

தமது காணொலியில் உட்சேர்க்கப்பட்ட ஆவணங்களின் மூலப் பதிவுகளைத் தருமாறு தனது கட்டளையின் கீழ் செயற்படுபவர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளாது, சனல் 04 தொலைக்காட்சி சேவையிடம் கேட்பதற்கான காரணம் என்ன என Ceylon Today ஊடகம் மேற்கொண்ட நேர்காணலின் போது, கலும் மக்ரே கேள்வியெழுப்பியுள்ளார்.

**கேள்வி:** சனல் 04 தொலைக்காட்சி சேவை தொடர்ந்தும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக முதன்மைப்படுத்தி வருகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இலங்கை அரசு தொடர்ந்தும் நிராகரித்து வருகிறது. இந்நிலையில் நீங்கள் எவ்வாறு இதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியும்?

**பதில்:** இதற்கான சாட்சியங்களை நாங்கள் மட்டும்முன்வைக்கவில்லை. பல்வேறு அமைப்புக்களும் போர்க் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை முன்வைத்துள்ளன. ஐ.நா சுயாதீன வல்லுநர் குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இறுதியில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரும் குற்றங்களைப் புரிந்ததாகவும் ஆனால் 'போர் தவிர்ப்பு வலயங்களில்' மக்கள் அதிகம் கொல்லப்படுவதற்கு இலங்கை அரச தரப்பால் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சுக்களே காரணம் எனவும் உறுதிப்படுத்தப்பட்டது.

மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நாம் மிகக் கடுமையாக இந்தக் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் ஆதாரங்களைப் பரிசீலித்து விசாரணை மேற்கொண்டோம். எமது தொலைக்காட்சி சேவையால் ஒளிபரப்பப்பட்ட போர் ஆதாரப் பதிவுகள் தொடர்பாக நூறுக்கும் மேற்பட்ட இலங்கை அரச ஆதரவாளர்கள் பிரித்தானிய சுயாதீன ஒலிபரப்பு அதிகார அமைப்பான 'தொடர் பாடல்களுக்கான செயலகத்திடம் முறையீடு செய்தனர். இந்த முறைப்பாடுகள் ஒவ்வொன்றும் மிக ஆழமாக, தனித்தனியாக ஆராயப்பட்ட பின்னர் இவை மறுக்கப்பட்டன. எம்மிடம் கிடைக்கப்பெற்ற போர்க் குற்ற ஆதாரங்களை நாம் மிக ஆழமாக, துல்லியமாக ஆராய்ந்தோம். இவை தொடர்பாக நாம் பத்திரிகைத் துறைசார் ஆராய்ச்சி மற்றும் குறுக்குச் சோதனைகளையும் மேற்கொண்டோம்.

ஐக்கிய நாடுகள் சபையால் இப்போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட 'பெற்றி' தலைமையிலான வல்லுநர் குழு முதலாவது குழுவை விட வேறுபட்டதாகும். இக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில், பல்வேறு போர்க் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அமெரிக்க இரகசிய செய்திக் குறிப்புக்கள், அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றால் வழங்கப்பட்ட ஆதாரங்களும், செய்மதி ஒளிப்படங்களில் எறிகணை வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டதை ஆதாரப்படுத்தும் சான்றுகளும் இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டுக்களை மேலும் வலுப்படுத்துகின்றன.

இலங்கை அரசு போரின் இறுதிக் கட்டத்தில் தன்னால் 'பூச்சிய பொது மக்கள் இழப்புக்கள்' என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதாக கூறுவது முற்றிலும் நம்பமுடியாததாகும். இலங்கை அரசு போரின் போது 7000 வரையானவர்கள் மரணித்ததாக தற்போது அறிவிக்கும் இந்நிலையில், போரின் இறுதி நாளின் போது 'போர்த் தவிர்ப்பு வலயத்தில் உள்ள பொதுமக்கள் அனைவரும் தற்போது அரச படைகளால் மீட்டெடுக்கப்பட்டுள்ளனர்' என இலங்கை அரசு அறிவித்ததை நம்பமுடியாதுள்ளது. இதேபோன்று போரின் போது தாம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை எனவும் அரசு அறிவித்தது. ஆனால் இலங்கை அரச தொலைக்காட்சி செய்திகளில் கனரக ஆயுதங்கள் காண்பிக்கப்பட்ட அதேவேளையில், போர் தீவிரம் பெற்றிருந்த போது தாம் அதனைப் பயன்படுத்தவில்லை என இலங்கை அரசு கூறும் நியாயத்தை ஏற்கமுடியாது.

புதுமாத்தளன் பகுதியில் அறிவிக்கப்பட்ட போர் தவிர்ப்பு வலயத்தில் தஞ்சம் புகுந்த ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்ட இனப்படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட 'டாங்கி' ஒன்றின் அருகில் நின்றவாறு சவீந்திர சில்வா நேர்காணல் ஒன்றை வழங்குவது ஏன்? போரின் இறுதி நாளன்று முள்ளிவாய்க்கால் கரையோரத்தில் பல்குழல் துப்பாக்கிகள் உள்ளடங்கலாக கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி பொதுமக்களைக் கொன்றொழித்தது. போரில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்றால் இது எவ்வாறு சாத்தியமாகும்?

எங்களாலும், ஐ.நா, மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளடங்கலான பல்வேறு அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவானது எம்மால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துகின்றன.

**கேள்வி:** இலங்கை மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபை கலந்துரையாடும்போது மட்டுமே சனல் 04 தொலைக்காட்சி சேவை இலங்கை மீதான போர்க் குற்ற ஆதாரங்களை முன்வைக்கின்றது. இதற்கான காரணம் என்ன?

**பதில்:** நான் ஒரு ஊடகவியலாளன். நான் தற்போது விவாதிக்கப்படும் பிரச்சினைகளையே ஆவணப்படுத்துகிறேன். இதற்கான ஆதாரங்களைத் தேடி, எனது ஆவணத்தை மேலும் வலுப்படுத்துகிறேன். ஆகவே, முக்கியமான நிகழ்வுகள் இடம்பெறும் போதே நான் இவ்வாறான சாட்சியங்களைத் தயார்ப்படுத்துகிறேன். இது சதி நடவடிக்கையல்ல. இதுவே ஊடகத்துறையின் பணி.

அரசு விடும் தவறுகளுக்கு அவை பொறுப்பளிக்க வேண்டும் என வலியுறுத்தி, அவர்களின் சொந்த மக்களிடமிருந்தும், அனைத்துலக சமூகத்திடமிருந்தும் மேற்கொள்ளப்படும் அழுத்தங்களுக்கு இதய சுத்தியுடன் பதிலளிக்க வைக்க வேண்டிய மிகப் பெரிய கடப்பாட்டை ஊடகவியலாளர்கள் கொண்டுள்ளனர். இதன் காரணத்தாலேயே, பல ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் அவர்களது சொந்த நாடான இலங்கையை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டதுடன், காணாமற் போயுள்ளதுடன், படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அனைத்துலக சமூகம் குற்றம் சுமத்தியுள்ளது.

**கேள்வி:** இலங்கை இராணுவத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவானது, சனல் 04 தொலைக்காட்சி சேவையால் வெளியிடப்பட்ட ஆவணங்கள் போலியானவை என அறிவித்துள்ளது. இந்நிலையில், இந்த ஆணைக்குழுவின் விசாரணை முடிவை தவறென்று நிரூபிப்பதற்கு எவ்வாறான ஆதாரத்தைக் கொண்டுள்ளீர்கள்?

**பதில்:** எமது ஆதாரங்கள் 'போலியானவை' அல்ல. காணொலிப் பதிவுகள் ஒவ்வொன்றும் அறியப்பட்ட சம்பவங்கள், திகதிகள் மற்றும் சம்பவ இடங்கள் போன்றவை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து சரிபார்க்கப்பட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாரங்கள் உண்மையானவையே



## - கலும் மக்றே

குறுக்குச் சோதனைகள் மேற்கொள் ளப்பட்டே எம்மால் வெளியிடப் பட்டன. படுகொலைகள், இதன் பின்னரான பாலியல் சித்திரவதை கள், தொந்தரவுகள் போன்றன மிகக் கவனமாக ஆராயப்பட்டு, தடயவி யல் வல்லுனர்கள் மற்றும் : டிஜிற் றல்' ஒளிப்பட ஆராய்ச்சியாளர் களால் ஆராயப்பட்டு உறுதிப்படுத் தப்பட்ட பின்னரே நாம் அவற்றைப் பயன்படுத்தினோம்.

இந்த ஒளிப்படங்களின் தொழினுட்பத் தரவுகள், மற்றும் இதன் ஒளித்திசை என்பனவும் தடயவியல் வல்லுநர் களால் ஆராயப்பட்டன. இந்த ஒளிப் படங்கள் எந்த விதமான தொலை பேசிகளிலிருந்து அல்லது ஒளிப் படக் கருவிகளின் மூலம் எடுக்கப் பட்டன என்பதையும் எம்மால் கூற முடியும். பல்வேறு வகையான ஒளிப்படக் கருவிகள் மூலம் எடுக் கப்பட்ட ஒரேவிதமான ஒளிப்படக் காட்சிகளை நாம் ஒப்பீடு செய்தோம். இவற்றுக்கிடையில் எவ்வித வேறு பாடுகளும் காணப்படவில்லை.

எம்மால் வெளியிடப்பட்ட அனைத்து காணொலிப் பதிவுகளையும் மிகப் பிரபலமான தடயவியல் வல்லுநர் ஒருவர் ஆராய்ந்து உண்மையானவை என உறுதிப்படுத்தியுள்ளார். குருதி சிந்தப்பட்ட முறை போன்ற பல்வேறு விடயங்களையும் இவர் ஆராய்ந் துள்ளார். இவை போலியானவை என்பதை நிரூபிப்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை எனவும் தடயவி யல் வல்லுநர் தெரிவித்துள்ளார். இதற்கப்பால், ''இந்தக் காணொலி யில் காண்பிக்கப்படும் பதிவுகள் உண்மையானவை. இந்தப் பதிவுகள் போலியாக எடுக்கப்பட்டவையல்ல. மக்கள் படுகொலை செய்யப்படுவதை இந்தக் காணொலி எவ்வித ஏமாற் றுதலுமின்றி நிரூபிக்கின்றது'' என ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் தெரி வித்திருந்தார்.

**கேள்வி:** இலங்கைத் தீவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கு டன் சனல் 04 தொலைக்காட்சி சேவை திட்டமிட்ட ரீதியில் தனக்கு எதிரான காணொலியை வெளியி டுவதாக இலங்கை அரசு குற்றம் சுமத்தியிருந்தது. இந்நிலையில் தங்களுக்கு எதிராக இலங்கை அரசால் முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களை எதிர்த்து நீங்கள் ஏன் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை?

**பதில்:** நான் எனது காணொலியின் ஊடாக போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சாட்சியங்களை முன் வைத்து அவற்றை விசாரணை செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளேன்.

ஈராக்கில் பிரித்தானியா மற்றும் அமெரிக்கப் படைகளால் மேற் கொள்ளப்பட்ட போர்க் குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்கின்ற ஆவணப்படங்களை வெளியிட் டமை போன்றே தற்போது நான் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்களை விசாரணை செய்கின்ற ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளேன். இதில் எவ்வித வேறுபாடுகளும் காணப்படவில்லை. இது எனது தொழில். பிரித்தானியா அரசால் அல்லது இலங்கை அரசால் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளால் என எந்தத் தரப்பினரால் போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப் பட்டாலும் நான் அவற்றை விசாரணை செய்வேன்.

ஆனால் பொய்யான சில கூற்றுக் களுக்கு நான் பதிலளிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதை எப்போதும் எதிர்க்கிறேன். எடுத்துக்காட்டாக, இலங்கை அரச படைகளால் மேற் கொள்ளப்பட்ட குற்றங்களை ஆவ ணப்படுத்தி நான் ஆவணப்படங் களை வெளியிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் கள் எனக்கு ஐந்து மில்லியன் அமெ ரிக்க டொலர்கள் பணம் தந்ததாக மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டப் படுகிறது.

எனது காணொலிகள் எவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதை நீங்கள் நினைவுபடுத்த முடியும். தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக நான் குற்றம் சுமத்தியுள்ளேன். அதாவது பயங்கரவாத போர்த் தந்தி ரோபாயங்களை இவர்கள் பயன் படுத்தியதாகவும் சிறுவர்களைப் படையில் இணைத்தமை மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் களை மேற்கொண்டமை போன்ற வற்றை புலிகள் தரப்பால் மேற்கொள் ளப்பட்ட மீறல்களாக நான் சுட்டிக் காட்டியுள்ளேன். என்னால் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள போர் தவிர்ப்பு வலயம் என்கின்ற காணொலியில், பொது மக்கள் வாழ்ந்த இடங்களில் விடுதலைப் புலிகளால் மேற்கொள் ளப்பட்ட மிகப் பயங்கரமான தற் கொலைக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான பதிவுகளை இணைத் துள்ளேன். அத்துடன் 'போர் தவிர்ப்பு வலயங்களுக்கு' தப்பிச்செல்ல முயன்ற தமிழ்ப் பொதுமக்கள் மீது புலிகள் துப்பாக்கிச் சூடுகளை மேற் கொண்டமை தொடர்பாக நான் தற்போது தயாரித்துள்ள ஆவ ணத்தில் குற்றம் சுமத்தியுள்ளேன்.

இந்நிலையில் இவ்வாறான விட யங்களை நான் ஆவணப்படுத் துவதற்கு புலிகள் எனக்கு பணம் தந்தார்கள் என இன்னமும் இலங்கை அரசு உண்மையில் நம்புகிறதா? இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை. இதனாலேயே நான் இவ்வாறான போலியான குற்றச்சாட்டுக்களைத் தட்டிக்கழித் துள்ளேன்.

**கேள்வி:** இலங்கை அரசு சனல் 04 தொலைக்காட்சி சேவையிடம் தன் மீதான குற்றங்களை நிரூபிக்கும் காணொலிகளின் மூலப்பதிவு களைத் தருமாறு கோரியுள்ளது. இதனை நீங்கள் நிறைவேற்ற விரும்புகிறீர்களா?

**பதில்:** போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை களை சான்றுபடுத்தும் காணொலிப் பதிவுகளை இலங்கை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் இலங் கைப் பாதுகாப்புப் படையினர் சிலரே எடுத்துள்ளனர். இந்நிலையில் இந்த ஆவணங்களை இலங்கை அரசு ஏன் தனதுபடையினரிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியாது? சகல காணொலிகளிலும், இலங்கைப்படை யினர் மீறல் சம்பவங்களை தமது தொலைபேசிகளில் பதிவேற்று வதைக் காணலாம். கேணல் ரமேஸ் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர், அடையாளம் காணக்கூடிய ஒரு இராணுவ வீரர் ஒருவரால் கேணல் ரமேஸ் படுகொலை செய்யப்பட் டதைக் காணலாம். இதேபோன்று நிர்வாணமாக்கப்பட்ட புலி வீரர்கள் பின்னர் படுகொலை செய்யப்படும் காட்சியை பதிவாக்கிய போது அதில் இராணுவத்தினர் நடமாடுவதையும் அவர்கள் இவற்றை தமது தொலை பேசிகளில் பதிவாக்குவதையும் காணமுடியும். இக்காணொலிப் பதிவு களில் சில இராணுவ வீரர்கள் கதைப்பதைக் கேட்க முடிவதுடன், அவர்களில் சிலரை அடையாளம் காணவும் முடிகிறது.

இவ்வாறான சூழ்நிலையில், தமது கட்டளையின் கீழ் செயற்படும் இரா ணுவத்தினரிடம் இலங்கை இராணுவ ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு, காணொலிகளைப் பெற்றுக் கொள்ளாதது ஏன்? இதை விடுத்து இவர்கள் ஏன் பிரித்தானிய படத்தயாரிப்பாளர் ஒருவரிடம் காணொ லிகளைத் தருமாறு கோருகிறார்கள்? இந்த காணொலிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக இலங்கை அரசு என்னிடம் இதன் மூலப்பிரதி களைத் தருமாறு கோரவில்லை. மாறாக இந்த இரகசியங்களை வெளி யிட்டவர்களை அடையாளம் காணவே மூலப்பிரதிகளைக் கேட்கிறது. இருப் பினும், ஐக்கிய நாடுகள் சபை இதன் பதிவுகள் சிலவற்றை இலங்கை அரசிடம் வழங்கியுள்ளது. பெரும் பாலான பதிவுகளை தற்போது இணையத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

**கேள்வி:** பொதுமக்களின் [illegible] காணொலி ஆவணங்களை இலங்கை அரசின் பொறுப்புக் கூறலைப் பெறாது வெளியிட்டதன் மூலம் நீங்கள் ஊடகத்தர்மத்தைப் பேணத் தவறிவிட்டதாக இலங்கை அதிகாரிகள் அறிவித்திருந்தனர். நீங்கள் வெளியிட்ட ஆவணம் பாரபட்சமானது, ஏற்றுக் கொள்ள முடியாதது என இலங்கை அரசு அறிவித்திருந்தது. இதற்கான உங்க ளது பதில் என்ன?

**பதில்:** நாங்கள் தொலைக்காட் சிக்கான ஆவணப்படங்களையும் தயாரித்த போது, இலங்கை அரசுக்கு குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர் பான விபரத்தை அனுப்பியிருந்தோம். இது தொடர்பில் நேர்காணல் ஒன்றை வழங்குமாறும் அதன் மூலம் இலங்கை அரசு அதன் தரப்பு நியாயத்தைக் கூறமுடியும் எனவும் கேட்டிருந்தோம். ஆனால் இலங்கை அரச தரப்பு இதற்கு மறுத்துவிட்டது. ''இலங்கை அரசு சனல் 04, தன்னைத் திருப் திப்படுத்தும் விதமாக நடக்காத வரை, எந்த வேளையிலும் இதனு டன் தொடர்பைப் பேணாது'' என இலங்கை அரசு பதிலளித்திருந்தது. இருந்தபோதும், நாங்கள் இலங்கை அரசின் பிரதிநிதித்துவத்தை மிகத் தெளிவாக பிரதான குற்றச்சாட்டுக் களின் போது இணைத்திருந்தோம். நாங்கள் இலங்கை அரசிடம் அதன் பதிலைக் கோரிய போதும் அவர்கள் அதனை எமக்குத் தர மறுத்தனர் என்பதே உண்மையாகும்.

**கேள்வி:** நேர்காணல் வழங்கிய வர்கள் கூறிய விடயங்கள் தவறாக மொழி பெயர்க்கப்பட்டதாக ஐரோப் பிய ஒன்றியத்திற்கானஇலங்கைத் தூதர் பி.எம்.அம்சா தெரிவித்திருந் தார். எடுத்துக்காட்டாக, 'அதாவது ஆஸ்பத்திரிக்கு எய்ம் பண்ணித் தான்அடிச்சிருப்பினம்'எனநேர்காணல் வழங்கிய ஒருவரால் தமிழில் கூறி யமை' அவர்கள் குறிவைக்கப்பட்டு, மருத்துவமனை மீது தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம்' எனத் தவறாக மொழிபெயர்க்கப்பட்டு காணொலியில் கூறப்படுகிறது. இலங்கை அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாகவே இவ்வாறான தவறான மொழிபெயர்ப்பு மேற்கொள் ளப்பட்டது என்கின்ற குற்றச்சாட்டை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்களது மொழிபெயர்ப்பாளர்கள் யார்? நீங்கள் ஏன் மொழிபெயர்ப்பை உறுதிப்படுத்தி வெளியிடவில்லை?

**பதில்:** ஐ.நா மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றில் 'போர் தவிர்ப்பு வலயம்' என்கின்ற காணொலியைத் திரையிடுவதற்கு முன்னர், நாங்கள் இலங்கை அரசிடம் இச்சந்திப்பில் அவர்கள் தரப்பு விடயங்களைக் கூறுமாறு அழைத்திருந்தோம். ஐக்கிய நாடுகள் சபையின் சந்திப் பில், இத்திரைப்படம் திரையிடப்பட்ட பின்னரே இலங்கைத் தூதுவர் அங்கு வந்ததுடன், திரைப்படத்தில் குறிப்பிடாத விடயங்களை அறிக் கையாக வாசித்தார். பின்னர் இது தொடர்பில் எவரும் பதிலளிக்க முன் னர்அவர்அங்கிருந்து வெளியேறினார். ஐரோப்பாவில் நாங்கள் திரைப் படத்தை திரையிட்ட போது சரியான நேரத்தில் அதற்கு சமூகம் தராத அம்சா திரைப்படம் முடிந்த பின்னர் அங்கு வந்ததுடன், சில கேள்வி களைக் கேட்ட பின்னர் அவற்றுக்கு எவரும் பதிலளிக்க முன்னர் அங்கி ருந்து வெளியேறிவிட்டார். இந்நிலை யில் அம்சா அங்கு வந்ததன் நோக்கம் என்ன என்பதை என்னால் உணரமுடியவில்லை.

அம்சா குறிப்பிட்ட தமிழ் வசனமா னது உண்மையில் என்னால் தயா ரிக்கப்பட்ட திரைப்படத்தில் உள்ள டக்கப்படவில்லை. இந்தக் கூற்றுக் கள் உண்மையில், தொலைக்காட்சி ஆவணங்களில் காணப்படுகின் றன. நாங்கள் தவறான எவரையும் பணியில் அமர்த்தவில்லை. நாங்கள் சில மொழிபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தினோம். மீண்டும் மீண் டும் பலதடவைகள் அவர்கள் மொழ பெயர்ப்புக்களை சரிபார்த்தார்கள். மருத்துவமனையைக் குறிவைத்து சிறிலங்கா அரசாங்கம் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் உள்ளன.

**கேள்வி:** தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் இளைய மகனான 12 வயதேயான சிறுவன் படுகொலைசெய்யப்பட்டதாகஇலங்கை அரசு மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டை இலங்கையின் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதர் மறுத்துள் ளார். அச்சிறுவன் பதுங்குகுழி ஒன்றில் வைத்து சுடப்பட்டுள்ளதாக தடயவியல் வல்லுநர் கூறுவதால் அவனை இலங்கை இராணுவம் கொலை செய்யாது அவனது சொந்தப் பாதுகாப்பிற்காக நியமிக் கப்பட்ட மெய்க்காவலர்களால் பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப் படுவதற்கு முன்னரே கொல்லப் பட்டிருக்கலாம் என்பது சாத்திய மான குற்றச்சாட்டாகும் என வலியு றுத்தியிருந்தார். ஏன் இந்தச் சாத்தி யப்பாடான கருத்து ஒருபோதும் முன்வைக்கப்படவில்லை?

**பதில்:** இந்தச் சிறுவனை ஐந்து தடவைகள் துப்பாக்கியால் சுட்டு விட்டு தமது கண்கள் கட்டப்பட்ட நிலையில் இந்தச் சிறுவனின் மெய்க்காவலர்கள் எவ்வாறு தமது கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில், தமது தலைகளின் பின்புறத்தே தாமே சுட்டிருப்பார்கள் என்பதை அம்சா மிகத் தீவிரமாக ஆராயவில்லையா?

**கேள்வி:** இலங்கையின் கொலைக் களங்களின் தொடர்ச்சியாக நீங்கள் வேறு திரைப்படங்களை வெளி யிடவுள்ளீர்களா?

**பதில்:** இது தொடர்பாக வேறு ஏதாவது சாட்சியங்கள் கிடைத்தால் இது சாத்தியப்படும்.


**கேள்வி:** நடைபெறவுள்ள பொது நலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் பங்கு பெறும் உச்சி மாநாட்டில் இலங்கை மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கவனத்தை திசைதிருப்பும் முயற்சி யில் ஈடுபட்டுள்ளீர்களா? இது உங்களது அடுத்த கட்ட வாதிடும் களமாக உள்ளதா?

**பதில்:** நிச்சயமாக, கடந்த தடவை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாட்டில் ஊடக உறுப்பினர் என்ற வகையில் நான் பங்குபற்றியமை போன்று நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் பங்குபற்ற ஆவலாக உள்ளேன்.

இலங்கை அரசு என்னை வரவேற் கும் என நாம் நம்புகிறேன். அவர்கள் என்னையும் என் போன்ற அனைத் துலக ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களையும், பொது நலவாய அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளான மனித உரிமை கள் மற்றும் பத்திரிகைச் சுதந்தி ரத்தின் அடிப்படையில் வரவேற்று, எமக்கு ஒத்துழைப்பு வழங்கு வார்கள் என நான் நம்புகிறேன்.

நன்றி-புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 22.06.2013

## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம்- வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் வரலாற்றுச் சிறப்புகளை நோக்குமிடத்து கலிங்கை சிங்கை ஆரியன் (1215-1240) யாழ்ப்பாணத்து அரசனாக இருக்கையில் அவனுடைய சிறிய இராசதானியான நல்லூரைப் பாதுகாக்கும் நோக்குடன் வீரமாகாளி அம்பாள் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாகவும் வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அக்காலத்தில் இவ்வாலயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவர்கள் வீரத்தை வேண்டி நவீராத்திரி விழாவின் போது தங்கள் படைக்கலன்களைக் கொலுவின் போது வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற்றிகளைக் குவித்து வந்தனர். இதற்குச் சான்றாக சில வருடங்களின் முன்னர் சங்கிலியன் மன்னன் பயன்படுத்திய பட்டாளத்து வாள் மானம்பூ உற்சவத்தின் போது கன்னி வாழையை வெட்டப் பயன்படுத்தினர். இத்தகைய வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட இவ்வாலயம் தற்போது பரம்பரை பரம்பரையாக சைவக் குருமார்களால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலே முதன் முதலில் மஹிடாசுர சம்ஹாரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளியம்மன் ஆலயம் ஆனது யாழ் நகரில் இருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. ஆலயத்திற்கு அழகு சேர்க்கும் வகையில் இரு மருங்கிலும் அழகிய மணிக் கோபுரங்களும் சப்த தளங்களைக் கொண்ட இராஜகோபுரமும் அமைந்து காணப்படுகின்றன. ஆலயத்துக்குள் புகுந்ததும் அடியார்களின் கண்ணைக் கவரும் வண்ணம் கொடித்தம்பம் காட்சியளிக்கின்றது.

ஆதிமூலம் என்னும் கர்ப்பக்கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள கிலா விக்கிரகம் கருணாம்பிகை வடிவமுள்ளது. அதாவது அம்மூலவிக்கிரகமானது மகிடாசுரவர்த்தினி எனவும் அழைக்கப்படுகின்றாள். தேவ சபையில் எட்டுக்கையுடன் காளியம்பாள் சிங்கத்தின் மீது அமர்ந்து காட்சியளிக்கின்றாள். மஹோற்சவ காலத்தின் போது எழுந்தருளி விக்கிரகமாக நான்கு கையுடன் கூடிய வீரமாகாளி தரிசனம் தருகின்றாள். பரிவார மூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், கஜவல்லி,மகாவல்லி, சமேத சுப்பிரமணியர், சனீஸ்வரன், வைரவப் பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர். அம்பாளின் ஆலயத்தில் மிகச் சிறப்பான சித்திர வேலைப் பாடுகளையுடைய வாகனங்கள் பல காட்சியளிக்கின்றன. இவ்வாலயத் தேரானது வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டது. அதாவது யாழ்ப்பாண தமிழ் சிற்பாச்சாரியார்களால் முதன் முதலில் உருவாக்கப்பட்ட தனித்துவச் சிறப்பினைக் கொண்டு விளங்குகின்றது. இவ்வாயலமானது அன்று தொடக்கம் இன்றுவரை சைவக்குருமார் பரம்பரையினரால் பரிபாலிக்கப்பட்டும் நித்திய பூசைகள் நடத்தப்பட்டும் வருகின்றன.

## அருள் ஆசிச் செய்தி



உளன்று திரிந்த என்னை உத்தமனாக்கி தனது ஆலய பெருந் திருப்பணிகளையெல்லாம் எனது கையால் செய்து வைக்கின்ற பெரும் பாக்கியத்தை அன்னை எனக்களித்து இருக்கின்றாள். எம் முன்னோர்கள் உள்ளன்போடு செய்த பூஜைகளின் பயனே அவர்களின் வாரிசான எனக்கு அருள் கிடைக்க வழிசமைத்தது என்றால் மிகையாகாது. அவர்கள் கண்ட கனவுகளையெல்லாம் இன்று நினைவாக்கி வைக்கின்றாள் அன்னை வீரமாகாளி. 25 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழாவில் அன்னையின் அழகுக் கோலத்தை வர்ணிக்க முடியாது. அதிலும் தேர்த்திருவிழா அலங்காரத்தைக்காண கண்ணாயிரம் வேண்டும். எமது ஆணவத்தை அழித்து எம்மை மனிதனாக வாழ வழிசமைக்கும் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டுள்ள அடியார்கள், தொண்டர்கள், புலம்பெயர் அடியார்கள் மற்றும் இவ்வுலகத்தில் வாழுகின்ற சகல ஜீவராசிகளும் இன்புற்று வாழவும் எல்லாம் வல்ல பரம்பொருளாம் அன்னை வீரமாகாளியைப் பணிந்து அருளாசி கூறுகின்றேன்.

*வீரமாகாளியை சரண் புகுந்தால் வீரசக்தி பெறலாம் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க*

சக்திதாசன் சிவஸ்ரீ. சிவ. கமல்ராஜ்குருக்கள் (பிரதம சிவாச்சாரியார், ஆதீன கர்த்தாவும்)
(சிவாச்சாரிய இளவரசு - சக்தி நிர்ஜா விபூஷி)


## ஆசிர்செய்தி



எமது குல தெய்வமாகிய வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் தேர்த்திருவிழாவை யொட்டி வெளியிடும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியும், ஆனந்தமும் அடைகின்றேன். தமிழ் மக்களின் வரலாற்றுப் பின்னணியோடு இணைந்த இவ்வாலயத்தை எமது மூதாதையர் பூசித்து பெரும் பேறெய்தியதோடு எம்மையும் அவ் வழியில் ஆற்றுப்படுத்தியுள்ளனர். பல்வேறு சோதனையின் போதெல்லாம் அம்பிகையின் அருட்பிரவாகம் நம்மவரைக் காத்து நிற்கின்றது. இவ்வாண்டு இவ்வாலய மஹோற்சவத்தை எமது பேரன்பிற்குரிய பேரன் சிவஸ்ரீ சி.கமல்ராஜ்குருக்கள் நடத்துவதைக்கண்டு என் உள்ளம் பூரிக்கிறது. இன்றைய இரதோற்சவத்தில் அடியார்களுக்கு உள்ள பேரிடர்கள் நீங்கி, இன்புற்று வாழ அம்பாளைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

சிவஸ்ரீ செல்வராசா குருக்கள் (காந்தி ஐயா), ஆலய ஆதீனகர்த்தா

## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பிகைக்கு இன்று தேர்த்திருவிழா. ஆதிபராசக்தி அன்னை அடியார்களுக்கும் அம்பிகையாக இன்று அழகிய சித்திரத் தேரிலே அலங்கார பூஜிதையாக ஆரோகணிக்கின்றாள். இன்று வண்ணையிலே ஊர் கூடித் தேரிழுக்கும் பாங்கு அருள்மயமானது. அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம் என்பதற்கிணங்க தேரிலே ஆரோகணிக்கும் தேவியை வணங்கி வாழ்த்தி மகிழும் அடியார்களின் பக்தி வெள்ளம் இன்று அனைவரையும் இன்பத்தில் ஆழ்த்தும் வேளையில் அருளாசி நல்கி எல்லோரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்தும் தேர்த்திருவிழா





வரலாற்றுச் சிறப்பு மிக்க வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் தேர்த்திருவிழா இன்று அம்பாள் அருளுடன் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. சமீப காலங்களில் அன்னையின்பால் முழு நம்பிக்கையும் பக்தியும் கொண்ட பல அன்பர்கள் பல லட்சங்களையும் கோடிகளையும் ஆலயத் திருப்பணிக்கு வழங்கியதன் காரணமாக அம்பாளின் ஆலயம் இன்று புதுப் பொலிவுடனும் மெருகுடனும் திகழ்கின்றது. ஆலயத்தின் இராஜகோபுரம் மற்றும் சுற்றுப் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள சிற்ப வேலைப்பாடுகள் மேலும் சிறப்பு சேர்ப்பதுடன் அம்பிகை அடியார்களை பரவசப்படுத்துவதாகவும் பக்தி கோர்ப்பதாகவும் உள்ளது. ஆணவம் மற்றும் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்தும் இன்றைய தேர்த்திருவிழா அம்பாள் அருளுடன் சிறப்பாக நடைபெற வாழ்த்தி வணங்குகிறேன். அம்பிகையே சரணம்!!

சண்முகரட்ண ஐயர், கல்யாண சுந்தர ஐயர் ( ஆதீன தர்ம கர்த்தாக்கள்)

## போர்த் தெய்வமான வீரமாகாளி தேரேறி வருகிறார்



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள் மிகு வீரமாகாளி அம்மன் ஆலயம் சரித்திர பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். நாற்றிசையும் புகழோங்கத் தமிழையும், சைவத்தையும் ஒருங்கே வளர்த்து ஆட்சி செய்து வந்த சர்க்கரவர்த்திகளினால் ஸ்தாபிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் நல்லூரின் இராசதானியின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் (வண்ணார் பண்ணை) நல்லூருக்கு நுழைய முயன்ற அந்நியருடன் நடைபெற்ற போர்கள் பல இப் பகுதியில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இது பற்றி யாழ்ப்பாணவைபவமாலையில் வரும் கூற்றிலிருந்து அறிய முடிகின்றது. இத்தகைய சிறப்புப் பெற்ற வீரமாகாளியம்பாள் தேரேறி வந்து அடியவர்கள் குறை போக்கி அருள் புரியவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

மதுரகவி, காரை.எம்.பி. அருளானந்தன்

## தேரேறி வரும் தேவியே சரணம்



வேரோடு வினை களையும் வீரமாகாளித் தாயே!
தேரேறி வரும் தேவியே சரணம் சரணம் அம்மா!
பாரோர் புகழ்தேத்தும் பரமேஸ்வரியே! அன்ன பூரணியே!
பக்தர்களுக்கருளிட இன்று தேரேறி வாருமம்மா!
சீரோடு சிறப்பும் தந்து வாழ்வில் நிம்மதியையும் அருளி
வளமோடு வாழ நீ இன்னருள் புரிய வேண்டும்!
பேரோடும் புகழோடும் விளங்கி இன்று தேரோடும் வீதியிலே
அருட்காட்சி தாராய்! அம்பிகையே சரணம் சரணம் அம்மா!

சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

கிருஸ்ணா நகை மாளிகை
அசல் 22 கரட், தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கிருஸ்ணா அடகு கடை.
370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C/9933)(2.6.3)

YOGI'S BEAUTY
இல.75, அம்மன் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
yogisbeauty@yahoo.com

ஜெனன் பனைமரக் காலை
உரிமையாளர்
ந. மதியழகன்
(கண்ணன்)
140, பருத்தித்துறை வீதி, நல்லூர்,

அம்பாள் வெதுப்பகம்
254, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

அம்பாள் மரக்காலை
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 4921012, 0777111147

திருமுருகன் கொம் நெற்
இல.208A,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7835

சாரங்கா நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD.
சாரங்கா நகைமாடம்
137/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, Fax.No: 222 8869
சாரங்கன் நகையகம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மங்களா காட்சியறை
Mangala
Office & Home Furniture
MANGALA SHOW ROOM
536, K.K.S. Road, Jaffna

தேவி என்ரபிறைசஸ்
DEVI ENTERPRISES
Shanthi 2in1
No.168, K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 8352 / 077 5927285.

ராணி மரக்காலை
இல.85, வீரமாகாளி
அம்மன் கோயிலடி
யாழ்ப்பாணம்.

புதிய வினோ நகைமாடம்
T.P: 0215672588, 0776002588.
அருகில்) தொ.பே:0779352902.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டாக்காலி கால்நடைகளால் பயிர் அழிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கையை கட்டாக்காலி கால்நடைகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
இரணைமடுக் குளத்தின் கீழ் முரசுமோட்டை, ஊரியான், 3 ஆம் வாய்க்கால், பன்னங்கண்டி, மகிழங்காடு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகப் பயிர்ச் செய்கைகளை கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள் அழித்து வருகின்றன.
இந்தப் பகுதிகளை அண்டியுள்ள கோரக்கன்கட்டு, ஊரியான் பகுதிகளை அண்மித்த பகுதிகளிலுள்ள பண்ணையாளர்களின் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளே இவ்வாறு பயிரழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் இதனால் தாம் பாதிப்புக்களை எதிர்கொள்வதாகவும் விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர். (க-6)

# நடமாடும் சேவைகள்

### காணிகளின் ஆவணங்களை வழங்குவது தொடர்பாக

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் காணிகளுக்கான ஆவணங்களை வழங்குவது தொடர்பான நடமாடும் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.
குடியிருப்புக் காணிகள், பயிர்ச் செய்கைக் காணிகள் என்பவற்றுக்கான ஆவணங்களை வழங்கும் வகையிலும், காணிப் பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பாகவும் இந்த நடமாடும் சேவைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம்பெற்று வருகின்றன.
பரந்தன், கோரக்கன்கட்டு கிராம சேவகர் பிரிவுகளில் இந்த நடமாடும் சேவைகள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன.
தொடர்ச்சியாக ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் கடந்த 17 ஆம் திகதி காணி உரிமையாளர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு அவை தொடர்பான விசாரணைகள் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றுள்ளன.
காணி தொடர்பான விசாரணைகள் பிரதேச செயலகத்தில் வார நாள்களில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு தண்டம்

கிளிநொச்சியில் 750 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த வயோதிபர் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சிப் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி 750 மில்லி லீற்றர் கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்த வயோதிபர் ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மறுநாள் முன்னிலைப்படுத்தினர். குறித்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. (க-6)

# மாணவர்கள் ஏமாற்றம்

### பேரீச்சம்பழ விநியோகம் இடைநிறுத்தம்; லொறியும் தடுத்து வைக்கப்பட்டது



வவுனியா, ஜூன் 22
வவுனியாவில் உள்ள பாடசாலையொன்றில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருந்த பேரீச்சம்பழ விநியோகம் இடைநிறுத்தப்பட்டதால் மாணவர்கள் ஏமாற்றமடைந்ததாகத் தெரிய வருகின்றது.
கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா செயலகத்தில் இருந்து உலக உணவுத்திட்ட அதிகாரிகள் குறிப்பிட்ட பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு பேரீச்சம்பழங்களை விநியோகம் செய்வதற்காகச் சென்றனர். இவர்கள் பாடசாலை அதிபருடன் முதலில் உரையாடிவிட்டு வகுப்பாசிரியர்கள் ஊடாக மாணவர்களுக்கு பேரீச்சம்பழங்களை விநியோகிப்பதற்கு ஆரம்பித்தனர். ஆனால் பாடசாலை அதிபர் இதனைத் தடுத்து நிறுத்தினார். இதனால் அங்கு வாய்த்தர்க்கம் முற்றியது. உடனே அதிகாரிகள் வெளியேற ஆரம்பித்தனர். பேரீச்சம்பழத்துடன் சென்ற லொறியை பாடசாலையை விட்டுச் செல்லவிடாது வாயிற் கதவுகளை அதிபர் பூட்டிவிட்டார். பின்னர் லொறியை மீட்பதற்காக உலக உணவுத் திட்டத்துக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்ட பாடசாலைக்குச் சென்றுள்ளார்.
இதன் பின்னரே லொறி மீட்கப்பட்டது. ஆனால் மாணவர்களுக்கு பேரீச்சம்பழங்கள் வழங்கப்படவில்லை. இதனால் பேரீச்சம்பழம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் ஆவலுடன் காத்திருந்த மாணவர்கள் ஏமாற்றமடைந்து காணப்பட்டனர்.
இந்தச் சம்பவம் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (க-402)

## திருக்குறள் எழுத்துத் தேர்வு

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான திருக்குறள் எழுத்துத் தேர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாகத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.
இவர்களுக்கான நுழைவு அட்டைகள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவை கிடைக்கப் பெறாத பாடசாலைகள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வே. இறைபிள்ளை அறிவித்துள்ளார். (க)



வவுனியா நெளுக்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டி 48 தினங்கள் தொடர் சொற்பொழிவாற்றிய எஸ். எஸ். வாஸன் பொன்னாடை போர்த்தப்பட்டு, அருண்மொழிச் செல்வர் என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார். (க)

## உரிய வகையில் அமைக்கப்படாத புதுமுறிப்புக் கிராமத்தின் மதகுகள்

அக்கராயன், ஜூன் 22
கிளிநொச்சி புதுமுறிப்புக் கிராமத்தின் வீதிப் புனரமைப்பின் போது மதகுகள் உரிய வகையில் அமைக்கப்படவில்லை என வர்த்தக நிலைய உரிமையாளர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
வீதி அதிகார சபையினர் கிளிநொச்சி நகரில் இருந்து புதுமுறிப்பு வரையான வீதியைப் புனரமைத்து வருகின்றனர். ஆனால் புதுமுறிப்பு பாலா கடைப் பகுதியில் உள்ள மதகுகள், நீர்க்குழாய்கள் என்பன சீரான முறையில் அமைக்கப்படவில்லையெனவும், சில இடங்களில் மட்டுமே மதகுகள் அகலமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
மேலும் மக்கள் நடமாடும் இடங்களில் மதகுகளை அமைக்காது தேவையற்ற இடங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-18)

# சீரில்லாத மின்சாரத்தால் மின் உபகரணங்கள் பாதிப்பு

### மன்னார் மக்கள் விசனம் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 22
மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக சீரில்லாத வகையில் மின்சார விநியோகம் இடம்பெறுவதால் பெறுமதி வாய்ந்த மின்சாதனப் பொருள்கள் பழுதடைவதாக மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
இரவு பகல் பாராது மன்னார் மாவட்டத்தில் மின்சாரம் அடிக்கடி திடீர், திடீர் எனத் தடைப்படுவதுடன் பின்னர் மீண்டும் அதிகரித்த விதத்தில் வருவதால் மின் பாவனையாளர்களது பெறுமதி மிக்க மின்சாதனப் பொருள்கள் பழுதடைந்து வருகின்றன.
குறிப்பாக வானொலி, தொலைக்காட்சி, கணினி உள்ளிட்ட பல விதமான பெறுமதி மிக்க மின்சாதனப் பொருள்கள் பழுதடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
தற்போது பகல் நேரங்களில் மின்தடை ஏற்பட்டு வருகின்றது. இரவு நேரங்களில் தொடர்ச்சியாக மின்தடை ஏற்படுவதோடு இரவு 9 மணிக்குப் பின்னர் முழுமையாக மின் தடை ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதனால் மின் பாவனையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குறிப்பாக எதிர்வரும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது இரவு நேர கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
எனவே மன்னார் மாவட்ட மின் பாவனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மன்னார் மின்சார சபை அலுவலகத்தினர் உரிய நடவடிக்கை எடுத்து மின் பாவனையாளர்களுக்குச் சீரான மின் விநியோகத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மன்னார் மாவட்ட மின்சார சபை அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-12)

### தண்ணீரை டீசல் என ஏமாற்றியவர்கள்

# ஒட்டுசுட்டான் வர்த்தகரிடம் வகையாக மாட்டினர்

முல்லைத்தீவு, ஜூன் 22
தண்ணீரை டீசல் எனக்கூறி விற்பதற்கு முற்பட்ட தென்னிலங்கை வாசிகள் வசமாக மாட்டிக் கொண்டனர். தென்னிலங்கையிலிருந்து வடி வாகனத்தில் டீசல் வியாபாரிகள் என்ற போர்வையின் கீழ் வந்த சிலர் மிகவும் குறைந்த விலையில் தண்ணீரூற்று வர்த்தகர் ஒருவருக்கு இரண்டு பெரல்களைக் விற்றுவிட்டு ஒட்டுசுட்டான் வந்தனர்.
இதன்போதே வர்த்தகர் ஒருவரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;
ஒட்டுசுட்டான் சிவன்கோயிலடியில் கடை வைத்திருக்கும் வர்த்தகர் ஒருவரிடம் டீசல் பரல்கள் இரண்டு உள்ளதாகவும், குறைந்த விலைக்கு டீசலைத் தருவதாகவும் இவர்கள் கூறினர். அவர் குறைந்த விலை என்றதும் சரி சரி மூடியைத் திறவுங்கள் அளந்து பார்ப்போம் எனக் கூறினார்.
இதற்கு வந்தவர்கள் உடன்படவில்லை. ஆனால் விடாப்பிடியாக நின்ற சிவன்கோயிலடி வர்த்தகர் பரல்களைத் திறந்து பார்ப்பதற்கென சாவியை எடுக்கச் சென்றபோது வந்தவர்கள் திடுதிப்பென வாகனத்தை எடுத்துக்கொண்டு நெடுங்கேணி வீதியால் ஓட்டமெடுத்தனர். அவர்கள் மீது சந்தேகம் கொண்ட வர்த்தகர் அந்த வீதியில் உள்ள இராணுவ முகாமுக்கு தொலைபேசி மூலம் தகவல் தந்தார்.
இராணுவத்தினர் அந்த வாகனத்தை மறித்த வேளையில் குறித்த வர்த்தகரும் அங்கு சென்றுள்ளார். பின்னர் பரல்களைத் திறந்து பார்த்தபோது எண்ணெய் பரலின் அடியில் நீர் இருப்பது கண்டறியப்பட்டது. உடனே பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சம்பந்தப்பட்ட நபர்களை வாகனத்துடன் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். ஏமாற்றப்பட்ட தண்ணீரூற்று வர்த்தகரும் விடயத்தைக் கேள்விப்பட்டு அங்கு வந்தார். அவரிடம் வாங்கிய பணத்தைத் தருவதாக ஏமாற்றியவர்கள் கூறினர்.
இத்தகைய ஏமாற்றுக்காரர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (க-500)

## அக்கராயனில் உர விநியோகம்



அக்கராயன், ஜூன் 22
அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் உர விநியோகம் இடம்பெற்று வருகின்றது.
சிறுபோக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமக்குத் தேவையான உரங்களை இங்கு பெற்று வருகின்றனர்.
கடந்த கால போகத்தில் அறுவடையின் போது பெய்த மழையினால் பெரும் அழிவுகளைச் சந்தித்த விவசாயிகள் இம்முறை சிறு போகத்தில் பெரும் அக்கறை காட்டி வருகின்றனர்.
அக்கராயன் குளத்திலும் நீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (க-18)

# 100 ஏக்கர் நிலத்தில் மேலதிக நெற்செய்கை

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் மேலதிக நெற்செய்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
[illegible] பகுதிகளிலேயே [illegible] செய்கைகள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையின் போது முன்னனுமதி அற்ற வகையில் நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளவர்களை இனம் காண்பதற்கென அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவினர் தொடர்ந்தும் இத்தகையவர்களைக் கண்டு பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய செய்கைகள் அழிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** எண்ணம்போல் செயற்பட வேண்டுமென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபர்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத் தொல்லை விலகும்.

**மிதுனர்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரசு காரியங்ளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகர்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**சிங்கர்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**கன்னி:** முன்கோபத்தால் பகை உண்டாகும். அடுத்தவர்களைக் குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப்பாருங்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம்.

**நாளை**

ஆனி-09 ஞாயிற்றுக்கிழமை 23.06.2013
திதி: பூரணை மா. 05.40 வரை
நட்சத்திரம்: மூலம் பி.இ. 02.38 வரை
சுபநேரம்: 08.54 - 10.24 வரை
இராகுகாலம்: 04.24 - 05.54 வரை

**துலார்:** அரச காரியங்கள் தாமதமாக முடியும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தி யோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் ஏற்படும்.

**விருச்சிகர்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பழைய நினைவுகள் நெஞ்சில் நிழலாடும். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரத்தில் லாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**தனுசு:** எடுத்த வேலையை தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனபுத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரர்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

**கும்பர்:** யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக்கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாக சென்று செய்வது நல்லது.

**மீனர்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரி யங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 5 | 3 | | 2 | | |
| | | | | | 2 | | 3 | 9 |
| | | | 8 | | 7 | 4 | | 6 |
| | | 6 | | 4 | | | | 2 |
| | | 8 | 1 | 2 | 3 | 6 | | |
| 2 | | | | 9 | | | | |
| 4 | | 3 | 2 | | 1 | | | |
| 9 | 7 | | 3 | | | | | |
| | | 2 | | 5 | 4 | | 8 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 3 | 6 | 8 | 5 | 4 | 9 | 1 |
| 6 | 8 | 1 | 9 | 3 | 4 | 5 | 7 | 2 |
| 4 | 9 | 5 | 7 | 2 | 1 | 6 | 3 | 8 |
| 8 | 6 | 2 | 4 | 9 | 7 | 3 | 1 | 5 |
| 5 | 4 | 9 | 8 | 1 | 3 | 2 | 6 | 7 |
| 1 | 3 | 7 | 2 | 5 | 6 | 9 | 8 | 4 |
| 2 | 1 | 4 | 3 | 7 | 9 | 8 | 5 | 6 |
| 3 | 7 | 8 | 5 | 6 | 2 | 1 | 4 | 9 |
| 9 | 5 | 6 | 1 | 4 | 8 | 7 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 13ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 23.05.1933

ஆண்டவன் அடியில் 07.05.2006

அன்னை மடியில் 06.04.1930

ஆண்டவன் அடியில் 22.06.2000



"இறைவா என்னைக் காத்தருளும்
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்"
(திபா.16:1)

திருமதி
**ஜோர்ஜ் ஞானமலர்**

பூவுலகு விடைகொடுக்க பொன்னுலகை அடைந்து-புகழ்
மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்
நீங்காத நினைவுகளால் நீர் மல்கும் விழிகளுடன்
தாங்காத மக்கள் உற்றார் உலகோர்
ஏங்காத நாளில்லை ஏன் பறந்தீர் எம்மைவிட்டு?

அமரர் வைத்திய கலாநிதி
**க.ஜோர்ஜ்** (D.A.M.,RIMP,J.P)

நீங்காத நோயகற்றும் தெவிட்டாத சேவையினால்
ஆண்டாண்டு போனாலும் ஆர் மறப்பார் அரிய தொண்டை
மாண்டாருள் மாணிக்கமே மகிமையெல்லாம் சேர்த்துவைத்து
தூண்டாத மணி விளக்காய் துயர்களெல்லாம் துடைத்தவரே
இறையின்பம் என்றென்றும் உன்னிடத்தில் நித்தியமாம்
குறையின்றி வாழ்வதற்காகக் கோயில் எல்லாம் கும்பிடுவோம்

(38503) (3.5.6)

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கபிரியேல் ஜோர்ஜ் வைத்தியசாலை,
Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 190 பேருக்கு வியாழனன்று சிற்றூழியர் நியமனம்



யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாண சபையின் திணைக் களங்களின் கீழ் பணியாற்று வதற்காக 190 பேருக்குச் சிற் றூழியர் நியமனம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங் கப்பட்டது.

கட்சி அலுவலகத்தில் வைத்து இந்த நியமனங்கள் வழங்கப் பட்டன. நியமனம் பெற்றவர்கள் வடமாகாண சபையின் கல்வித் திணைக்களம், சுகாதார திணைக்களம், விவசாயத் திணைக் களம் என்பவற்றின் கீழ் பணியாற்றவுள்ளனர்.

இவர்களில் 40 பேர் வட மாகாண சபையில் ஒப்பந்த அடிப்படை யில் ஏற்கனவே கடமையாற்றிய நிலையில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டிருந்தனர். இவர் களில் நேற்று நியமனம் பெற்ற ஒருவர் உதய னிடம் தெரிவித்ததாவது:-

''எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் மட்டுமன்றி அரச அலுவலங்களுக்கு பல தடவை படியேறி இறங்கினோம் ஆனால் எதுவும் நடக்கவில்லை. ''நீங்கள் காலம் தாழ்த்தி வருவதால் நியமனம் வழங்கமுடியாது'' என்று டக்ளஸும் கைவிரித்து விட்டார்- என்றார். பணியி லிருந்து நிறுத்தப்பட்ட 40 பேரும் 150 புதிய ஊழியர்களு மாக 190 பேருக்கே சிற்றூழியர் நியமனம் நேற்று வழங்கப்பட்டது.

இதேவேளை இந்த நியமனத்துக்காக எவராவது யாருக்கேனும் பணத்தைக் கொடுத்திருந்தால் அதுபற்றித் தன்னிடம் முறையிட்டால் பொலிஸார் ஊடாகப் பணத்தை மீட்டுத்தர நடவடிக்கை எடுக் கப்படும் என்று யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் தெரிவித்தார். (த-5-288)

## விசுவமடுவில் நாளை மாட்டு வண்டிச் சவாரி

விசுவமடு, ஜூன் 22
விசுவமடு மேற்கு சனசமூக நிலை யத்தின் ஏற்பாட்டில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியொன்று நாளை ஞாயிறு இடம் பெறவுள்ளது. பிற்பகல் ஒரு மணியளவில் விசுவமடு தொட்டி யடி சவாரித் திடலில் போட்டி ஆரம்பமாக வுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ,வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள் ளனர்.

மூன்று பிரிவுகளில் இடம்பெறும் இந்தப் போட்டிகளில் முதலிடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-6)

# கஞ்சா கடத்திய 6 பேருக்கு 2 ஆம் திகதிவரை மறியல்

### அவர்களில் 4 பேர் இந்தியர்; இருவர் வேலணை வாசிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
102 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் உள் ளிட்ட 6 பேருக்கும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தியர்கள் நான்குபேரும், வேலணையைச் சேர்ந்த இரண்டு பேருமாக ஆறுபேர் நெடுந் தீவுக் கடற்பரப்பில் கடந்த ஏப் ரல் 25 ஆம் திகதி கைது செய்யப் பட்டனர். அவர் களிடமிருந்து மீட்கப்பட்ட கஞ்சா போதைப் பொருளை யும் குறித்த 6 பேரையும் ஊர் காவற்றுறை நீதிமன்றில் முற் படுத்திய போது விளக்க மறிய லில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது.

புதன்கிழமை இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அடுத்தமாதம் வரை விளக்க மறியலை நீடித்து உத்தர விடப்பட்டது. (ந-4)

## விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 22
நிர்வாகசேவை போட்டிப் பரீட்சை 2013 இற்கான ஆரம்பக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக் கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கு யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி யில் ஆசிரியர் வட்டத்தின் விசேட ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ந)

## சாயி நிலையத்தில் ஆன்மிக நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் போயா தின ஆன்மிக நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத் துடன் ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு கொடியேற்றம், வேதபாரா யணம், காயத்திரி மந்திரம், பஜனை, விசேட சொற்பொழிவு என்பன இடம்பெற்று நண்பகல் 12.30 மணிக்கு நாராயண சேவை யுடன் நிகழ்வு நிறைவுபெறும். (ஒ-14)

## சமய சந்நிதிகளில்....

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த ஆனிப் பூரணைத் தீர்த்தமும், தீ மிதிப்பு விழாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ந)

★ ★ ★

மாகியம்பிட்டி ஸ்ரீ தெட்சண கைலாய சிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற் றுக் கிழமை காலை 9.44 மணிக்கு ஆரம்பமாகவுள் ளது. முன்னதாக இன்று சனிக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (ந-36)


**மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 25.06.2013 செவ்வாய்
பயிற்சிக்காலம் : 03 மாதங்கள்
பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.
(டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி)
பயிற்சி விபரம்:
பேசியல் 18, பிம்பிள் றீட்மென்ட், பிளக்ஸ் பொட் றீட்மென்ட் ஸ்பாட் றீட்மென்ட், ஸ்ரெயிற்றிங், பேமிங், கெயா கலரிங், டையிங், திரட்டிங், வக்சிங், நெயில் ஆட், பெடிக்கியூர் மெனிக்கியூர், சாறிறெஸ்ஷிங் 10 ஷேறாம் மேக்கப், ஒயிலி மேக்கப், பிறைடல் மேக்கப், ஈவினிங் மேக்கப், நைட் மேக்கப், வாட்ட புறால் மேக்கப், கிறியேற்றிவ் மேக்கப், டான்ஸ் மேக்கப், பிறைடல் ஸ்ரைலிங் 03, மெகந்தி டிசைன், கண்கருவளைய சிகிச்சை பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையுடன் கூடிய விளக்கத்துடன் நடைபெறும்.
பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது
மகளிர் மட்டும் தொடர்பு கொள்ளவும்: தொ.பே. 077 936 2642
பயிற்சிக்கு இணைய விரும்புவோர் 24.06.2013 முற்பகல் 10 முதல் 12 வரை பயிற்சி நிலைத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
சாறி வேர்க், தையல், ஹான்ட் வேர்க், கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன.
(ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்)



**மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்**
T.P: 077 936 2642. பழைய வீதி, கோப்பாய்.
(38577)(45.6.7)



**4 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**



செல்வன்
முரளிதாசன் கஜீபன்
திரு.திருமதி
முரளிதாசன் அரசி
தம்பதியினரின் செல்வப் புதல்வன்
முரளிதாசன் கஜீபன் தனது நான்காவது
பிறந்ததினத்தை இன்று
(22.06.2013) சனிக்கிழமை
லண்டனில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவர் மண்டைதீவு வேப்பந்திடல் அம்மன் அருளால் பலகலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.
Happy Birth Day
வாழ்த்துவோர்: அம்மா, அப்பா, தம்பி, தங்கை, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமன்மார், அத்தைமார், மைத்துனர்கள், மைத்துனிகள், உடன்பிறவாச் சகோதர சகோதரிகள்.
சோ.தனபாலசிங்கம் (அப்பப்பா), 352, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



ORIFLAME
**இலவச அழகுக்கலை பயிற்சி மற்றும் ஐசிங் பயிற்சி (Cake Icing)**
நிபந்தனைக்குட்பட்டது

a. Normal Facial
b. Gold Facial
c. Whitening Facial
d. Diamond Facial
e. Fruit Facial
f. Facial - Bleaching
g. Face Massage
h. Eye Brow Threading
i. Pedicure
j. Manicure
k. Nail Art
l. French Manicure
m. Hair Style
n. Hair Cut
o. Hair ironing
p. Pimple Treatment
q. Bridal Make up

இன்னும் பல....
குறிப்பு: கேக் ஐசிங் பயிற்சி மட்டும் பழக விரும்புபவர்களும் பங்குபற்றலாம்
திருமணக் கேக்
பிறந்த நாள் கேக்
இன்னும் பல
கேக் ஐசிங்
நிபந்தனைக்குட்பட்டது
அறிமுக வகுப்பு:
திகதி : 23.06.2013 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : 10.30 A.m.
இடம் : 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச்சந்தி அருகில்)
தொடர்புகளுக்கு : 077 253 3507, 077 956 6282



**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**ஜசுபி பழரச உற்பத்தி தொழிற்சாலை**
கீழ் குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
பதவி வெற்றிடம்: உதவி முகாமையாளர்
தகைமை :க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் சித்தி
விசேட தகைமை: ஆய்வு கூட வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் : வேலை செய்யும் நாளொன்றிற்கு ரூபா 500
விண்ணப்ப முடிவு திகதி:03.07.2013
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: தலைவர், சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து தகைமைச் சான்றிதழ் களின் பிரதியுடன் அனுப்பி வைக்கவும்.
தலைவர்.
(c/9939) (3.6.7.11)



**வீடு விற்பனைக்கு**
இல.76, இலந்தைக்குளம் வீதி, அரியாலை மாம்பழம் சந்தி A9 வீதியிலிருந்து 500m தொலைவில் சகல வசதிகளுடன் கூடிய 2 பரப்பு குளி 16.75 காணியில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 516 9728
(மாலை 4 மணி முதல் 6 மணி வரை பார்வையிடலாம்) (38576)(3.6.711)

**Organ, Guitar**
**புல்லாங்குழல் வகுப்புகள்**
சிவிராய் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
சுரவீணா இசை மன்றம்
4, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர்.
077 703 1293 (38571)(3.6.711)

**தேவை**
பல சரக்குக் கடைக்கு கணக்கு வேலை தெரிந்த பெண் பிள்ளையும், விற்பனையாளர் ஆண் ஒருவரும் தேவை.
லிங்கம் ஸ்ரோர்ஸ், மானிப்பாய் வீதி,
தாவடி. 075 965 6965 (38573) (3.6.711)

**விற்பனைக்குண்டு**
தேக்கு மரம், பலா மரம்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 322 0855 (38574) (3.6.711)

**மணமகள்கள் தேவை**
* 69 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் லண்டன் பிராஜாவுரிமை பெற்று எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகனுக்கு 77 இல் பிறந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப் படமாட்டாது.
* 82 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 21 பாவம் உடைய Bsc முடித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் மண மகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 82 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 9½ பாவம் உடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 77இல் பிறந்த 2 இல் செவ்வாய் 31 பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகன் தேவை.

தொடர்பு: பாலக்கண்ணன் திருமணசேவை
435/3, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே. 077 607 0862

**சேவிஸ் ஸ்ரேசன் மெசினரிஸ்**
4, 8, 16, தொன் லிப்டுகள் (Hydraulic Hoist)
கொம் பிரசர் (Air Compressor)
பிரசர் பம்ப் (Washing/ High pressure pumps)
கிறிஸ் பம்ப் (Grease pumps/ Heavy duty)
வெக்கும் கிளீனர்ஸ் (Vacuum Cleaners)
ஓட்டோ லிப்ட், பைக் லிப்ட் (Hydraulic)
வீல் அலைன்குர் (Wheel Aligner), Tyre Changer, Tyre balancer
லீசிங் வசதி செய்து தரப்படும்
சகல திருத்துதல் வேலைகளும் செய்து தரப்படும்
SN - Tech
தொ.பே. 077 687 2656, 077 726 3181

**வேலை வாய்ப்பு**
வவுனியாவில் இயங்கிவரும் சர்வதேச DMI Optimo one world நிறுவனத்தில் புதிதாக வடக்கு - கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளுக்கு பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன. பயிற்சியுடன் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். பயிற்சியின் போது 10,000/= - 12,000/= வரையும் பயிற்சி யின் பின் 35,000/= ஆரம்ப சம்பளத்துடன் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம். குறைந்த கல்வி O/L. வயது எல்லை 18 - 30 வரை முதல் வரும் 25 நபர்களுக்கு மட்டும் தங்குமிடம், உணவு வசதிகள் இலவசம். (38560)(45.3.6)
தொடர்பு: 077 412 2203, 024 790 0171

**வீடு/காணி விற்பனைக்கு**
புலோலி தெற்கு, புற்றளைப்பிள்ளையார் கோயில் மற்றும் பாடசாலைக்கு அருகில் 3¼ பரப்பில் 6 Bed Rooms, வீடு கிணற்றுடன் அமைதியான சூழலில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 770 4303 (32274)(3.6.11)

**காணிகள் விற்பனைக்கு**
அல்வாய் மேற்கு, திக்கத்தில்
02 காணிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
நித்தியதுரை நடராஜா- 021 226 2687
Dr.இ.கனகலிங்கம்- 077 952 2105 (37616)(3.6.11)

**Room வாடகைக்கு**
A/C Non A/C Room மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 271 9039 (38567)(3.6.11)

**வீடு வாடகைக்கு**
யாழ். பாங்சால் வீதியில் 5 அறைகள் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு.
அலுவலக பாவனைக்கு உகந்தது.
இல.261, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். (38457)(3.6.11)

**வீடு வாடகைக்கு**
சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் A9 வீதியில் 4 1/2 பரப்பு காணியில் அமைந்துள்ள வீடு நீண்ட கால குத்தகைக்கு. வங்கிகள், கம்பனிகள், தொண்டர் நிறுவனங்களுக்கு ஏற்றது. விற்பனைக்கும் பரிசீலிக்கப்படும்.
தொடர்புக்கு- 077 9773252

**காணி வீடு விற்பனைக்கு**
கைதடி தெற்கில் சந்தியிலிருந்து கால் கி.மீ. தூரத்தில் பிள்ளையார் கோயில் றோட்டில் அமைந்துள்ள கட்டைபறித் தான் என்னும் நி.பர.5 விஸ்தீரண ஆதன மும் அதில் அமைந்துள்ள வீடும் விற்பனைக்குண்டு. (38553) (6.3)
தொடர்பு: 0779114705


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழிப் போதனையை அரபுக் கல்லூரியில் வழங்குங்கள்

## மதரஸாக்கள் குறித்த தவறான பிரசாரத்தை முறியடிக்க இதுவே வழி

கொழும்பு, ஜூன் 22

நாட்டிலுள்ள அரபுக் கல்லூரிகளின் போதனைகளில் சிங்கள மொழி போதனைக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று முஸ்லிம் கவுன்சில் ஒவ் ஸ்ரீலங்காவின் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் தெரிவித்தார்.

கன்னதோட்ட நூரியர் அரபுக் கல்லூரியின் 14 ஆவது வருட பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

> அரபுக் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் உலமாக்களுக்கு போதிய சிங்கள அறிவு இல்லை.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அரபுக் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் உலமாக்களுக்கு போதிய சிங்கள அறிவு இல்லை.

அதனால் சிங்கள மக்களுக்கு இஸ்லாம் பற்றி கூறமுடியாதுள்ளது.

மதரஸாக்கள் பற்றி கடும் போக்கு அமைப்புக்கள் தவறாக பிரசாரம் செய்கின்றனர். இந்தநிலையில் உலமாக்களுக்கு சிங்கள மொழியறிவு அவசியமாகின்றது. -என்றார். (ச-ரி)

# பொதுநலவாய மாநாட்டுக்காக 15 உபகுழுக்கள் நியமனம்

## ஏற்பாட்டு ஒழுங்குகளைக் கவனிக்க

கொழும்பு,ஜூன் 22

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளதால் அதற்கான முன்னேற்பாடுகளை அரசு துரிதவேகத்தில் ஆரம்பித்துள்ளது.


22 வருடங்களுக்குப் பின்னர் ஆசிய நாடொன்றில் நடைபெறவுள்ள முதலாவது பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு என்பதனால் அதற்கான சகல ஒழுங்குகளையும் சீராக செய்து முடிப்பதற்கு அரசு 15 உப குழுக்களை நியமித்துள்ளது.

வர்த்தம், வணிகத் துறை தொடர்பான குழுவுக்கு பிரதி வெளிவிவகார அமைச்சர் நியுமல் பெரேரா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இளைஞர் தொடர்பான உப குழுவுக்கு அமைச்சர் டலஸ் அலகப்பெரும தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் செயற்பாடுகள் தொடர்பான உபகுழுவுக்கு டாக்டர் சந்திரதாஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுக்கள் அடுத்தவாரம் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



# கொக்குவில் – நந்தாவில்
# கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்-2013

### ஆலயச் சிறப்பு

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணம் நகரிலிருந்து வடக்கே ஆறு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வனப்பும் வளமும் மிகுந்த ஊர் கொக்குவில். இவ்வூரின் மத்தியில் நந்தாவில் எனும் இடம் அமைந்துள்ளது. இங்குதான் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியான ஆதிபராசத்தி அன்னை மனோன்மணியாகக் கோயில் கொண்டு அருளாட்சி புரிந்து வருகின்றாள். இவ்வாலயம் காங்கேசன்துறை வீதிக்குக்கிழக்குப் புறமாக வயல்களும் குளங்களும் நிறைந்த நந்தாவில் தென்னந் தோப்புகள் நிறைந்த அம்பன் சோலைக்கு மேற்குப்புறமாக மா, பலா, கமுகு, பனைகளும் குடியிருப்புகளும் நிறைந்த கொக்குவில் - கோண்டாவில் எல்லையில் அமைந்துள்ளது. இயற்கை எழில் நிறைந்த இவ்விடத்தில் அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளி இருப்பது மிகப் பொருத்தமானதே. இக்கோயில் கொண்ட இடம் கற்கள் நிறைந்த கற்புலமாக இருந்தமையாலும், நந்தாவிலில் அமைந்தமையாலும் இவ்வாலயம் ''நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்'' என்ற பெயர் கொண்டழைக்கப்படலாயிற்று.

கஜபாகு மன்னன் காலத்தில் கண்ணகை அம்மன் கோயிலாக உருவெடுத்த இவ்வாலயம் மிகத்தொன்மையானது. காலக்கிரமத்தில் சாந்த மூர்த்தமான மனோன்மணி பிரதிஷ்டை செய்யப்பட்ட வரலாறுகொண்டது. வண்ணார்பண்ணை வைத்திலிங்கச் செட்டியாரால் 1790 ஆம் ஆண்டளவில் கற்கோயிலாகக் கட்டப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரிக் கோயிற் பதிவுகளில் இக்கோயிலில் இருநேரப் பூசைகள் இடம்பெற்ற தாகவும், ஜூன் மாதத்தில் பத்து நாள்கள் திருவிழா இடம் பெற்றதாகவும், தேர்த்திருவிழா இடம்பெற்றதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

படிப்படியாக வளர்ச்சியுற்ற இவ்வாலயம் இன்று அழகாகக் காட்சியளிக்கின்றது. ஆலயத்தின் முற்பக்கமாக ஐந்து அடுக்குக்கொண்ட இராஜகோபுரமும், தெற்கு வாசலில் அழகான கோபுரமும் அமைக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக் கின்றன. ஆலயத்தின் அமைப்பும், சூழலும், வெளிவீதியில் அமைக் கப்பட்ட தீர்த்தக் கேணியும், கைலாசவாகனம், மஞ்சம், தேர்க் கொட்டகைகளும் ஆலயத்துக்கு வருவோரை மெய் சிலிர்க்க வைப்பனவாக அமைந்துள்ளன. இங்கிருந்து அருளாட்சி புரியும் அன்னை மனோன்மணி கேட்டவர்க்கு கேட்ட வரம் தருகி றாள். அடியவர் துயர் போக்குபவராக உள்ளார். (C/9922) (5.6.3)

### பிரதம குருக்களின் வாழ்த்துச்செய்தி



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் மஹோற்சவம் 11 தினங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களை மஹோற்சவமானது குறிக்கிறது. அதில் அழித்தலை குறிக்கும் இரதோற்சவம் (தேர்த்திரு விழா) இன்று இந்த ஆலயத்தில் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வேளையில் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் பக்தர்களுக்கு அம்பாள் ஆணவமலத்தை அழித்து பக்தர்களுக்கும் எமது நாட்டிற்கும் நல்லருள் கிடைக்க வேண்டுமென்று நல்லாசி வழங்கி மனோன்மணி அம்பாளின் பாதங்களை பற்றுவோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்"

பிரதம குரு சிவஸ்ரீ
ஜெகநாத பாலசுப்பிரமணிய குருக்கள்.

### செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் திருவருளை அறியாதவர்களில்லை. மிகவும் அற்புதம் நிறைந்த அம்பாள் குடிகொண்டபதி. தன்னை நம்பி வணங்கும் அடியவர்களை நாடி வந்து அருள் செய்யும் அற்புத வரலாறு இத் திருக்கோயில் பற்றிய வரலாறுகளில் கூறப்படுகின்றது. இத் திருக்கோயில் தேர்த்திருவிழா பலவூர் மக்களும் ஒன்று கூடி வழிபடும் நன்நாள். இந் நாள் சிறக்க வாழ்த்துகிறேன். ஆலய நிர்வாக சபை மிகச் சிறப்பாக இந்த ஆலயத்தை வழி நடத்தி மேலும் மேலும் சமய நெறி சிறக்க உழைக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர்,சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்.



### அருளமுதம் சொரிந்திடவே சித்திரத் தேரேறி வந்திடம்மா

தென்றல் தவழ்ந்து வரும் தென்னஞ் சோலையும்
செந்நெல் விளைதரு வான்பார்த்த கழனியும்
கற்பார் கொண்ட தேர் கவினுறு புலமும்
நந்த வனத்துடன் நற்பெருங் கருணையும்
தாவும் இசையும் பகர் சைவ நெறியும்
கொண்டிலங்கு பதியில் உறைகின்ற தாயாம்
சாந்த சொரூபி மனோன்மணி அம்மா!
தரணியில் தருமம் தழைத்தோங்க வருகின்றாள்
அடியார் வினைதீர்த்து அருளமுதம் பொழிந்திடவே
சித்திரத் தேரேறிச் சுற்றி உலா வருகின்றாள்
அவள் அருளாட்சி பெற்றுய்ய அடியோம்
நெக்குநெக்குருகி அவள் பாதம் பணிந்திடுவோம்.

திருக்கோயில்களில் நடைபெறும் உற்சவங்களில் தலையாயது தேர்த்திருவிழா. இது இறைவனது திருவருட் பெருந்தத்துவத்தை உணர்த்துவது. இன்று அன்னை மனோன்மணி அழகுறு தேரேறி வீதியுலா வரவுள்ளாள்.

அவள் தேரில் ஆரோகணித்து வரும் காட்சி அற்புதமானது. இந்த நன்நாளில் நாமும் அவள் சந்நிதானம் சென்று அருட்காட்சி கண்டு எமது இன்னல்கள் துயரங்களை நீக்கிடுவோம்.

வடத்தினைத் தொட்டு இழுத்து பிறவிப் பிணி போக்கிடுவோம்.

பரிபாலன சபை,
நந்தாவில் கற்புலத்து மனோன்மணி
அம்பாள் ஆலயம்,கொக்குவில்.

*******விளம்பர அனுசரணையாளர்கள்********

G.T.V.ENTERPRISES
COURIER SERVICES
Head: 18/3,Dr.E.A.COOZAY M.W. CO-06
011 236 0926
225,KASTHURIYAR ROAD,
JAFFNA. T.P;021 222 4338

SHADONI
COURIER SERVICES
272,K.K.S.ROAD, JAFFNA.
021 222 8591

WESTERN UNION Sangeetha Agent
உலகின் எப்பாகத்திலிருக்கும் எங்கள்
உறவுகளுக்கும் இங்கிருந்தவாறு உணவுவகைகள்,
புடைவைகள் மற்றும் வீடியோ கசற், CD க்கள்
என்பவற்றை மிகவும் துரித கதியில்
அனுப்பிப் பெற்றுக்கொள்ள இப்போது நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
சங்கீதா ஏஜன்ட்
412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
மத்திய பஸ் நிலையம் முன்பாக (HNB அருகில்)
தொ.பேசி: 021 222 2525
பக்ஸ்: 021 222 8546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச மருத்துவ முகாம் நெடுந்தீவில் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 22
நெடுந்தீவு மக்களின் வசதி கருதி இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்றும் நடைபெறவுள்ளது. நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் நடைபெறும் குறித்த மருத்துவ முகாம் நெடுந்தீவு கடற்படையினரின் ஏற்பாட்டில் நேற்று ஆரம்பமானது. இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு, குருதி அமுக்கம் தொடர்பான பரிசோதனைகள் உட்பட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன. கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-7-86)

## ஜி.சீ.ஈ.உயர்தர மாணவருக்கான உதவிக் கருத்தரங்கு

2013 ஓகஸ்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள மாதிரி வினாத்தாள்களுக்கான உதவிக் கருத்தரங்கு யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு ஐந்து மத்திய நிலையங்களில் நாளைமறுதினம் 24 ஆம் திகதி ஆரம்பமாகிறது.
நேர அட்டவணையும் நடைபெறவுள்ள மத்திய நிலையங்களும் தொடர்பான தகவல்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பட்டுள்ளன. மாணவர்கள் தத்தமக்குரிய நிலையங்களில் இக் கருத்தரங்கிற்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ஒ)

## நினைவுக் கூட்டம்

மலையக தொழிற் சங்கத்தைச் சேர்ந்த ஒ.ஏ. இராமையாவின் நினைவுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டம் யாழ். டி.சி.எம்.தனியார் கல்வி நிறுவனத்தில் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறும்.(ந)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
அருட்செல்வவினாயகம்
திலகவதி
(நிரந்தர தர்மகர்த்தா மனேச்சர் - துன்னாலை கிழக்கு - வெல்லிக்கந் தோட்டப் பிள்ளையார்)
திதி: சதுர்த்தசி (22.06.2013)
தோற்றம் 19.09.1921
மறைவு 03.07.2001

அன்பின் தெய்வமே அம்மா!
ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எங்கள் மனதை
விட்டு நீங்காது!

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்
தர்மலிந்தனை
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.09.1936
மறைவு 02.07.2012

அமரர் அன்னம்மா தங்கராஜா

ஓர் ஆண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை மேற்கு,
சங்கானை.
(38351)(3.6.11)
குடும்பத்தினர்.

## 'எழுதாத ஒரு கவிதை' நூல் வெளியீடு

வடமராட்சி, ஜூன் 22
பருத்தித்துறை பிரதேச செயலரான கவிஞர் இ.த.ஜெயசீலனின் ''எழுதாத ஒரு கவிதை'' என்னும் கவிதை நூல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை உபதலைவர் இ.து.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், ஓய்வு நிலை பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி, வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை உப செயலாளர் யோ. இருதயதாஸ் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவார்கள். (ந-8)

## நிறுவுநர் தினமும் பரிசில் நாளும்

யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் ப.சிவலோகநாத தேசிகர் தலைமையில் நடைபெறும். (ந)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 11.03.1912
மறைவு 23.05.2013



அமரர் சபாபதிப்பிள்ளை
வள்ளிப்பிள்ளை

கடந்த 23.05.2013 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயார் சப்பாபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (22.06.2013) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோயிலடி,
கல்வயல், சாவகச்சேரி.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்.
(38455)(3.6.13)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
இராமலிங்கம்
கனகரத்தினம்
(பப்பா)
மலர்வு:- 14★02★1923
உதிர்வு:- 23★05★2013


நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் நாம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 23.05.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (22.06.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தொட்டிலடி, சங்கானை.
குடும்பத்தினர்.
(C/9927)(2.6)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17.06.1937
விண்ணில் 11.06.2010

அமரர் செல்லையா பஞ்சலிங்கம்
திதி: 22.06.2013

R. Cy. Navy, Master C.P.O.
wireless Instructor, Retired Naval Officer
Merchant Ship (R.0) &
Hotel V.A.P. Owner, Chunnakam.

எமது வாழ்வில் சோதியாக சுடர் விட்டு பிரகாசித்தவரே அன்புக்கும், பாசத்துக்கும், பண்புக்கும் இலக்கணமான என் நாயகரே மூன்று ஆண்டுகள் பிரிந்து விட்டாலும் ஆறாது எம் துயரம் ஆயுள் உள்ள வரையும் உம் நினைவுகளோடு. மறவேன்.

அன்பு, பாசம் இவைகளை எமக்கு ஊட்டி வளர்த்த
எங்கள் பாசம் நிறைந்த அன்பு அப்பாவே! மறு பிறவியிலும் உங்கள்
பிள்ளைகளாகப் பிறக்க வேண்டுகிறோம்.

அன்புடனும் பாசமுடனும் எங்களை அரவணைத்து எங்களுக்கு பல வழிகளிலும்
உறுதுணையாய் இருந்த எங்கள் பாசமிகு மாமாவே.

அன்பும், பாசமும் நிறைந்த எங்கள் பாசமுள்ள தாத்தாவே!
உங்களை எந்நாளும் நினைப்போம்

எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டும்

முத்துக் கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெங்கு தேசிய நிகழ்வுகள் கிளிநொச்சி, குருநாகலில்

கொழும்பு,ஜூன் 22
இந்த வருட சர்வதேச தெங்கு தினத்தை யொட்டிய தேசிய நிகழ்வுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் குருநாகல் மற்றும் கிளிநொச்சி நகர்களில் நடைபெறும் என்று தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்ப குமார தெரிவித்தார்.

இந்த நிகழ்வை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

ஆசிய பசுபிக் தெங்கு சமூகத்தினர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதியை சர்வதேச தெங்கு தினமாகப் பிரகடனப் படுத்தியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சர்வதேச தெங்கு தின நிகழ்வுகளில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், உள்நாட்டைச் சேர்ந்த தெங்குச் செய்கையாளர்கள், கைத் தொழிலாளர்கள், ஏற்றுமதியாளர்கள் என 6000 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்ற உள்ளனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிகழ்வில் சிறந்த தெங்குச் செய்கையாளர், சிறந்த நாற்று மேடையாளர், சிறந்த ஏற்றுமதியாளர், சிறந்த கைத் தொழிலாளர் போன்றோர் தெரிவு செய்யப்பட்டு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ச)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு நாகமுத்தன் (சடையப்பா)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது இல.207, தேக்கவத்தை வவுனியாவில் வசித்து வந்தவருமான கார்த்திகேசு நாகமுத்தன் (சடையப்பா) அவர்கள் 20.06.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு -சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், மாரிமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குழந்தை வேலு- வேலாசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், செல்வராணி, புவனேஸ்வரி, தனபாலசிங்கம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி, ஞானேஸ்வரி, மதியழகன் (மதி) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவரான அருட்சோதி மற்றும் கோவிந்தராசா, கஸ்தூரி, காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், அனுசியா, காலஞ்சென்ற பிரகலாதன் மற்றும் ரசிகா, தனு ஷியா, கௌசியா, துஷ்யந்தன், அபிநயா, டிலானி, பெஸ்டியன், குணாளன், அபிஷனா ஆகியோரின் பேரனும், திலக்ஷ னின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 207, தேக்கவத்தை,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
077 965 2614

(35278)(3.6.7.11)

## டெங்குவால் இதுவரை 42 பேர் சாவு

கொழும்பு,ஜூன் 22
இந்த வருடம் டெங்குக் காய்ச்சலால் இதுவரை 42 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 14 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று அமைச் சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருக்கம் தடுக்கப்படாவிட்டால் டெங்கு காய்ச்சல் துரிதமாக பரவும் அபாயம் ஏற்படும் என கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் கூறியுள்ளார்.

## 31ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



"ஆண்டவரே உமது நீதிக்கேற்ப என்னை வழிநடத்தும் ஏனெனில் நான் உம்மையே நம்பியுள்ளேன்"

மலர்வு
22.06.1982

உதிர்வு
14.11.2010

அமரர்
### ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் (றீகன்)

அன்பின் றீகாவே! பிறந்தநாள் வாழ்த்துக் கூற
ஆசையாக அணைத்து மகிழ்ந்திட
நீயில்லையடா. நிம்மதி இழந்து
நிர்க்கதியாக நிற்கின்றோம் நாம்.
கடவுளும் உன் கதை முடிக்க
கண்மூடி இசைந்ததும் ஏனோ?
நாமெல்லாம் உன் நினைவுகளுடன்...
விண்ணிலிருக்கும் உந்தனுக்கு
மண்ணிலிருந்து வாழ்த்துமடல்
அனுப்புகின்றோம் ஏற்றிடுவாய்.....




கு. ஜஸ்ரின் குடும்பத்தினர்.
புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(38590)(10,7,16)

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு சிவபாலன் (சிங்கர் சிவா)



கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிவபாலன் (சிவா) 20.06.2013 காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (சிங்கர்) மற்றும் சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம்- அசுவதி தம்பதியரின் மருமகனும், கவிதா (சுவிஸ்), ஜெயந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), சுதாகரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), அருந் தஷா (மாணவி-கொ/ மெதடிஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசநாயகம் (பாபு-சுவிஸ்), செல்வதர்ஷினி (ஆஸ்திரேலியா), தக்சாயனி (சிங்கப்பூர்), ஆகியோரின் மாமனாரும், சிவநாதன் (திரு வீடியோ விஷன்- லண்டன்), சிவராணி, சிவநேசன் (சுவிஸ்), சிவகு மாரி (சுவிஸ்), சிவகௌரி, சிவரஞ்சினி (ஆசிரியை, உடுப்பிட்டி அ.மி. கல்), சிவதாசன் (சுவிஸ்), சிவமாலினி (கனடா) ஆகியோரின் சகோ தரனும், நிதுஷா, நிசோக், நிமிதா, அபினாஷ், விதுஷனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கரணவாய் வடக்கு,
கரவெட்டி.
021 226 4289

தகவல்:
குடும்பத்தினர்.

(C/9945) (10,7,16)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வாரித்தம்பி தம்பிப்பிள்ளை



வதிரி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வாரித்தம்பி தம்பிப்பிள்ளை (ஸ்தாபகர்-திஸா ஸ்ரோர்ஸ், நெல்லியடி) கடந்த (19.06.2013) புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா-பத் தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அன்னப்பிள்ளை, கந்தையா, ஆறுமுகம், சின்னத்தம்பி, கதிராசிப் பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும்மீனாட்சியின் (சந்தனம்) பாச மிகுந்த கணவரும், சின்னையா, செல்லாச்சி ஆகியோரின் மைத்துனரும், இரஞ்சினி, இரவீந்திரன் (உரிமை யாளர்- திஸா ஸ்ரோர்ஸ், நெல்லியடி), Dr. இராசேந்திரன் (நரம்பியல் நிபு ணர்-குருநாகல் வைத்தியசாலை), இரகுனேந்திரன் (சுவிஸ்), இராஜலோஜினி (கனடா), இராஜ்குமார் (லண்டன்), Dr. இராஜநந்தினி (மூட்டுவாத வைத்திய நிபுணர்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனக சிங்கம் (ஓய்வுநிலை உதவிக் கணக்காளர் நாயகம்), ஜெயசிறி, Dr.பிரேமினி (தோல் வைத்திய நிபுணர்- பாணந்துறை), ஆனந்தி (சுவிஸ்), முருகானந்தன் (பொறியியலாளர்- கனடா), மேனகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவச்செல்வன் (லண்டன்), சிவநீதன் (நிறைவேற்று முகாமையாளர்-அலோய் எக்ஸ்போட்), Dr. சுஜிதா, சிவசுதன் (யாழ். மருத்துவ பீட மாணவன்), சிந்துஜன், சாருஜன், அபினாஷ், அபிர்தன், அபிராம், ஆதர்சன், அனுசன், அக்சயன், டனிஸ், ஆர்த்திகன், ஜெசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, காலை 9.00 மணியளவில் பூதவுடல் ஆலங் கட்டை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வதிரி,
கரவெட்டி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(C/9948) (10,7,16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்கத் தொடர்ச்சி

# குடாநாட்டு வர்த்தகர்களிடம் பொலிஸ் உதவியுடன் கப்பம்

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார். நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதியில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று உள்ளது. அதனை அண்மித்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களிடமே இவ்வாறு கப்பம் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை வீதியில் பொலிஸார் சீருடையில் கடமையில் நிற்பர். அவர்களது கைத்தொலைபேசிகளுக்கு சிலர் அழைப்புக்களை மேற்கொள்வர். அதில் தம்மைப் பொலிஸார் என்று கூறும் நபர்கள் குறித்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களிடம் கைத்தொலைபேசியைக் கொடுக்குமாறு கூறுவார்கள்.

பொலிஸாரும் அவ்வாறே கைத்தொலைபேசியைக் கொண்டு சென்று வர்த்தகர்களிடம் கொடுப்பார்கள். மறுமுனையில் பேசுபவர் தான் ஒரு பொலிஸ் உயர் அதிகாரி என்றும் தனக்கு ஒரு தொகைப் பணம் வழங்க வேண்டும் என்றும் அதனை வழங்க மறுத்தால் வவுனியாவுக்கு விசாரணைக்கு அழைக்க வேண்டி வரும் என்றும் வர்த்தகர்களை அச்சுறுத்தும் பாணியில் பேசுகின்றார். ஒரு சில வர்த்தகர்கள் இவ்வாறு கப்பம் செலுத்தியுள்ளனர். சிலரிடம் இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட தடவை கப்பம் கோரப்பட்டுள்ளது. சில வர்த்தகர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

இந்த நிலையிலேயே கப்பம் கோருவோர் தொடர்பிலும் அதனுடன் தொடர்புடைய பொலிஸ் குறித்தும் வர்த்தகர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதற்கு அனுசரணையாகச் சென்ற பொலிஸார் சிலர் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதனால் யாழ். பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் நேற்று வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கேட்டபோது இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸாருக்கு அழைப்பை ஏற்படுத்துபவர்கள் தாமும் பொலிஸார் என்றே கூறியுள்ளனர். அவர்கள் தொடர்பிலும் கப்பம் கோரலுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று கூறப்படும் பொலிஸார் தொடர்பிலும் தனித்தனியே விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசாரணையின் பின்னரே ஏனைய விடயங்கள் தெரிய வரும் என்றார். ஜெப்றி. (த-4)

# பொறுப்பற்ற விதத்தில் பொய்யுரைக்கும் அமைச்சர்

'உதயனில்' கடந்த 16 ஆம் திகதி வெளியான நேர்காணலில் 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்ட பின்னர் வடக்கு மாகாணசபைத் தேர்தல் இடம்பெறுவதாக இருந்தால் அதில் போட்டியிடுவது தமிழ் தரப்புகளுக்கு உசிதமானது அல்ல' என்று தெரிவித்திருந்தேன் அதையே அவர்களும் பிரசுரிந்திருந்தார்கள்.

13 ஆவது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கிய பின்னர் நடத்தப்படும் வடக்குத் தேர்தலில் வடக்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது என நான் ஒருபோதும் கூறவில்லை. அப்படியிருக்கையில் சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் நான் மேற்கண்டவாறு தெரிவித்தாக ஊடாக அமைச்சரிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

மிக முக்கியமான பொறுப்பிலுள்ள ஊடக அமைச்சர் கேள்விக்குப் பதிலளிக்க முன் குறித்த ஊடகவியலாளரிடம் எந்த ஊடகத்தில் மேற்படி செய்தி வெளியானது என்பதை ஆராய்ந்து பார்த்த பின்னர் பதிலளித்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து பொறுப்பற்றதனமாக அமைச்சர் பொய்யுரைக்கக் கூடாது. பொதுபல சேனா அமைப்பு போன்று ஊடாக அமைச்சர் பொறுப்பற்ற விதமாகப் பதிலளித்திருக்கிறார். இது எனக்கு மிகுந்த மன வேதனை அளிக்கின்றது. சிங்கள ஊடகங்கள் என்னைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு இதனைச் செய்திருக்கலாம்.

தமழ் ஊடகங்ளில் வருவதை தமிழ் ஊடகங்களில் பார்க்க வேண்டும். அதனை விடுத்துத் திரிபுபடுத்திய செய்திகளை கேட்டு அமைச்சர் பதிலளிக்கக் கூடாது.

எனவே, மேற்படி பொய்யான தனது கருத்தை அவர் மீளப் பெற வேண்டும். – என்றார்.

(த-5)

# வடக்கில் நிதி நெருக்கடியால் வர்த்தகர்கள் பெரும் பாதிப்பு

படுவதாக சமூக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கி எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்பது தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்குள்ள வர்த்தகர்களுக்கு இடையில் காணப்படுகின்ற மிதமிஞ்சிய போட்டி காரணமாகப் பெருமளவு பணம் முடக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்து என்ன செய்யலாம் என்ற எந்தத் திட்டமுமின்றி முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருள்களின் விற்பனைப் பிரதிநிதிகள், முகவர்களின் திணிப்பை ஏற்றுக் கொண்டு பொருள்களை அளவுக்கு அதிகமாக வாங்கித் தமது இருப்பில் வைத்துக் கொள்கின்றனர்.

வாடிக்கையாளர்களின் கொள்ளளவை கணிக்காமல் அளவுக்கு அதிகமான பொருள்களை வாங்கிக் குவித்துப் பணத்தை முடக்குவதும் பின்னர் அவற்றுக்காக அதிகூடிய (மீற்றர்) வட்டிக்குப் பணம் வாங்குவதுமே வடமாகாண வர்த்தகர்களின் நிதிப்பிரச்சினைக்குப் பிரதான காரணம் -என்றார்.

வங்கிகளின் அறவிடமுடியாக் கடன்தொகை அதிகரித்துச் செல்வது தொடர்பில் கேட்டபோது; நிதி நிறுவனங்களின் கடுமையான போட்டியே இதற்கான காரணம்-என்றார்.

தற்போதைய நிதிப்பிரச்சினை தொடருமாக இருந்தால் இரண்டு வருடங்களில் வடமாகாண வர்த்தகர்கள் கடுமையான பாதிப்பை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்களை இலங்கை மத்திய வங்கி, வர்த்தகர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக ஆரம்பித்திருப்பதாக குறிஞ்சிதரன் மேலும் குறிப்பிட்டார். (த-5)

# '13' குறித்து எதுவுமே பேசவில்லை இந்தியா

வெல, சரத் அமுனுகம, அநுர பிரியதர்ஷன யாப்பா, எஸ்.பி. திஸாநாயக்க. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போதே மேற்கண்டவாறு கூறிய ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியா கவனஞ்செலுத்துவதாக ஊடகங்கள்தான் சொல்கின்றன. ஆனால், எங்களுக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எமது நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம். 13ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதில் அனைத்தும் பேசப்படும். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நாங்கள் மீறியதாக சொல்லப்படுகிறது. அது தவறு. ஒப்பந்தத்தைச் செய்தவர்கள்தான் அதனை மீறினர். ஒப்பந்தத்தின் 2/10 என்ற பிரிவை வாசித்துப் பாருங்கள். ஒப்பந்தத்தின்படி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை யார் மீறியது? அது சரிசெய்யப்படவேண்டும்.

**எங்கும் பிரச்சினை**

பொலிஸ் அதிகாரங்கள் பற்றிப் பேசப்படுகிறது. அண்மையில் நடந்த சம்பவமொன்றைப் பாருங்கள். வடமேல் மாகாண சபைக்குப் பொலிஸ் அதிகாரங்களைக் கொடுத்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? மாகாணசபைகளுக்குப் பொலிஸ் அதிகாரத்தைக் கொடுத்தால் தெற்கிலுள்ள எனது வீட்டுக்கும் போகமுடியாது. அதற்கும் அனுமதி கேட்கவேண்டிவரும். இப்போது வடக்கில் மட்டும்தான் பிரச்சினை இருப்பதாக நினைக்கவேண்டாம். பிரச்சினை தெற்கிலும் இருக்கிறது. முழுநாட்டிலும் இருக்கிறது. 13ஆவது திருத்தம் குறித்தும், அதிகாரங்கள் குறித்தும் இப்போது பெரிதாகப் பேசப்படுகிறது. ஆனால், எல்லோரும் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். எந்தவொரு நாடும் தமது அரசியல், பாதுகாப்பு மற்றும் இதர உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கேற்பதான் தீர்மானங்களை எடுக்கும். அண்மையில் தொண்டமான் கூட இந்தியா சென்றிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சென்றிருந்தது. அதில் எனக்குப் பிரச்சினையில்லை.

நாம் எமது பக்க நியாயங்களை வெளிநாடுகளிலுள்ள எமது தூதரகங்கள் ஊடாக சர்வதேச சமூகத்திடம் தெரிவித்து வருகிறோம். இன்னமும் சர்வதேச ரீதியில் புலிகளின் பரப்புரை முன்னணியில் இருக்கிறது. அப்போது ஆயுதங்களுக்காக செலவழித்தவர்கள் இப்போது பிரசாரங்களுக்குச் செல்கின்றனர்.

**வெள்ளையானை தான்!**

13ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது வெள்ளையானைதான். அற்காக அதனை உயிருடன் புதைத்துவிட முடியாது. அதிலும் சில வேலைகளை வாங்கவேண்டியுள்ளது. மாகாணசபை முறைமையில் எமக்கு முழு அளவில் நன்மைகள் இல்லை. சில நன்மைகளே இருந்தன. அதிகாரங்களை ரத்துச்செய்து, மாகாணசபைகளைக் குறைத்து அந்த முறைமையையே நீக்குவோம் என்று நாங்கள் கூறினால் ஊடகவியலாளர்களான நீங்களே எங்களுக்கு எதிராக வருவீர்கள். எனவே, பேச்சுகளை நடத்தியே நாங்கள் உரிய தீர்மானம் எடுப்போம்.

இந்த விடயங்கள் தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடனும் பேசவேண்டும். அன்று இது பலவந்தமாகக் கொண்டுவரப்பட்டபோது அதற்கெதிராக நாம் ஊர்வலம் சென்றோம். சி.ஐ.டியில் பலமணிநேரம் வாக்குமூலம் கொடுத்தோம். எனது காதுக்கு அருகில் துப்பாக்கியின் ரவையொன்று பாய்ந்து சென்றது. பலாத்காரமாகத்தான் இது எம்மிடம் திணிக்கப்பட்டதென்பதை நீங்களும் புரிந்து கொள்வீர்கள். இந்த விடயத்தில் நாங்கள் அவதானத்துடன் இருக்கிறோம். ஆனால் ஒரேயடியாக இதில் மாற்றங்களைச் செய்துவிட முடியாது என்றார் ஜனாதிபதி ராஜபக்ஷ.


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 30 04 1944



இறைவன் மடியில் 20 05 2013

(திதி - ஏகாதசி)

மலேசியாவை பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் பின்பு கொழும்பில் வசித்தவருமான

**திருமதி. மணிமேகலை சிவானந்தராஜா**
**(தேவி அக்கா)**

அன்பு முகம் கொண்டு ஆறுதல் மொழிதந்து - இவ்வுலக வாழ்வில்
தூண் என துணை நின்ற இதய தெய்வமே - நீர்
இல்லாமல் போகவில்லை இறையோடு இணைந்து விட்டீர் - எம்
நினைவோடு கலந்து விட்டீர் - உம்
நிழலில் வாழ்ந்த நினைவுகளோடு
ஆன்ம ஈடேற்றத்திற்காய் பிரார்த்திக்கின்றோம்!

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு பல உதவிகள் புரிந்தவர்களுக்கும், மரணச் சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டோருக்கும், மற்றும் நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையங்களை வைத்து துயர் பகிர்ந்தோருக்கும், பல உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

இல. 348, காலி வீதி,
கொழும்பு 06.

டாக்டர் சி. சிவானந்தராஜா (கணவர்)
(பேரவை உறுப்பினர் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)
மகன்மார்கள், மகள், மருமகள்
பேரன், பேத்தி

(C9949)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை இராசமணி



கேசரி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசமணி நேற்று (21.06.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.
(C79945) (10.7.16)

தகவல்: பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

### பொன்னுத்துரை இரத்தினசபாபதி (குணரத்தினம்)



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொ.இரத்தினசபாபதி (குணரத்தினம்) நேற்று (21.06.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற செ.குணரத்தினம் மற்றும் இலட்சுமி தம்பதியரின் மருமகனும் மனோறஞ்சினியின் அன்புக் கணவரும் ஜெயசுதா, ஜெயரகு, ஜெயறஜிந்தன் (பிரான்ஸ்), ஜெயரதீபன் (டோகா), ஜெயநிசா ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்த்தீபன், நிசாந் தினி (சத்தியா) ஆகியோரின் மாமனும் கபிலாஸ், சியாத் ஆகியோ ரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2013) சனிக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை
(சி/9946)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜுன் 22
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் எவறெஸ்விளையாட்டுக்கழகம்
பி.ப. 4.30 மணி
ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம்.(ற-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜுன் 22
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:
காலை 8 மணி
நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழகம்.
பி.ப. 2 மணி
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம். (ற-23)

★ ★ ★


யாழ்ப்பாணம், ஜுன் 22
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை டைமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
வலைப்பாடு 'பி' அணி எதிர் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம்
பி.ப. 4.30 மணி
வலைப்பாடு 'ஏ' அணி எதிர் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜுன் 22
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் பிரிவு III, 15 வயது அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்:
சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி (ஸ்கந்தவரோதயா மைதானம்)
மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி (சென்.ஜோன்ஸ் கல்லூரி) (ற-23)



# வென்றது சென்.பற்றிக்ஸ்



யாழ்ப்பாணம், ஜுன் 22
மற்றிஸ் கோம்ஸ் நிறுவனத்தின்அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்ட சங்கம் பாடசாலைகளுக்கிடையே நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆடவருக்கானகூடைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டமொன்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும்யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.
விறுவிறுப்பான நடைபெற்ற ஆட்டத்தில் 58:57 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ற-23)

# உதைபந்து மத்தியஸ்தர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 22
பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வதிரி கிராம அலுவலர் அலுவலகத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# கரப்பந்து, வலைப்பந்து போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜுன் 22
வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கு இடையே நடத்தும் ஆண், பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் இன்றும் நாளையும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
(ற-23)

## வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையான உதைபந்தாட்டம்

# மன்னார் சென்.சேவியர் மாகாணச் சம்பியன்




மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், ஜுன் 22
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் மாகாண மட்ட உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் 19 வயது ஆடவர் பிரிவில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணி வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் களமிறங்கின.
ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணி 5:0 என்ற கோல்கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் முழங்காவில் மகா வித்தியாலய அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதியது.
அதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ற-23-422-433-400)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி

# சென்.ஜோன்ஸ் 'பி' அணியை வீழ்த்தியது யாழ். சென்றல்



யாழ்ப்பாணம், ஜுன் 22
இலங்கை பாடசாலை துடுப்பாட்ட சங்கம் அகில இலங்கை ரீதியாக நடந்தும் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையான, பிரிவு 111 இன் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளது.
கடந்த புதன்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி'பி'அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி களமிறங்கியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி'அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதையடுத்து களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி, 38 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.
அஜந்தன் 25 ஓட்டங்களையும், சுவிஸ்சன் 14 ஓட்டங்களையும், அபிலக்ஸ்சன் 11 ஓட்டங்களையும் தமது சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் செந்தூரன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், கௌதமன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், நிசான் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
97 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி அணி 27 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.
கார்த்தீபன் 23 ஓட்டங்களையும், டினோசன் 18 ஓட்டங்களையும் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி சார்பில் சுவிசன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சறோபன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், டானியல் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
(ற-23)

# வடமாகாண பெரு விளையாட்டு வலயங்கள் பெற்ற புள்ளிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில், கல்வி வலயங்கள் இதுவரை பெற்றுள்ள புள்ளிகளின் விவரங்கள் வருமாறு:
யாழ்ப்பாணம் 431 புள்ளிகள், வலிகாமம் 255 புள்ளிகள், வடமராட்சி 212 புள்ளிகள், கிளிநொச்சி 114 புள்ளிகள், முல்லைத்தீவு 99 புள்ளிகள், மன்னார் 80 புள்ளிகள், வவுனியா வடக்கு 68 புள்ளிகள், தென்மராட்சி 63 புள்ளிகள், வவுனியா தெற்கு 53 புள்ளிகள், தீவகம் 27 புள்ளிகள், துணுக்காய்14 புள்ளிகள்.
(ற-23-400-433-422)




வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வடமாகாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் முதற்தடவையான வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டு முயற்சியே வெற்றிக்கு காரணம்




சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கெதிரான ஆட்டத்தில் வெற்றிபெறுவதற்கு தாமே முக்கிய காரணம் என கூற வேண்டாம் என இந்திய வேகப் பந்துவீச்சாளர் இஷாந் ஷர்மா கூறியுள்ளார்.

அணியாக இணைந்து செயற்பட்டமையே இந்த வெற்றியை பெறுவதற்கு காரணம் எனவும் இஷாந் ஷர்மா சுட்டிக்காட்டியுள்ளார்.

குமார் சங்கக்கார, லஹிரு திரிமான்ன மற்றும் திஸர பெரோ ஆகியோரின் இலக்குகளைக் கைப்பற்றிய இஷாந் ஷர்மா போட்டியின் சிறப்பாட்டக்காளராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (ற)

## டில்ஷான் இல்லை

மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வீரர் திலகரத்ன டில்ஷான் பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாகவே அவர் இந்தப் போட்டியில் பங்கேற்கவில்லை.

இலங்கை, இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆகிய அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் இம்மாதம் 28ஆம் திகதி, மேற்கிந்தியதீவுகளில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)




நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ண அரையிறுதியாட்டத்தில்....

# வெட்கப்பட மாட்டோம்

## இலங்கையணித்தலைவர் மத்தியூஸ்

நாணய சுழற்சியில் தோல்வியடைந்தமை மற்றும் திலகரத்ன டில்ஷான் உபாதைக்கு உள்ளானமை ஆகியனவே இந்திய அணிக்கெதிரான ஆட்டத்தில் தமது அணி தோல்வியடைய முக்கியக் காரணமாக அமைந்தன என்று இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் இந்திய அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததை அடுத்து கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பலம் வாய்ந்த துடுப்பாட்டத்தைக் கொண்டுள்ள இந்திய அணியை வெற்றி கொள்வதற்கு 181 ஓட்டங்கள் போதுமானது அல்லவெனவும் அஞ்சலோ மத்தியூஸ் குறிப்பிட்டுள்ளார்.

வீரர்களின் முதலாவது இலக்கான அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியதால், தமது அணி வெட்கப்பட வேண்டிய ஓர் அணி அல்லவெனவும் அஞ்சலோ மத்தியூஸ் கூறியுள்ளார்.




கார்டிப் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயசுழற்சியை தாம் முக்கியமானதாக கருதிய போதிலும், அது சாதகமாக அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் நேற்றைய போட்டியில் நம்பிக்கை நட்சத்திரமாக கருதப்பட்ட லசித் மலிங்க பிரகாசிக்க தவறியமை குறித்து அவர் எந்தவொரு விமர்சனத்தையும் வெளியிடவில்லை.

கார்டிப் மைதானத்தில் காணப்பட்ட வானிலை காரணமாக அவரின் பந்துவீச்சு சாதகமாக அமையவில்லை என இலங்கை அணித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## மீண்டும் பீற்றர்சன்

நியூஸிலாந்துக்கெதிரான இரண்டாவது '20/20' ஆட்டத்தில் விளையாடுவதற்கு. இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகள் இரண்டு ஆட்டங்கள் கொண்ட சர்வதேச '20/20' தொடரில் மோதவுள்ளன. இந்தப் போட்டிகள் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் ஜூன் 25, 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இத்தொடருக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அதில் நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன் மூன்று மாதத்துக்குப் பின்னர், மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் முழங்காலில் காயமடைந்த இவர், இந்தியாவில் நடந்த ஆறாவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர், நியூஸிலாந்துக்கெதிரான டெஸ்ட், ஒருநாள் தொடர் மற்றும் இங்கிலாந்தில் நடக்கும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் ஆகியவற்றில் விளையாடவில்லை.

தற்போது காயத்தில் இருந்து மீண்ட பீற்றர்சன், ஜூன் 27ஆம் திகதி நடக்கவுள்ள நியூஸிலாந்துக்கெதிரான இரண்டாவது '20/20' ஆட்டத்துக்கு மட்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் 36 சர்வதேச '20/20' போட்டியில் 7 அரைசதம் உட்பட 1, 176 ஓட்டங்கள் எடுத்துள்ளார். கடைசியாக, கடந்த பெப்ரவரி மாதம் அபுதாபியில் நடந்த பாகிஸ்தானுக்கெதிரான '20/20' போட்டியில் விளையாடினார்.

இங்கிலாந்து அணி : இயான் மோர்கன் (அணித் தலைவர்), ரவி போபரா, ஜோஸ் பட்லர், ஜாதே டெர்ன் பாக், மைக்கேல் லம்ப், அலெக்ஸ் ஹேல்ஸ், டானி பிரிக்ஸ், கேரி பாலன்ஸ், பாய்டு ரான்கின், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் டிரட்வெல், கிறிஸ் வோக்ஸ், லூக் ரைட், கெவின் பீற்றர்சன் (ஜூன் 27ஆம் திகதி போட்டிக்கு மட்டும்).

இப்போட்டிக்கான நியூஸிலாந்து அணியில், காயம் காரணமாக டனியல் வெட்டோரி (குதிகால்), டிம் சவுத்தி (கணுக்கால்), கிராண்ட் எலியாட் (கெண்டைக்கால்) ஆகியோர் நீக்கப்பட்டனர். இவர்களுக்கு பதிலாக ஹமிஷ் ரூதர்போர்டு, டாம் லதாம், ரோனீல் ஹிரா இடம் பிடித்துள்ளனர். அதேபோல வில்லியம்சன், லூக் ரோஞ்சி ஆகியோருக்கும் இடம் கிடைக்கவில்லை.

நியூஸிலாந்து அணி: பிரண்டன் மெக்கலம் (அணித்தலைவர்), கோரி ஆண்டர்சன், பிரேஸ்வெல், இயான் பட்லர், ஜேம்ஸ் பிராங்க்ளின், மார்டின் கப்டில், ரோனீல் ஹிரா, டாம் லதாம், மிட்சல் மெக்லி னகன், நாதன் மெக்கலம், மில்ஸ், கோலின் முன்ரோ, ஹமிஷ் ரூதர்போர்டு, ராஸ் டெய்லர்.

## ரிக்கி பொண்டிங் ஓய்வு



ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் மற்றும் அதிரடி துடுப்பாட்ட வீரர் ரிக்கி பொண்டிங், சகல கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்தும் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

38 வயதாகும் பொண்டிங், தாம் அனைத்து கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்தும் விலக இதுவே சரியான தருணம் என்று தான் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கெதிரான ஆட்டத்தின் போது, பொண்டிங் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருந்தார்.

இதுவரை ஆஸ்திரேலிய அணி சார்பில் 168 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பொண்டிங் 13, 378 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

அத்துடன் 375 ஒருநாள் போட்டிகளில் 13,704 ஓட்டங்களை விளாசியுள்ளார். ஆஸ்திரேலிய அணி மூன்று உலகக் கிண்ணங்களை சுவீகரிக்க இவர் தனது பங்களிப்பை வழங்கியுள்ளதோடு, அதில் இரு போட்டிகளுக்கு இவர் தலைமை வகித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற)

## டானியல் விற்றோரிக்கு சத்திர சிகிச்சை

நியூஸிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் டானியல் விற்றோரி சந்திர சிகிச்சைக்கு உள்ளாகியுள்ளார். லண்டனில் அவருக்கு இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக தொடர்ச்சியாக உபாதைகளால் அவதிப்பட்டு வந்த டானியல் விற்றோரி, இம்முறை அவரது குதிநாண் உபாதைக்கான சத்திரசிகிச்சையை மேற்கொண்டுள்ளார்.

இங்கிலாந்திற்குச் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்காகச் சென்றிருந்த டானியல் விற்றோரி, 3 போட்டிகளிலும் பங்குபற்றியிருந்த போதிலும், அத்தொடர் முழுவதும் குதிநாண் உபாதை [illegible]ருந்தார். இதன் காரணமாக சத்திர சிகிச்சை மேற்கொண்டதாகக் குறிப்பிட்ட டானியல் விற்றோரி, தனக்கான உபாதை குறைவடைந்து, மீண்டும் சிறந்த உடல் நிலையை அடைந்து, சிறப்பாகப் போட்டிகளில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது எதிர்காலம் குறித்துத் தற்போதைக்கு முடிவெடுத்திருக்கவில்லை எனக் குறிப்பிட்ட டானியல் விற்றோரி, தனது உபாதையிலிருந்து எவ்வாறு குணமடைகிறார் என்பதைப் பொறுத்து, அடுத்த கட்டம் பற்றித் தீர்மானிக்கவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நியூஸிலாந்து அணி சார்பாக 112 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 360 இலக்குகளை கைப்பற்றியுள்ள டானியல் விற்றோரி, 6 டெஸ்ட் சதங்களையும் பெற்றுக் கொண்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.7 லட்சம் பெறுமதியான பொருள்கள் கடந்த வாரம் குடாநாட்டில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூன் 22
யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் நகைகள் உட்பட 7 லட்சத்து 74ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.
நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அதிகளவாக அல்வாய் வடக்குப் பகுதியில் வீட்டில் இருந்து 5 லட்சத்து 60ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், இரண்டு கைத்தொலைபேசிகள், 25 ஆயிரம் ரூபா பணம் என்பன சூறையாடப்பட்டுள்ளன.
நெல்லியடி கூட்டுறவுக் கடையில் 74ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
ஆனைக்கோட்டையில் 5 ஆயிரம் ரூபா பணம், 3ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி என்பன திருடப்பட்டுள்ளன. கோப்பாயில் 9 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்மோட்டர் திருடப்பட்டுள்ளது-என்றார். (த-4)

## 10 மாத சிசுவின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு,ஜூன் 22
மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விபுலானந்தபுரம் கிராமத்திலுள்ள கிணறொன்றிலிருந்து 10 மாதங்களேயான ஆண் குழந்தையொன்றின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.
நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் மீட்கப்பட்டுள்ள இந்தச் சடலம், ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.
குழந்தையை தான் தொட்டிலில் உறங்க வைத்துவிட்டு வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்ததாகவும் பின்னர் பார்த்தபோது தனது குழந்தை காணாமல் போயுள்ளது என்றும் குழந்தையை தேடியபோது வேறொரு வளவிலிருந்த கிணற்றில் அது சடலமாகக் காணப்பட்டதாகவும் குழந்தையின் தாய் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் கூறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பான விசாரணையை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## சிறுமி மீது துஷ்பிரயோகம் சந்தேக நபர் மறியலில்

யாழ்ப்பாணம்,ஜூன் 22
தனியார் கல்வி நிறுவனத்தில் வைத்து நான்கு வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டில் நிறுவனம் இயங்கிய வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
யாழ்.கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய முதியவரே கைது செய்யப்பட்டவராவார்.
அவரது வீட்டில் மனைவி மற்றும் பேரப்பிள்ளைகள் சம்பவ தினத்தன்று நின்றிருந்த வேளை குறித்த நான்கு வயதுச் சிறுமியை அவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.
அன்றைய தினம் குறித்த நிறுவனத்தில் கல்விச் செயற்பாடு இருந்திருக்கவில்லை. சிறுமிக்கு நேர்ந்த அவலம் தொடர்பில் அயலில் உள்ளவர்கள் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினருக்கு அறிவித்ததையடுத்து அவர்கள் வந்து முதியவரைக் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## பன்றிவெடி வெடித்ததில் நேற்று புதுக்குடியிருப்பில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம்,ஜூன் 22
புதுக்குடியிருப்பு பகுதியில் பன்றிக்கு வைக்கும் வெடி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்தார்.
நேற்று வெள்ளிக்கிழமை மாலை புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த எஸ்.நாகராசா (வயது-32) என்பவரே உயிரிழந்தவராவார். இவருடன் சென்ற எஸ்.தம்பிஐயா (வயது-40) என்பவர் படுகாயமடைந்த நிலையில் முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.
நேற்று மாலை பன்றிக்கு வெடிவைப்பதற்காக சுதந்திரபுரம் கடற்கரையூடாக மோட்டார் சைக்கிளில் வெடியை எடுத்துச் சென்ற போது அது தவறுதலாக வெடித்துள்ளது. இதனால் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந் தார். இந்தச் சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-6-400)


# இளைஞர் கைது செய்யப்பட்டார் அவர் கடத்தப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஜூன் 22
சங்குவேலியில் கடந்த வாரம் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட நபரை திருட்டுத் தொடர்பில் விசாரிப்பதற்காகப் பொலிஸரே கைது செய்தனர். விசாரணையின் பின்னர் மறுநாள் அவர் விடுதலை செய்யப்பட்டார் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.
திருட்டுச் சம்பவத்தில் தொடர்புள்ளவராகக் கருதியே ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த கந்தையா ஜெயசுதன் (வயது-28) என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை வெள்ளை வானில் சென்றிருந்த நெல்லியடிப் பொலிஸாரால் மனைவியிடம் தகவல் கூறிய பின்னர் கைது செய்யப்பட்டார்.
மறுநாள் அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அவரது மனைவி மானிப்பாய் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் கணவனைக் கடத்தியதாக தவறான முறைப்பாட்டைச் செய்துள்ளார் என்றார் ஜெப்றி. (த-4)

## ஊடகவியலாளர்கள் 20 பேர் நாட்டிலிருந்து வெளியேற்றம்

கொழும்பு, ஜூன் 22
2008 ஆம் ஆண்டில் இருந்து 2013 ஆம் ஆண்டு வரையில் இலங்கையிலிருந்து 20 ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். அவர்களில் மூவர் நாட்டுக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள்.
பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு (சி.பி.கே) விடுத்துள்ள புதிய அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;
குறித்த காலப்பகுதியில் 26 பத்திரிகையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள். இவர்களில் மூன்று பேர் கடந்த வருட ஜூன் மாதத்துக்கும் இந்த வருடம் மே மாதத்துக்கும் இடையிலும் வெளியேறியவர்களாவர். 2009 ஆம் ஆண்டிலிருந்து பத்திரிகைத் துறை சார்ந்த கொலைகள் குறைந்திருந்தாலும் கடந்த பத்து ஆண்டு காலத்தில் கொலை செய்யப்பட்டுள்ள 9 ஊடகவியலாளர் பற்றிய பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாது மர்மமாகவே இருக்கின்றது.
உலகில் வேறு எந்த நாட்டிலும் காணப்படாத - குற்றம் செய்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படாத ஒரு நிலைமை இங்கு இருப்பதே இதற்குக் காரணம்.
கடந்த வருடம் செய்திகள் கசிவதற்கு எதிராக அரசு மிகக் கடுமையான செயற்பாடுகளில் இறங்கியது. கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் தகவல் உரிமைக்கான சட்ட முன் வரைவு தாக்கல் செய்யப்படவிருந்ததை அரசு தடுத்து நிறுத்தியது. பொது ஆவணங்களின் விவரங்கள் பொதுமக்களின் கைகளுக்கு செல்லுமானால் அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று அதற்கு அரசு காரணம் கூறியது.
கடந்த மார்ச் மாதம் விடுத்த ஓர் அறிவித்தலில் இராணுவம் மற்றும் பொலிஸ் சம்பந்த மான தகவல் அல்லது அறிக்கை அல்லது குறுஞ்செய்தி அனுப்புவதானால் முன் அனுமதி பெற வேண்டும் என்றும் அதிகாரிகள் செய்தி நிறுவனங்களுக்கு அறிவித்தார்கள் - என்றுள்ளது. (த-ப)

## கடந்த வாரம் 44 பேர் கைது



யாழ்ப்பாணம்,ஜூன் 22
யாழ்.குடாநாட்டில் பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 44 பேர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.
நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
மது போதையில் வாகனம் செலுத்திய குற்றசாட்டில் 11 பேரும், கொலைக் குற்றச்சாட்டில் 2 பேரும், திருட்டு மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 12 பேரும், களவு எடுத்த குற்றச்சாட்டில் 7 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 11 பேரும், சட்ட விரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 14 பேரும் கைது செய்யப்பட்டதாக ஜெப்றி மேலும் தெரிவித்தார். (த-4)

## கடும்காற்று கடலில் வீசும்

யாழ்ப்பாணம்,ஜூன் 22
யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை வரையும் மற்றும் மன்னாரிலிருந்து பொத்துவில் ஊடாக காலி வரையான கடற்பிரதேசங்களில் நேற்றுப் பிற்பகல் 1.30 முதல் அடுத்த 24 மணி நேரத்துக்கு மணிக்கு 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும்.
இதேவேளை புத்தளத்திலிருந்து அம்பாந்தோட்டை வரையான கடற்பகுதி மிகமோசமானதாகக் காணப்படும். இதனால் மீனவர்களை அவதானமாக இருக்குமாறு இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (த-5)

## நீதிபதிகளுக்கான கருத்தமர்வு

வடமாகாணத்தில் உள்ள நீதிபதிகளுக்கான கருத்தமர்வு ஒன்று யாழ். நகர விடுதியில் இன்று சனிக்கிழமை - மு.ப 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
சட்ட உதவி ஆணைக்குழு இதனை ஒழுங்கமைத்துள்ளது. கொழும்பிலிருந்து வரும் உயர் அதிகாரிகள் இந்தக் கருத்தமர்வை நடத்தவுள்ளனர். (த-4)

## விபத்தில் ஒருவர் காயம்

சைக்கிள்-டிப்பர் விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் ஐயன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் செல்வபுரம் வவுனிக்குளம் பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சின்னத்துரை (வயது-60) என்பவரே படுகாயமடைந்தார். (த-6-23)

**தேவை**
A9 வீதியில் மீசாலை, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி போன்ற பிரதேசங்களில் வீதிக்கு அருகில் கிணற்றுடன் கூடிய நிலம் 3 வருட குத்தகைக்குத் தேவை (சிமெந்து கல் அரிவதற்கு)
தொடர்புகளுக்கு: 077-3818799 (35275) (10,6,7)

**வேலை வாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான (Education Consulting Service) கல்விசார் கருத்தாடல் சேவைகளை வழங்கிவரும் நிறுவனம் ஒன்றுக்கு Admin Staff தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 0773013060 (சி/10006) (10,6,7)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch - 1 22-06-2013 | Batch - 2 24-06-2013 | Batch - 3 29-06-2013 | Batch - 4 01-07-2013
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyankulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(நக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

**யாழ் நகரில் St.Antony's**
மாபெரும் கணினி மலிவு விற்பனை
✓ HP FULL SET - 24,750/= (1 ½)
✓ DELL NOTEBOOK - 29,750/= (1 ½)
✓ ASSEMBLED PC - 39,750/= (3 ½)
✓ TAP PC Sim - 19,750/= (6 m)
LAPTOPS (HP, LENOVO, TOSHIBA)
✓ I3 - 57,000 (3 y)
✓ I5 - 78,000 (3 y)
✓ DUAL CORE - 54,000 (3 y)
FREE - 4GB Pen Drive / WEB Cam/Bag/ Head Phone
எந்த வகையான கணினியாயினும் உறுதியான உத்தரவாதமும், தரமான சேவையும் வழங்கப்படும்.
எங்கள் சேவை 15ஆவது வருடமாக நீடிப்பதால் உங்கள் அனைவரது ஒத்துழைப்புக்கும் நன்றி.
மேலும் எம்மிடம் KINGSTON, EPSON, HP, DELL, Intel உற்பத்தி பொருள்களையும், சகல விதமான HP Printer Toner வகைகளையும் (மொத்தமாகவும்) பெற்றுக்கொள்ளலாம்.
187, K.K.S. Road, JAFFNA TOWN. 021 222 4865 075 069 8608 (C9942) (10,6,7)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா

சிறப்பு மலர் - 22.06.2013

## உந்தன் அருளினாலேனும் எமது உரிமையை மீட்டிடு

பண்: பழம் பஞ்சுரம் தாளம்: ஆதி

அந்த நாள் முதல் இந்த நாள் வரை
அன்னையே உன்னை நம்பினோம்
தந்தையர் வாழ்ந்த நாடம்மா இதில்
சொந்தமாய் வாழ வையம்மா
புலியும் ஒழிந்ததாம் போரும் ஓய்ந்ததாம்
புதிதாய் ஒன்றையும் கண்டிலோம்
அழிவு அழிந்தே தான் தீருது எங்கள்
அன்னையே எம்மைக் காத்திடு

மனித உரிமையும் சிறுவர் உரிமையும்
மங்கையர்களது உரிமையும்
மிருக உரிமையும் பேணுவீர் என்று
புனிதமாகவே பேசுவார்
எமது மண்ணிலே ஏற்றமாய் வாழ
எண்ணி நாமிங்கு தவிக்கிறோம்
அன்னையே உந்தன் அருளினாலேனும்
எமது உரிமையைத் தா அம்மா

கவிமணி அன்னைதாஸன்
ஊரெழு

## பூஷணியின் அருளோ குறைவதில்லை

மனிதம் என்றும் தோற்பதில்லை
மதத்தில் நம்பிக்கை வைத்தால்;
மானிடம் என்றும் தோற்பதில்லை
மதத்தின் தாற்பரியம் தெரிந்தால்;

கனியும் சுவை குறைவதில்லை
கடவுளின் கிருபை நிறைவதினால்
காணியில் அறுவடை குறைவதில்லை
கடவுளே எனத் தொடங்குவதால்;

சனியும் தீங்கு செய்வதில்லை
சந்நிதிகள் தோறும் வணங்குவதால்;
சாபங்கள் என்றும் தொடர்வதில்லை
சக்தி பீடங்கள் அருள்வதனால்;

புனிதம் நாட்டில் கெடுவதில்லை
பூமாதேவி பொறுமை காப்பதனால்;
பூஷணியின் அருளோ குறைவதில்லை
பேறாகும் திருவிழா சிறப்பதனால்.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா

சிறப்பு மலர் - 22.06.2013

நயினையிலே கோயில் கொண்ட தாயே
என்றும் எங்கள் குறைகளைத் தீர்த்திடுவாய்

கன்னிஹா ஜுவல்ஸ்

இல.99E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4448

Kanniha JEWELS

(C/9732)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
☎ 0215671111
advt@uthayan.com

நாகங்கள் துதித்திட்ட
நயினை நாயகியே காத்திடம்மா

- ★ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்,
- ★ பற்றறி வகைகள்,
- ★ அஸிட் வகைகள்,
- ★ சோலர் வகைகள்

இவை அனைத்தையும் ஓரிடமாகவே
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

அருள் விநாயகர் றேடர்ஸ்

இல. 106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5558

(C/9706)

சாகரம் சூழ மணிபல்லவத்தாளே தேரேறி வந்திடுவாய் நலமுடன் நாம் வாழ

இராஜபுரம்

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்

RAJASWARIE TEXTILE

Dealers in All Kind of silk sarees and salithar

இல.105,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-2226953

No.105, Power House Rd,
Jaffna.
Tel:021-2226953

(C/9727)

தேரேறும் நயினை நாயகிக்கு அரோகரா

Midea Electro Mart

நிறுவனத்தின் உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையைப் பெற்றிட

Abans

(C/9707)

Authorized Dealer for

Tel: 021-2224566 Fax: 021-2221646

NO.1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA. e-mail: midea21@gmail.com

நயினை நாகபூஷணியே உன் தேர் வடம் பிடிக்கின்றோம்
ஆன்ம ஈடேற்றத்துக்கு அருள்புரிவாய்

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியத்துக்கும், விஷேடமாகத்
தயாரிக்கப்பட்டது. சுத்தமான வி.எஸ்.பி.நல்லெண்ணெய்

Special V.S.P. Gingelly Oil

V.S.P நல்லெண்ணெய்

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும் உரிமையாளர்: பொ.பாஸ்கரன்

பரிமளா ஸ்ரோஸ்

இல.26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4135 / 2229165

(C/9708) R/No. 11505

நயினை நாகபூசணி இன்று தேர் ஏறுகிறாள் 'திரு' பொலிந்திடும்

திருமணப் பட்டுப்புடைவைகளுக்கும் நவீனரக ஆடைத்
தெரிவுகளுக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேட்
ஆடைகளுக்கும்

லலிதா ரெக்ஸ்

(கல்யாணப் பட்டுப்புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.5, 6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5260

(C/9705)

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை மற்றும் நவீன காலணி வகைகளை
நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்

நியூ லலிதா ரெக்ஸ்

DSI & சூ பலஸ்

(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)

இல.42, பஜார் வீதி, வவுனியா. T.P: 024 222 1234

வடம்பிடித்திழுத்திடுவோம் வளமாய் வாழ்ந்திட....

பாடசாலை சீருடைகளை பளிச்சிடும் வெண்மையாக்கும்

மில்க் வைற் நீல சோப்

பாவியுங்கள். மேலுறைகளைச் சேகரியுங்கள்

(C/9729)

மில்க் வைற், யாழ்ப்பாணம்.

மானிடம் தேறிட நீ இன்று நயினையில் தேரேறி அருள்வாய்

THAVAM Photo & Albums

(C/9728)

167, Navalar Road, 362, Kasthuriyar Road, Jaffna.

மோட்டார் சைக்கிள்
மோட்டார் வாகனங்கள்
சேர்விஸ§ம் திருத்த
வேலைகளும் செய்து
தரப்படும்.

(C/9776)

தேர்வடம்
பிடித்திடுவோம் நயினையில்

சண் மோட்டோர் அன் சேர்விஸ்

வல்லை வீதி, சங்கானை தொ.பே: 0777174181

புதிய அறிமுகம்

டேவிற் பீரிஸ் மோட்டார்
கம்பனி
லிமிட்டால் விற்பனை
செய்யப்பட்ட
வாகனங்களுக்கு இலவச
சேர்விஸ்
செய்து கொடுக்குமிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா

சிறப்பு மலர் - 22.06.2013

## ஆனந்தக் காட்சி தரும் அம்பிகை நாக பூஷணியே

அலை கடல் நடுவேயிருந்து அருளாட்சி புரியும் தாயே
ஆனந்தக் காட்சி தரும் அம்பிகை நாகபூஷணியே
நிலையில்லா மாந்தர்க்கு நிம்மதியும் நித்திரையும் தந்து
நீலாய தாட்சியாய் அன்ன பூரணியாய் அமுத சுரபியாய்
கலையெல்லாம் வளர்க்கும் நயினையிலே கோயில் கொண்டாய்
கால் பிடித்தோம் எம்மைக் காப்பாற்ற வேண்டும் தாயே
சிலையாக நீயிருந்தால் எம் வாழ்வு சீர் குலைந்து போகாதோ?
ஸ்ரீ நாகபூஷணியே நாகேஸ்வரியே சரணம்! சரணம்!!

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.

நாகபூஷணியே வாராயோ தேரினிலே இன்று வரங்கள் பல நல்கிடவே



**பூரணி** நகை மாடம்

1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 3121 (C/9733)



நயினை நாயகியே நலமருள்வாய்



**சித்திவிநாயகர் களஞ்சியம்**

கயிற்று உற்பத்திப் பொருள்கள், மிதிவகைகள், வர்ணப் பாய் வகைகள், தரமான துடைப்பான் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (C/9720)

66,67, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்

உலகத்து நாயகியே இன்று நயினையில் தேரேறி வருவாய் எமைத் தேற்றிடவே



**தர்சினி அமுதம் வெற்றிலைக் கடை**

கோயிலுக்குத் தேவையான அர்ச்சனைப் பொருள்கள் மற்றும் அபரக்கிரியைப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்:
சி.சிவராசா (C/9719)
இல.89, மேற்கு மாக்கற்,யாழ்ப்பாணம்.

ஆர்.வி.பரமசாமி,
90, மேற்கு மாக்கற்,
யாழ்ப்பாணம்.
T.P.021 222 5733

நயினை நாகபூஷணியின் தேர்வடம் பிடித்திடுவோம்

**இளவரசி** சேலைச் சோலை

ELAVARASI TEXTILE

Specialist in Wedding Sarees

57, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/9722) T.P: 021 222 2503

தாய் போல எம்மை காத்திடும் தாயே... எம் குறைகள் அனைத்தையும் தீர்த்திடுவாய் நீயே.
நயினை நாகபூசணியே நலமருள்வாய்

**அபிராமி சூ சென்ரர்** (C/9721)

ABIRAMI SHOE CENTRE

155, 156 Model Market, Power House Road, Jaffna.021 222 3525

ஆன்ம ஈடேற்றத்துக்குத் தேர்வடம் பிடித்தோம் நயினை நாயகியே நலம் அருள்வாய்.....

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

**செல்வி** நகை அகம்



நம்பிக்கையான நாணயமுள்ள நகைவர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள். (C/9704)

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212229441

நயினையில் இன்று தேரேறி
வந்திடுவாய் தீவினைகள்
அகற்றி நாம் வாழ அருள்வாய்

**ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்**

தரம் மற்றும் நம்பிக்கையில் 100%

Aasaipilai & Son Nagai Maadam (C/9725)

கே.ரி.பிளாசா, பிரதான வீதி, சங்கானை. தொ.பே: 021 321 2399

மணிபல்லவத்தாளே மனமிரங்கிடுவாய்

**செந்தூரன் எலெக்ரிக்கல்** (C/9724)

கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

தேரேறி தீவினை அகற்றிடுவாய் நயினைத் தாயே

**ஆர்.வி.ஜி மருந்தகம்**

ஆங்கில மருந்து வகைகள் ஊட்டச்சத்துக்கள் மற்றும், பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்.

504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D. முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2199

**R.V.G ஸ்தாபனம்**

58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா

சிறப்பு மலர் - 22.06.2013

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
அரசுக்கு எதிராக நேர்மை
☎0215671111
advt@uthayan.com

## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருமணசேவை

"தாய்க்குத் தாயாய் இருப்பவளே வந்திடம்மா உந்தன் அருளை"

மிகவும் துல்லியமான கணிப்பீட்டின் மூலம் தகுந்த மணமக்களை தெரிவு செய்ய நாடவேண்டிய தாபனம் (சர்வதேச இணைப்பு கொண்டது)

தொடர்பு: 077-9184646
077-6849017 077-1345380
077-9590442
Fax: 021 2230049

திருநிறைவாளன்
மாதாஜி லிங்கேஸ்வர ஆலய அருகில்,
கைதடி கிழக்கு, கைதடி.
E-mail: kaithadycom@gmail.com

கடல் நடுவே வீற்றிருக்கும் தாயே உந்தன் பாதம் பணிகின்றோம்.

## American

Just drink it!

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
மொத்த கொள்வனவுக்கு வாகன வசதி உண்டு.

57/47, களஞ்சிய அறை,
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3096,
021 222 7286

## Nagaratnam & Co.

Cycles, Cycle Parts & Electrical Goods.
இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/9731)(10.6.3)

நயினை நாகபூசணிக்கு அரோகரா

HOTEL ROLEX

சகல பிரியாணிகள் (சைவ, அசைவம்), குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் (றோல்ஸ், வடை, கட்லட், சமோசா) என்பவற்றை சுவையாக உண்டு மகிழ

## ஹொட்டல் றொலெக்ஸ்

ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2808
360, காலி வீதி, கொழும்பு-06
தொ.பே: 011 2360462

நாகபூசணிக்கு இன்று நாமங்கள் பல கோடி

## வேல்முருகன் வணிக நிலையம்

ROBBIALAC

இலங்கையில் அதிகமாக விற்பனை மற்றும் எரிபொருள் சிக்கனம் கொண்ட சகல வர்ண பெயின்ட் வகைகள், கட்டடப் பொருள்கள், சுண்ணாம்புப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இல.56 A(378), இல.295 (21), மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். R.Thinesh (Manager): 0774489932
(C 8506)(10.6.7)

நாகபூசணியே இன்று தேரேறி வருவாய் தீவினை களைவாய்

## கஜசங்கவி சென்ரர் & பிறிண்டேர்ஸ்
## Kajasankavi Center & Printers

எம்மிடம் சகலவிதமான திருமண அழைப்பிதழ்கள், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், கேக் பெட்டிகள், அன்பளிப்புப் பொருள்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

இல. 237, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
No:237, K.K.S. Road, Jaffna. ☎ 021 222 7885, 077 603 1071

நயினை தாயே நலமருள்வாய்

அழகிற்கு அழகு சேர்க்கும் 22 கரட் தங்க வைர நகைகள் உறுதியுடனும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள

## சிறி நதியா
## நகை மாளிகை
&
## டிஜிற்றல் கலர் லாப்

Shree Nathiya
Nagai Maligai & Digital Colour Lab

நயினை நாகபூசணியில் வடம் பிடிப்போமாக

## சாரங்கா நாணயமாற்று சேவை

Sharanga Money Exchange (Pvt) LTD.
(Permit No: Eod/In/Aut/Mc/164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6972

நவீன அழகிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

## சாரங்கா நகைமாடம்

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, Fax.No: 222 8869

இணை நிறுவனம்:

## சாரங்கன் நகையகம்

இல.1, புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்
(C/9716)(10.6.3)

நயினாதீவில் நீ வீற்றிருந்தாலும்
இன்று நானா திசையிலும் உன் புகழ்

கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்

## பட்டாபி படமாடம்

அலுமினியம் பிற்றிங் மற்றும் அனைத்து அளவிலான படம் பிறேம் போடுதல் மற்றும் பல சேவைகளை எம்மிடம் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## தேவி என்ரபிறைசஸ்
## DEVI ENTERPRISES

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஊதுபத்திகள், சாம்பிராணிகள், கற்பூரம் என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

மணிபல்லவத்தாயே
நலமருள்வாய்

Darshan
Shanthi 2 in 1
INCENSE STICKS
ENTERPRISES

No.168, K.K.S. Road,
Jaffna.
T.P: 021 222 8352 /
077 5927285.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org